# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1981 ★ இதழ் - 65

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

### 75ஆம் ஆண்டு நிறைவு

## பவளவிழாச் சிறப்பிதழ்



வெளியிடுவோர்:
மில்க்வைற் தொழிலதிபர், சிவநெறிப்புரவலர், சிவதர்ம வள்ளல்,
திருக்குறட் காவலர், சமாதான நீதவான்

க. [illegible]ராசா அவர்கள்

[illegible], யாழ்ப்பாணம்.

[illegible] - 81

உ
சிவமயம்



## சைவ சித்தாந்த சமாஜம்

# 75-ஆம் ஆண்டு நிறைந்த பவள விழா

"இலங்கா புரியிருக்கும்
யாழ்ப்பாண ராச்சியத்தில்
துலங்குமெண் ணுல்பதிக்கும்
துங்கமுடி போலுயர்ந்த
வல்லிக் கிராமமத்தில்
வளர்ந்த திருநகராம்
தெல்லிக் கிராமமெனும்
சீர்சிறந்த பேரூரில்"

இவ்வாறு 334 ஆண்டுகளுக்கு முன்பு புகழ்பூத்திருந்த தெல்லிப்பழைத் திருநகரிலே சைவசித்தாந்த சமாஜத்தின் எழுபத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட வருகின்ற சைவத் தமிழன்பர் யாவரையும் வணக்கம் வாருங்கள் என்று சிரந்தாழ்த்திக் கரங்கூப்பி வரவேற்கின்ரேம். தங்களுக்கும் எங்களுக்கும் உண்டான சம்பந்தம் பழைய சம்பந்தம். அது சிவசம்பந்தம், தமிழ்ச்சம்பந்தம், இராமாயண சம்பந்தமுமாம். எங்கள் இருநாடுகளின் கதையே உலகில் ஆதிகாவியம் எனப் போற்றப்பெறுவது. உங்கள் மூதாதையர் பலரும் எங்கள் மூதாதையர் பலரும் கொண்டும் கொடுத்தும் இருநாடுகளையும் இணைக்கும் உயிர்ப்பாலமாக இருந்தனர். நாமும் நம்வழி வருவோரும் இனிவருங்காலத்திலும் உயிர்ப்பாலமாய் வாழ்வோம்! வளம் பெறுவோம்! வாருங்கள் வணக்கம்.

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருநாகேச்சரம் — திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

நல்லர் நல்லதோர் நாகங்கொண் டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஏடுகை யேந்திப் பலிதிரி
செல்வர் போல்திரு நாகேச் சரவரே.

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் நல்லவர். அவர் நல்லதொரு நாகத்தைத் தமது திருக் கரத்திலேந்தி ஆடச் செய்பவர். வலிய பழவினைகளால் நமக்கு வருகின்ற நோய்களைத் தீர்க்கவல்ல மருந்துகளை அளிக்கவல்லவர். பல்லில்லாத கபாலத்தை ஏந்திப் பலிக்குத் திரிந்தருள் செய்கின்றவர். உலகமெல்லாம் தமதாகக் கொண்ட பெருஞ்செல்வர்.

## திருநாகேச்சரம் அமர்ந்தவர்

திருநாகேச்சரத்து இறைவன் நாவலந்தீவு என்னும் ஜம்புத் தீபத்தினர். தாமேவிரும்பிவந்து ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கி அருள்புரிபவர். திருப்பாற் கடலில் எழுந்த ஆலகாலவிடத்தை உண்டருள்புரிந்தவர். பிரம விட்டுணு முதலாய தேவர்களுக்கெல்லாம் பழமையானவர். உமாதேவியாரைப் பாகத்திற்கொண்டு மழுவாயுதந் தாங்கியவர். சந்திர சூரியர் வந்து வழிபாடாற்றப் பெற்றவர். ஐந்துதலை நாகத்தின் வழிபாட்டினையும் ஏற்றருள் புரிந்தவர். முன்னாளில் தக்கன் செய்த பெருவேள்வியைத் தகர்த்தவர். பிரமதேவனின் அகந்தையைப் போக்க ஒரு தலையினைக் கொய்தருள்புரிந்தவர். உமாதேவியார் கண்டு நடுங்கும் வண்ணம் வந்த யானையின் தோலை எளிதாக உரித்துப் போர்த்தவர். பொன்போலும் கொன்றை மாலையை அணிந்தவர். மானை ஏந்திய திருக்கரத்தர். ஒளிவடிவானவர். தமது திருநாமமாய திருவைந்தெழுத்தை ஓதிய அன்பர்களுக்கு விரைவில் வந்தருள் புரிபவர், இனியவர். திருவடியிற் கழலணிந்தவர். இயமனை உதைத்தருள் புரிந்தவர். திருவெண்ணீறு சண்ணித்தவர். ஆலமர நிழலிலமர்ந்து அறிஞர்களுக்கு உபதேசஞ் செய்தருளியவர். முன்னர் முப்புரத்தவர்களின் மதில்களை அழித்தவர். அவர்களுக்கு அருள் செய்தவர், வெப்பு நோயாளரின் நோயைத் தீர்த்துக் குளிர் செய்தவர். இராவணனின் முடியுந் தோளும் வலிகெடுமாறு ஒருவிரலால் ஊன்றியவர். உலகத்தவர் வினைகெடுமாறு வந்து தோயும் தீர்த்தவடிவான பேரருளாளர்.




## நல்குரவு

நுகரத்தக்க பொருள்கள் இல்லாமை

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

நன்னெறி ஒழுகாமையால் உண்டான வறுமையை உடையவன், தன்னைப் பெற்ற தாயாராலும் கூட அயலான் போலக் கருதப்படுவான்.

### POVERTY

Poverty which does not fit in with righteousness causes a man to be regarded as a stranger even by the mother who bore him.

## மே மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளி | — | பிரதோஷ விரதம், மே தினம் |
| 3. | ஞாயிறு | — | அமாவாசை விரதம் |
| 5. | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் |
| 7. | வியாழன் | — | அக்கினி நாள் ஆரம்பம் |
| 9. | சனி | — | திருக்கேதீஸ்வரம் கொடி |
| 14. | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 15. | வெள்ளி | — | வன்னிவிளாங்குளம் பொங்கல் |
| 16. | சனி | — | பிரதோஷ விரதம் |
| 17. | ஞாயிறு | — | திருக்கேதீஸ்வரம் தேர் |
| 18. | திங்கள் | — | சித்திரா பூரணை விரதம் திருக்கேதீஸ்வரம் தீர்த்தம் |
| 21. | வியாழன் | — | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை |
| 24. | ஞாயிறு | — | வண். வீரமாகாளி கொடி |
| 26. | செவ்வாய் | — | இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கொடி |
| 28. | வியாழன் | — | அக்கினி நாள் முடிவு |
| 29. | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| | | | நல்லூர் சங்காபிஷேகம், தண்டிகை |
| 30. | சனி | ... | ஏகாதசி விரதம் |
| 31. | ஞாயிறு | ... | பிரதோஷ விரதம் |

★ சுயநலத்தை விட்டுக்கொடுப் [illegible] நாளுகிறுன் ★

உ
சிவமயம்

# பவளம் மலிந்த திருமுறைப் பாசுரங்கள்

திருச்சிற்றம்பலம்

பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ணம் உறையுந் திருப்புன்கூர்
அழகர் என்னும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே.

பவள மேனியர் திகழு நீற்றினர்
பட்டினத்துறை பல்லவ னீச்சரத்
தழக ராயிருப் பாரிவர் தன்மை
அறிவாரார்.

பவளத் தடவரை போலுந்திண்
தோள்கள்அத் தோள்மிசையே
பவளக் குழைதழைத் தாலொக்கும்
பல்சடை அச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக
நாகம்அந் நாகத்தொடும்
பவளக் கண்வால மதியெந்தை
சூடும் பனிமலரே.

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகழுந் திரைவாய் ஒற்றி யூரே.

திருச்சிற்றம்பலம்

## பவளம் மலிந்த புராணம்

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றவளமா துடனின் றுடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

அகிம்சையில் நம்பிக்கை வையாத ஒருவன், எவ்வண்ணம் சத்தியத்தில் நம்பிக்கை வைக்க முடியும்? அகிம்சையைச் சாதிக்க முடியாதாயின், சத்தியத்தையும் சாதிக்க முடியாது.

— மகாத்மாகாந்தி

## விளக்கேற்றிப் பழகுவோம்

வீடுவிளங்க மங்கல விளக்கேற்றுவோம், கன்னிப்பெண்களும் மங்கலப் பெண்களும் மனைவிளக்கேற்றி திருவிளக்குப்பாடல், இலக்குமி தோத்திரம் பாடி வணங்குதல் வீட்டை விளங்கவைக்கும். பசுநெய், எருமைநெய் வார்த்து விளக்கெரித்த காலம் போய்விட்டது. நெய் விலையேறிவிட்டது. இலுப்பெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், கடலைஎண்ணெய், தேங்காய் எண்ணெய் முதலியவற்றில் இலுப்பெண்ணெய் நல்ல ஒளியைக் கொடுக்கும்.

## பனையோலை விசிறியைப் பயன்படுத்துவோம்

மின்சார விசிறி வேலைசெய்யாத வேளைகளில் வேதனையைப்போக்கப் பனையோலை விசிறியைப் பயன்படுத்துவோம். பன்னவேலை செய்யும் ஏழைகளுக்குப் பணஞ் சேரட்டும். எமக்கும் நலமுண்டாகட்டும். நுண்ணிடை வாய்ந்த பெண்ணே கேட்பாயாக, பனையோலை விசிறியினால் வாதநோய்கள், கபநோய்கள், பித்தநோய்கள், அரோசகம் ஆகிய பிணிகள் நீங்கும்.

பனைவிசிறி தன்னாற் படுத்ததொரு வாதம்
வினையைய நோயும் விலகும் — கனபித்த
நோயும் அருசியென்ற நோயுங் குடியேகுந்
தேயுமிடை மாதே தெளி.

## வேப்பமிலை

வேப்பமிலையின் மருத்துவப்பயன்கள் மிகப்பல. சிரங்கு வந்தால் வேப்பிலையும் வெங்காயமும் அரைத்துப் பூசி வெந்நீரில் நீராடவும். நித்திரை வேண்டின் வேப்பிலைச் சாறு சிலதுளி எலுமிச்சம் பழச்சாறு சிலதுளி நீரிற்கலந்து பருகிப்படுத்தால் நல்லநித்திரை வரும். வயிற்றுவலி நீங்க வேப்பிலையும் சீரகமும் அரைத்து வெறுவயிற்றில் விழுங்கினால் குணமாகும்.

மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீலசோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

மில்க்வைற் த. பெ. இல 77, யாழ்ப்பாணம்.

★ என்னைவிட [illegible] ஏமாற்றுபவர் எவருமிலர் ★

# சைவசித்தாந்த சமாஜம் • பவளவிழாச் சிறப்பு

## பெருமகிழ்ச்சி

சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் தங்கள் சமாஜத்தின் ஆண்டு விழாக்களைக் காலந்தோறும் சைவமும் தமிழும் வழங்கும் பிரதேசங்கள் தோறும் கோலாகலமாக நடத்திவருகின்ற வழமையில் எழுபத்தைந்தாம் ஆண்டு விழாவான பவள விழாவினை எங்கள் ஈழவள நாட்டின் வடபாலமைந்த பழம்பெரும் மூதூரான தெல்லிப்பழையில் அருள்மிகு துர்க்கையம்பாள் ஆலய வீதியில் கூடிக்கொண்டாடுவது கண்டு பெருமகிழ்ச்சி அடைந்து, இதனைச் சிறப்பு இதழாக வெளியிட்டு அமைகின்றோம்.

## சமாஜத்திற்கும் நமக்கும் உள்ள சம்பந்தம்

சைவசித்தாந்த சமாஜத்திற்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் மிகப் பழைய சம்பந்தம். ஞானியார் சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகமெய்ஞ்ஞான சுவாமிகளின் திருக்கோவலூர் எமக்கு மிகவும் நெருங்கிய இடமாகும். நாநூற்றுமுப்பதாண்டுகளுக்கு முன்னர் நமது நல்லூர்ச் சிங்கையாரிய சக்கரவர்த்திகளிலொருவனுகிய கனகசூரியன் பகையரசனுக்கு அஞ்சிப் புகலிடம் பெற்றது திருக்கோவலூரிலேயாகும். அங்கே பதினேழாண்டுக் காலந் தங்கியிருந்த அவனும் அவன் மைந்தர் செகராச சேகரன், பரராசசேகரன் ஆகியோரும் படைக்கலப் பயிற்சி பெற்றதும், தெய்வத் திருவுருவங்கள் பலவற்றைக் கருங்கல்லில் செய்வித்துக்கொண்டு வீரபுருடராய் மீண்டதும் அங்கிருந்தேயாகும். திருக்கோவலூர் ஆதீனத்து மடத்தில் சைவசித்தாந்த சமாஜம் ஆரம்பிக்கப் பெற்றமை எமக்கும் சம்பத்தாயிற்று.

## பொன்னம்பலம் இராமநாதன்

சைவ சித்தாந்த சமாஜத்தார் தங்கள் முதலாண்டு விழாவினைச் சிதம்பரத்திற் கொண்டாடியபோது தலைமை தாங்கியவர் ஈழத்திரு நாட்டின் இணையில்லாத் தலைவரும் வள்ளலுமாய சேர். இராமநாதன் அவர்களாவர். சைவ சமயத்தவரின் சிவராஜதானியாய சிதம்பரத்தின் பெருமையை ஈழத்தவர் நன்கறிந்து நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். முந்நூறாண்டுகளுக்கு முன் நல்லூர் ஞானப்பிரகாசத் தம்பிரான் அங்கே தம் பெயரால் திருக்குளமும் திருமடமும் அமைத்தவர்.

ஞானப்பிரகாசத் தம்பிரான் வழியில்வந்த ஆறுமுக நாவலர் நூறாண்டுகளுக்குமுன்னர் அங்கே சைவப்பிரகாச வித்தியாசாலையும் வித்தியானுபாலன அச்சியந்திரசாலையும் அமைத்துத் தமிழ்ப்பணியும் சைவப்பணியும் முட்டின்றிச் செய்த முன்னோடியாவர். விடிவெள்ளிபோல் ஆறுமுக நாவலர் ஒளிவிடச்செய்த வித்தியாசாலைக்குப்பின் உதய சூரியன்போல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அங்கே உதயமாயிற்று. ஆயகலைகள் அத்தனைக்கும் ஆடும் பெருமான் திருவருள் அங்கே உண்டு.

சைவசமயத்தவரின் இராசதானியெனவும் இருதயஸ்தானமெனவும் நிலவும் சிதம்பரத்தில் திருவாதிரைத் திருநாளில் ஆதிரையான் திருவருட் பிரவாகத்தில் நடைபெற்ற பெருவிழாவுக்குத் தமிழ் நாட்டிலிருந்தும் ஈழநாட்டிலிருந்தும் சைவத் தமிழறிஞர் சென்றிருந்தனர்.

சிதம்பரத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்த ஈழ நாட்டவர் பலர் அங்கே தங்கள் தொண்டினைப் பன்முகமாகச் செய்திருந்தனர். ஆறுமுகநாவலர் வழியில் அவர் மாணவர்களாய சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர் பொன்னம்பலபிள்ளை முதலானோரும், மாணவர்க்கு மாணாக்கரான சுவாமிநாத பண்டிதர், கதிரைவேற்பிள்ளை, விபுலானந்தர் முதலானோரும் அங்கே பணியாற்றித் தொடர்பு பூண்டிருந்தனர்.

## அம்பலவாணர் கனகசபை

தெல்லிப்பழையைச் சேர்ந்த சேர். அம்பலவாணர் கனகசபை இலங்கைச் சட்டசபையில் அங்கத்தவராய் இருந்து அளப்பரிய சேவை செய்ததோடு செந்தமிழபிமானமும் சைவாசாரசீலமும் உள்ளவராய் வாழ்ந்தவர். இவர் திருச்சிராப்பள்ளியில் 1909ஆம் ஆண்டில் நடைபெற்ற சமாஜத்தின் நான்காம் ஆண்டுவிழாவில் தலைமை தாங்கியவர். நியாயதுரந்தரராகத் தொழில் நடத்திய இவர், சிலகாலம் மாவட்ட நீதிபதியாயும் கடமையாற்றியவர். இவர் காலத்தில் யாழ்ப்பாணப் பெரியவர்கள் பலர் சேர்ந்து நடத்திய யாழ்ப்பாணச் சங்கம் என்னும் நிறுவனத்தின் முதற் பெருந் தலைவராயிருந்தவர் இவரேயாவர். இவரின் உறவினர் சிலர் காவிரிப்பூம்பட்டணத்தில் வாழ்ந்து சைவத்தொண்டு செய்தவர்களாவர்.

## தா. பொன்னம்பலபிள்ளை

யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையின் ஆரம்ப அங்கத்தவர்களுள் ஒருவரும், இந்துசாதனப் பத்திராதிபர்களில் முன்னோடியும், நாவலர் அவர்களின் முயற்சியைக் கொண்டு நடத்த முற்பட்டவர்களுள் ஒருவருமான தா. செல்லப்பாபிள்ளை அவர்கள் சிலகாலம் திருவனந்தபுரத்தின் பிரதம நீதியரசராயிருந்தவர். அன்னாரின் சகோதரர் பொன்னம்பலபிள்ளை அவர்கள் தமது சகோதரரோடு சென்று மதுபரிபாலனப்பகுதியில் மேலுத்தியோகம் வகித்த பின் ஓய்வுபெற்றுத் தமிழ்நாட்டில் சிவசைலம் என்னும் இடத்தில் சைவவாழ்வு வாழ்ந்தவர். தமிழர் வரலாற்றுயவிலும் சைவசமயப் பெருமையைப் பரப்புவதிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தவர். இவர் தமது ஆராய்ச்சி அறிவினை வஞ்சிமாநகர் என்னும் நூலிற் காணலாம். இவர்

காலத்தில் வெளிவந்த Tamilian Antiquary தமிழரின் தொன்மை என்னும் சஞ்சிகையில் இவர் தரமான கட்டுரைகள் எழுதிவந்தார். தனித்தமிழ்ப் பிரியரான இவர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்களின் நண்பருமாவர். இத்தகைய புகழ்பூத்த பொன்னம்பலபிள்ளை அவர்கள், கல்வி கரையிலாக் காஞ்சி மாநகரில் 1912ஆம் ஆண்டில் நடைபெற்ற ஏழாம் ஆண்டு விழாவில் தலைமை தாங்கினுர். இதன்பின் சமாஜத்தில் வியாபகம் பரந்து அங்கத்தவர் தொகையும் அதிகரித்தது என்பர்.

தா. பொன்னம்பலபிள்ளை பெரிய உத்தியோகம் பார்த்த காலத்திலும் ஒய்வு பெற்றிருந்த காலத்திலும் தமிழ், சைவம் என்றே மூச்சுவிட்டுக்கொண்டிருந்தவர். இற்றைக்கு எழுபதாண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் புகழ் பெற்று நிலவிய பாளயங்கோட்டைச் சைவசபையின் தலைவராயிருந்து பல விழாக்களை ஒழுங்குசெய்ததோடு திருவிடமும் சைவமும் என்னும் பொருள்பற்றி அருமையாக ஆராய்ந்து பேசியவர். இன்று தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்வோர் பேசும் மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளமையை அன்றே ஆராய்ந்து கண்டு கூறியவர். பெரியவர்களான எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை, ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை, ஈஸ்வரமூர்த்திப்பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மு. இராகவையங்கார் முதலானேருடன் நட்புப் பூண்டொழுகியவர்.

## அம்பலவாண நாவலர்

தமிழ்மணக்கும் தஞ்சாவூரில் கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலான மன்றங்கள் உள்ளன. உமா மகேஸ்வரம்பிள்ளை முதலான தமிழ்ப் பெரியார்கள் அங்கே பணிபுரிந்தவர்கள். 'தமிழ்ப் பொழில்' என்னும் திங்கள் ஏடு திக்கெல்லாம் தீந்தமிழ்ச்சுவை பரப்பியது. இத்தகைய தஞ்சையிலே பெரிய கோயில் எனப்பெறு பிரகதீஸ்வரர் ஆலயமும் உள்ளது. மறைந்துபோன தேவாரத் திருமுறைகளை மீட்டுக்கொண்டுவந்த இராசராசன் செங்கோல் நடத்திய புனித பூமி தஞ்சை.

தஞ்சாவூரில் சைவசித்தாந்த சமாஜத்தார் தங்கள் பத்தாம் ஆண்டு விழாவை 1915ஆம் ஆண்டிற் கொண்டாடியபோது தலைமைதாங்கியவர் ஆறுமுகநாவலர் அவர்களின் மாணக்கரும் தாமே நாவலர்ப் பட்டம் பெற்றவருமான அம்பலவாண நாவலராவர். இவர் யாழ்ப்பாணத்துச் சித்தன்கேணியைச் சேர்ந்தவர். வட்டுகோட்டை இந்துக்கல்லூரியைத் தாபித்தவர். ஆறுமுகநாவலரைச் சற்குரு எனப் போற்றிச் சற்குரு மணிமாலை பாடியவர். உமாபதி சிவாசாரியர் வடமொழியிற்செய்த பௌஸ்கராகம விருத்தி என்னும் நூலை ஏட்டிலிருந்து அச்சிலேற்றியவர். பாலப பருவத்திலேயே ஆறுமுகநாவலரவர்களின் பாராட்டைப் பெற்ற பேச்சாளர்.

## சபாரத்தின முதலியார்

திருமயிலாப்பூர் திருவள்ளுவரால் பெயர்பெற்றதோடு திருஞானசப்பந்தமூர்த்தி நாயனரின் அற்புதத் தேவாரம் பெற்ற திருத்தலமுமாகும். ஆறுமுகநாவலரவர்களின் மாணக்கரின் மாணக்கர் மேலைப்புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை தமிழ்த்தொண்டும் சைவத் தொண்டும் புரிந்த இடங்களிலொன்று.

சைவசித்தாந்த சமாஜத்தார் தங்கள் பதினேராம ஆண்டு விழாவினை 1916ஆம் ஆண்டில் மயிலாப்பூரில் கொண்டாடியபோது தலைமைதாங்கியவர் கொக்குவில் சபாரத்தின முதலியாராவர். இவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் மேலுத்தியோகம் வகித்தகாலத்திலேயே சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரவர்களிடம் தமிழ் விடாய் தீர்த்துக் கொண்டவர். சித்தாந்தத்துறையில் பெரிதும் ஈடுபட்டிருந்த இவர் ஆங்கிலத்தில் அதனை அருமையாக எழுதி வெளியிட்டவர். தமது ஊரில் இந்து வாலிபர் சங்கம் அமைத்துத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் வரலாற்றை ஆராய்ச்சிக் கண்ணோடு ஆங்கிலத்தில் எழுதியதை 1920ஆம் ஆண்டில் சென்னை ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

## சுவாமிநாத பண்டிதர்

தமிழ்நாட்டில் கும்பகோணமும் மாயவரம் என்னும் மயூரமும் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கும் திருத்தலங்களாகும். கும்பகோணத்தில் பழையகாலத்திலே முருகேசபண்டிதர், ஹென்ஸ்மன் முதலான யாழ்ப்பாணத்தவர் கல்வித்தொண்டு புரிந்துள்ளார்கள். சமாஜத்தார் தங்கள் பதின்மூன்றும் ஆண்டுவிழாவை 1918ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் கொண்டாடியபோதும், பின்னர் பதினைந்தாம் ஆண்டுவிழாவை 1920ஆம் ஆண்டில் மாயூரத்திற் கொண்டாடியபோதும் தலைமைதாங்கியவர் கந்தமடத்துச் சுவாமிநாத பண்டிதராவர்.

ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணக்கருமான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்ற இவரின் இயற்பெயர் சின்னத்தம்பி தம்பையா என்பதாகும். தம்பையா உபாத்தியாயர் என வழங்கிய இவர், கந்தமடம் வை. சி. சிவகுருநாதன் அவர்கள் மனையில் வித்துவசிரோமணி தமிழ்ப்புலமை நடாத்திய காலத்தில் பணிவன்போடு பழகிப் படித்துப் பெரும்புலவராயினுர்.

எத்தனையாயிரவர் கூடியிருந்த பெருங்கூட்டத்திலும் உரத்துப்பேசும் இவர் வேதசிவாகமங்களிலும் தேவாரம் முதலாய திருமுறைகளிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் பெரும் பற்றும் அற்புத ஆற்றலும்வாய்ந்தவர். வேதசிவாகமங்களை விரும்பாத கூட்டத்தாரைத் தூரத்தே கண்டாலும் துரோகிகள் என்று கூச்சலிட்டு வாதுபுரிந்து அவர்களின் வாயையடக்கும் வல்லபம் வாய்ந்தவர்.

சுவாமிநாத பண்டிதர் அவர்களும் வடகோப்பாய் சபாபதி நாவலர் அவர்களும் உற்ற நண்பர்களாய் இருந்தமையால், சபாபதி நாவலரவர்கள் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானத்தின் அன்பருளுக்குப் பாத்திரராகி அவர்தம் அணுக்கத் தொண்டராய் அரிய ஏடுகளைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்த காலத்தில், சுவாமிநாத பண்டிதர் அவர்கள் அங்குச்சென்று சிவஞானமாபாடியத்தை எளிதில் பெற்றுவரக் கூடியவராயிருந்தார்.

தேவாரப் பதிகங்களைத் தலவரிசை தவறாது ஒழுங்கு செய்து பிழையறப்பதித்த பெருமையும் சுவாமிநாத பண்டிதருக்கு உண்டு. அவர் பதித்த அடங்கன் முறைபோன்ற

அரியதொரு பதிப்பைச் சைவவுலகம் அவாவி நிற்கின்றது. தலங்கள் தோறுஞ் சென்று சைவம் பரப்புவதற்காகத் தொண்டைகிழியப் பேசிய சுவாமிநாத பண்டிதர் தமிழ் நாட்டில் அச்சகம் நிறுவியும் பாடசாலைகள் நிறுவியும் சைவப்பணி புரிந்தவராவர். இவர் 1934-ஆம் ஆண்டில் மறைந்தபோது பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் இளமை மிடுக்குடன் பாடிய கையறுநிலை முந்நூறுக்கும் அதிகமான அடிகளைக்கொண்டதாகும்.

''சொன்னர்க ளந்தோ சுவாமிநா தப்பெரியோன்
மன்னுன பண்டிதன் மாண்டானும் — என்னேதான்
இந்துமுடித் தான்சமய மென்படுமோ என்படுமோ
செந்தமிழு மென்படுமோ தேர்.''

## பொன்னம்பலம் இராமநாதன்

முன்னர் சிதம்பரத்தில் முதலாண்டு விழாவில் தலைமை தாங்கிய சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் மீண்டும் பதினேழாம் ஆண்டுவிழாவில் 1922ஆம் ஆண்டில் சென்னையில் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள்.

## சுவாமி விபுலானந்த அடிகளார்

ஈழநாட்டின் கிழக்குமாகாணம் ஈன்றெடுத்த விபுலானந்த அடிகளாரின் பூர்வாசிரமத் திருநாமம் மயில்வாகனம் என்ப. பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராய், லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாய், மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதப் பட்டம்பெற்ற முதல் இலங்கையராய், அண்ணமலை, பேராதனை ஆகிய இருபெரும் பல்கலைக்கழகங்களின் முதற்றமிழ்ப் பேராசிரியராய், மதங்கசூளாமணி, யாழ் நூல் என்னும் இருபெரும் நூல்களின் ஆசிரியராய், ஐந்நூறுக்கும் அதிகமான கட்டுரையாசிரியராய், இராமகிருஷ்ண விஜயம், வேதாந்தகேசரி, பிரபுத்தபாரதம், செந்தமிழ் முதலிய சஞ்சிகைகளில் தம் கைவரிசை காட்டியவராய், யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியராய், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராய் இருந்த இவர் இராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்து துறவுபூண்டு பிரமசாரி பிரபோதசைதன்யராய், விபுலானந்த அடிகளாரானவர். தமது பிறந்தகத்தில் ஆதரவற்றவர்களுக்கு அன்புக்கரம் நீட்டும் இல்லமும், அறிவுக்கண் திறக்கும் கல்லூரியும் அமைத்தவர்.

இத்தகைய பெருமைவாய்ந்த விபுலானந்த அடிகளார் சைவசித்தாந்த சமாஜத்தார் அப்புத்தலம் எனநிலவும் திருவண்ணமலையில் 1935-ஆம் ஆண்டில் நிகழ்த்திய முப்பதாம் ஆண்டு விழாவில் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். அருள்ஞானம் என்னும் அரிய விடயம்பற்றி அடிகளார் பேசியவற்றை அன்பர்கள் பலர் இன்றும் நினைவுகூருகிறுர்கள்.

## ஈழத்தில் சமாஜ ஆண்டுவிழா

நாற்பத்திரண்டு ஆண்டுகளாக நம்மவர் மத்தியில் பழகிய சைவசித்தாந்த சமாஜத்தார் முதன்முறையாகத் தங்கள் ஆண்டுவிழாவினை ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் நடாத்த முற்பட்டுத் தங்கள் நாற்பத்து மூன்றும் ஆண்டுவிழாவை இங்கே கொண்டாட 1948ஆம் ஆண்டில் இங்கே வந்தார்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விளையாட்டுமைதானத்தில் முன்னர் அமைந்திருந்த பாடசாலை மண்டபத்தில் பல்லாயிரவர் பயனடைய நடந்த சைவப்பெருவிழாவுக்குத் தலைமை தாங்கியவர் ம. பாலசுப்பிரமணிய முதலியாராவர். அடுத்து நிகழ்ந்த மாதர் மகாநாட்டை அலங்கரித்தவர் திருவாட்டி சிவகாமி அம்மையாராவர். மூன்றும்நாள் நடைபெற்ற இளைஞர் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர், முதுமாணிப்பட்டதாரியாய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களாவர்.

## கொழும்பில் நடைபெற்ற விழா

கொழும்பு இலங்கையின் தலைநகரம் என்பதோடு களனிகங்கை கடலொடு கலக்கும் சங்கமமும், அருணுசலேஸ்வரர் ஆலயமும், பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமும் உள்ள பூமி. மெய்ஞ்ஞானிகள் பலரின் திருவடி தீண்டப்பெற்ற கொழும்பு மாநகரில் சங்கமங்களுக்குக் குறைவேயில்லை. இராமகிருஷ்ண பரமஹம்சர் பெயராலும் விவேகானந்த அடிகள் பெயராலும் சங்கங்கள் இங்கே பன்முகப்பணிகள் புரிகின்றன. ஈழத்துச் சித்தர்கள் சிலரின் அடக்கங்களும் இப்பிரதேசத்தில் உண்டு.

சைவசித்தாந்த சமாஜத்தார் தங்கள் நாற்பத்துநான்காம் ஆண்டுவிழாவினை 1950ம் ஆண்டில் விவேகானந்த சபையினரின் மண்டபத்தில் கோலாகலமாகக் கொண்டாடினுர்கள். பன்மொழிப்புலவர் உபவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும், இலங்கை அரசின் நிரந்தரக் காரியதரிசிகளில் ஒருவரும் அறிஞருமாய கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களும் திரு பத்மாசனி அம்மையார் அவர்களும் மூன்றுநாள் விழாக்களுக்கும் முறையே தலைமைதாங்கினுர்கள்.

## வேலுப்பிள்ளை நாகலிங்கம்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை கல்விகேள்விகளில் சிறந்த ஊர். அயலில் சித்தன்கேணி, சங்குவேலி, நவாலி ஆகிய ஊர்கள் தலைசிறந்த அறிஞர்களை உபகரித்துள்ளன. அமெரிக்க மிசனரிமார் வட்டுக்கோட்டையில் நிறுவிய சகலசாத்திர சாலையில் மெய்கண்ட சாத்திரங்களுக்கும் தமிழ் வைத்திய முறைகளுக்கும் முதன்மை கொடுத்தவர்கள். வணக்கத்திற்குரிய ஹென்றி ஹொய்சிங்ரன் என்பார் சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக்கட்டளை என்னும் சித்தாந்த நூல்களில் பேரார்வமும் பெரும் பற்றும் கொண்டு அவற்றைப் படியெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1854ம் ஆண்டிலே வெளியிட்டார்கள்.

வட்டுக்கோட்டைச் சட்டத்தரணிகளுள் ஒருவரான வேலுப்பிள்ளை நாகலிங்கம் என்பவர் சைவத்திலும் தமிழிலும் நிரம்பிய பற்றுள்ளம் கொண்டவர். மறைமலை அடிகளார்பால் அன்புகொண்டு அவர்வழியில் தனித்தமிழ் பேசுவதில் இன்பங் கண்டவர். வட்டுக்கோட்டையில் சைவமகாசபை ஒன்றினை 1931ம் ஆண்டளவில் நிறுவி[illegible] வர்களில் ஒருவராயும், அப்பர் திலகவதியார்பால் பற்று[illegible] ளம்கொண்ட திருக்கூட்டத்தொருவராயும் பணிசெ[illegible] தவர். இத்தகைய புகழ்பூத்த திரு. வே. நாகலிங்கம் அவ[illegible] கள் சென்னையில் 1953ல் நடைபெற்ற நாற்பத்தெ[illegible] ஆண்டுவிழாவில் தலைமைதாங்கினுர்.

★ திறமையை முன்னிட்டே மனித[illegible] பெறுகிறன் ★

## சேர் கந்தையா வைத்தியநாதன்

பாண்டி நாடே பழம்பதியெனப் பெருமை வாய்ந்த மதுரை மாவட்டத்தில் விருதுநகரில் 1954ஆம் ஆண்டில் நடைபெற்ற நாற்பத்தொன்பதாம் ஆண்டுவிழாவில் இலங்கை அரசின் வீடமைப்பு மந்திரியாயிருந்த செம்மனச் செல்வர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அந்த இடைமருதின் ஆனந்தத் தேன் என்று அப்பர் அடிகள் அருளிய வண்ணம் ஆறுமுக நாவலர் அவர்கள் திருக்கேதீஸ்வரத்தைத் தேன்பொந்து எனப் போற்றியதைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரப் புனருத்தாரண சபை உருவாக, அந்தப்பேரவையில் முக்கிய உறுப்பினராயிருந்து முழுநேரத் தொண்டுசெய்தவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள். ஆலயத்தின் வடபால் குடிலமைத்து தொண்டுவாழ்வு நடாத்தியவர் அவர்.

## சுப்பையா நடேசன்

சைவசித்தாந்த சமாஜம் 1905ம் ஆண்டு தொடக்கம் 1955ம் ஆண்டுவரை ஐம்பதாண்டுகள் அரும்பணி புரிந்த அமைவில் தங்கள் பொன்விழாப் பொலிவினைப் பொன்னம்பலத்தாடும் இறைவன் திருவடிக்கீழ்க் கொண்டாடிக் காண்பதற்கு முனைந்தபோது சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மருகர் கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமைதாங்கினார். தஞ்சாவூரைச் சேர்ந்த சுப்பையா நாகநாதன் என்பவர் சேர். இராமநாதனைச் சேர்ந்து நடேசபிள்ளையாய்த் தமிழறிஞராய் அரசியல் வானிலும் பிரகாசித்தவர். தமிழாக்கங் கருதிய கலாநிலையம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் சைவவித்தியாவிருத்திச்சங்கம் முதலான சபைகளில் பங்களித்ததோடு தமிழ்ப் புலவராய் தமிழ்ப் புரவலராய், சைவத்தின் காவலராயும் இருந்தவர். தமிழாசிரியர் பலர் பண்டிதர்களாய் வித்துவான்களாய் விளங்குவதற்கும் நடேசன் அவர்கள் தூண்டுகோலாய் - தூணாய் இருந்தவர்.

சிதம்பரத்தில் பொன்னம்பலத்தடியில் பொலிவு பெற்ற பொன்விழாவைப்பற்றி ஈண்டு நினைவிற்கொள்ளுதல் எமக்குப் பேருவகை உண்டாகிறது. விழாவுக்கான ஊர்வலம் சிதம்பரம் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து தலைசிறந்த மேளவாத்தியத்தோடு ஆரம்பித்துச் சிவஞானபந்தர் எனப் பெயரிடப்பெற்ற விழாப்பந்தலை அடைந்தது. வழியில் சிதம்பரத்தில் தலைசிறந்த கொடைவள்ளல் அன்னதாதா இரத்தினசாமிச் செட்டியார் மனைவாசலில் பெரியதொரு வரவேற்பு நிகழ்ந்தது. விழாப் பந்தலில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கொடியேற்றிவைத்துச் சிறப்பித்தார்.

## திருக்கேதீஸ்வரத்தில் சமாஜவிழா

மூன்லர் 1954-ஆம் ஆண்டுவிழாவில் விருதுநகரில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் திருக்கேதீஸ்வரப் புனருத்தாரண வேலைகளைப்பற்றிக் குறிப்பிட்டமையை நினைவிற் கொண்ட சமாஜத்தார் 1961-ஆம் ஆண்டுவிழாவைத் திருக்கேதீஸ்வரத்தில் கொண்டாடவந்தார்கள். தேவாரம் பாடப்பெற்ற ஈழத்திருநாட்டின் வத்தலங்களிலொன்றான திருக்கேதீஸ்வரப்பதிக்குத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும் சுந்தரமூர்த்திநாயனாரும் தேவாரம் பாடியருளியுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து ஏறக்குறைய எழுபது அறிஞர்கள், அன்பர்கள், அடியார்கள் வருகை தந்தபோது, சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் விருந்தினரைத் தலைமன்னாரிற் கப்பலிலிருந்தே வரவேற்றுவந்தார். திருவாசக மடத்தில் நடைபெற்ற விழாவின்போது திரு அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் இடபக்கொடியை ஏற்றிவைத்தார்கள். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். விழாவுக்குச் சமுகமளித்திருந்த சு. நடேசபிள்ளை அவர்கள் மிகவுருக்கமான சிறப்புரை வழங்கினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்சழகத்து முன்னாள் பதிவாளரும் முருக உபாசகரும் முற்றிப்பழுத்த சைவ சித்தாந்தியுமான சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்த விழாவில் ஈழத்து அறிஞர்களான மு. ஞானப்பிரகாசம் அவர்கள், பொன் முத்துக்குமாரன் அவர்கள் முதலானோர் உரையாற்றினார்கள்.

## வைரவிழா என்னும் மணிவிழா

முதலாண்டு விழாவும் ஐம்பதாம் ஆண்டுப் பொன்விழாவும் பொலிவொடு நடைபெற்ற பொன்னம்பலத்திலே மணிவிழா என்னும் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா 1966 ஆம் ஆண்டில் அருமையாக நடைபெற்றது. திருமுருக கிருபானந்தவாரியார் தலைமையில் நடைபெற்ற பெருவிழாவிற் பல நூல்கள் வெளியிடப்பெற்றன. முருக வழிபாடு, கூட்டுவழிபாடு முதலிய நூல்களைவிட ஆராய்ச்சிப் பேரறிஞர் மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் தத்துவப்பிரகாசரின் தத்துவப்பிரகாசம் என்னும் நூலையும் திருவாசகக் குறிப்புக்கள் எனத் தாமெழுதிய கட்டுரைகளையும் தம்பொறுப்பில் வெளியிட்டார்கள். திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூலுக்கு முன்னர் நிரம்ப அழகிய தேசிகர் எழுதிய உரையுடன் பேராசிரியர் வெள்ளைவாரணார் பதிப்பும் அவ்விழாவில் வெளிவந்தது. சைவசித்தாந்தத்திறனைத் தமிழறியாதவர்களும் ஆங்கிலத்திற் படித்தறியுமாறு சைவசித்தாந்தம் என்னும் முத்திங்கள் வெளியீட்டை முதன்முதலில் சமாஜத்தார் வைரவிழா நினைவாக வெளியிட்டார்கள். அதனை இந்துசமய அறக்சட்டளை ஆட்சித்துறை ஆணையாளர் எம். எஸ். சாரங்கபாணி முதலியார் வெளியிட்டுவைத்தார்கள். வைரவிழாச் சிறப்புக்காண ஈழத்திலிருந்து சென்ற சைவப்புலவர்கள் பலர் அதில் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள்.

## பவளவிழா

சைவசித்தாந்த சமாஜம் தோன்றிய நாட்டொடக்கம் ஈழவளநாட்டோடு தொடர்புடையது. கொண்டும் கொடுத்தும் தொடர்புகொண்ட சமாஜத்தார் தங்கள் எழுபத்தைந்தாம் ஆண்டு விழாவான பவளவிழாக்காண யாழ்ப்பாணத்துப் பழம்பெரும் மூதூரான தெல்லிப்பழைக்கு வருகின்றார்கள். அவர்கள் வரவு நல்வரவாகுக. மெய்யடியார்கள் திரண்டு வம்மின். வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கும் வேளை தேனெனப் பாலெனத் தெவிட்டாத் திவ்வியம் பழுத்த திருமுறைப் பயனைக்கேட்டுய்தி பெறுவோமாக.

★

★ பெருந்த[illegible]புடைய ஆயுட்காலம் தேவை ★

# The first of its kind
# The Saiva Siddhanta Samaja Conference

*(As reported in the Siddhanta Deepika of January 1907)*

The Saiva Siddhanta Samaja Conference, the first of its kind held on the 26th, 27th, 28th of December last under the Presidency of the Hon'ble P. Ramanathan must be pronounced a great success. The utmost capacity of the hall chosen for its sittings was about a thousand; and it was crowded from the beginning to the end, the admission being by tickets; There were representatives and delegates from every Tamil District, and some had come even from Secundrabad. The interest in the meeting never flagged at any time, though the sittings continued over several hours each day. The president's speech was listened to with rapt attention, and he continued his address even on the second day. In it he told us the story of his own religious evolution, and in describing the crisis in his life, he completely broke down, and there was asob in his voice and tears streamed down his eyes; A thrill ran through the whole audience. The whole audience felt as one, and were filled with the deepest emotion. The pause was filled up by the singing of a few Devaram Hymns. The address were all Oral and a few in English. The speakers displayed great good sense in observing the time limit and in not wandering from the subject in hand.

But the president's speech surpassed them all. We had all heard that he was an able speaker in English, but his speeches in Tamil surprised us all no little. His diction was pure and simple and elegant and he showed himself a master in the handing of it. Several of the speakers spoke very well indeed. The president expounded his view of Vedanta and Siddhanta but it was not very clear, and he assured us however that his view of Vedanta was not that of mayawade. He quoted the text from Thirumantra;

அணுதி சிவரூபமாகிய ஆன்மா
தணுதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது
தணுதி மலமும் தடையற்ற போதே
அணுதி சிவரூப மாகிய வாறே.

and proceeded to say that it was inexplicable how the jivatma of the nature of Sivam came to be bound. There might be a slight differenee in the way the text is read by Mr. Ramanathan and Ourselves. and at any rate we feel certain that the Siddhanta never postulates that the Supreme Sivam become bound, and any view opposed to this can never be reconcilable with the siddhanta.

Among followers of Sangara, some do raise the question, "How the pefect became the imperfect" and some do not raise the question and such views have been dealt with elsewhere by Mr. Nallasamipillai. In all other respects, in his plea for a higher life and the means for attaining it, we fully endorse his views. And the sincerest thanks of the whole Saiva public is due to the Hon'ble Gentleman for his having undertaken all the trouble to come over from Ceylon and for his having so ably presided at the sittings of the conference.

The following were the speakers and the subjects handled by them. 1. Mr. J. M. Nallasamipillai B. A. B. L. The Universality of Saiva Siddhanta. 2. Mr. Pandit Nagai Vedachalampillai Pranayamam, 3. Mr. R. S. Shanmuga Mudaliyar Siddhanta and Science. 4. Mr. S. Gnanasikamani Mudaliyar B. A. The place of Saiva Siddhanta in Indian Philosophy. 5. Mr. P. M. Muttiahpillai Dasakariam. 6. Mr. N. Thankavel Mudaliyar Geevakarunyam. 7. Mr. Thillainayaga Mudaliyar Siddhanta Kalvinalam. 8. Mr. S. Palvanna Mudaliyar Diksha. 9. Astavathanam M. P. Kalyanasundara Mudaliyar Saiva Siddhanta. 10. Mr. S. Gnanasikamani Mudaliyar B. A. Pasa Lakshana. 11. Pandit Mr. N. Vedasalam Theistic aspect Saiva Siddhanta.

Great credit was due to the Secretary Mr. C. S. Ponnusami Mudaliyar for all the arrangements made by him and the delegates and visitors who had come from the different parts of the Presidency owe their deepest gratitude for the very kind hospitality shown by him. We hope the secretary will get the whole proceedings with the speeches published in phamphlet form at an early date. ★

## புழுதி எழும்பாமல் செய்வோம்

வெயில் மிகுதியால், வீதிகளில் போக்குவரத்து மிகு தியால் எங்கும் புழுதியும் தூசியும் எழும்பித் துன்பந் தருகிறது. முற்காலத்தவர் காலை மாலை ஆகிய இருவேளை களிலும் பசுச்சாணகம் கரைத்த நீரைத் தெளித்துப் புழுதியை அடக்கிச் சுகமும் மனநிம்மதியும் கண்டவர் அன்றி அழகும் தூய்மையும் கண்டனர்.

★ பெருந்தன்மையை இழக்க ஒரு ... ழுது போதும் ★

# தெல்லிப்பழை

தெல்லிப்பழை தமிழரசர் காலத்திலும் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் தனிப்பெருமைபெற்று நிலவிய பழம் பதியாகும். தெல்லிப்பழையில் முற்காலத்தில் பிரபுத் தன்மையோடு வாழ்ந்த பெரியார் பலரிருந்தனர். இன்னும் இங்கே பாரம்பரியப் பண்பாடு தவறாத பெரியார் பலர் வாழ்கின்றார்கள்.

இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குலோத்துங்க முதலியார் என்பார் சேரநாட்டோடு வர்த்தகத் தொடர்புகொண்டு வாழ்ந்தவர். இவர் பரம்பரையில் வந்தவர்களும் மலையாள வியாபாரத்திற் பெரும் பொருளீட்டியதோடு மனைகள்தோறும் மங்கலம் பொலியும் குத்துவிளக்கு, குடம், தட்டம், தாம்பாளம் போன்ற பித்தளைப் பாத்திரங்கள் பலவற்றைப் பழக்கினர். எவர்சில்வர் மயமான மனைகளில் பழைய பாத்திரங்களை இன்று காணமுடியாது. குலோத்துங்க முதலியார் பித்தளைப் பாத்திரங்களையன்றி வெள்ளி, வெண்கலம், செம்பு முதலாற் செய்யப்பெற்ற பலவித பாத்திரங்களையும் வியாபகப்படுத்தினர். அன்றி வேலைப்பாடமைந்துள்ள பட்டு பீதாம்பரம்போன்ற ஆடைவகைகளையும் கொண்டுவந்து குவித்தனர்.

தமிழ்நாட்டுக் காவிரிப்பூம் பட்டணத்தோடு ஒப்பிட்டுக் கூறக்கூடியவகையில் காங்கேயன்துறைமுகம் விளங்கியது. மாவிட்டபுரக் கந்தசுவாமியும், பாவமும் பிணியும் போக்கி மனத்தூய்மையும் உடற்றூய்மையும் நல்கும் நகுலதீர்த்தமும் நகுலேஸ்வரர் ஆலயமும் தெல்லிநகருக்குப் பெருமையாய் வரப்பிரசாதமாயிருந்தன.

குலோத்துங்கன் பெயரால் அமைந்த பண்டசாலை நானாவிதப் பொருள்களால் நிறைந்திருந்தன. துங்கவர்த்தக சாலையில் பணிபுரிந்தவர் பலர். குலோத்துங்க முதலியாரும் ராஜகம்பீர நாடாளும் நாயகன் என்தக்க முறையில் நீலமோ பச்சையோ எனக்கூறமுடியாத நிறத்துக் குதிரைமேல் ஏறிச்செல்வது வழக்கம். அவர் பவனி கண்டு பாவியற்றிப் பரிசுபெற்ற புலவர்கள் பலர்.

பரிசு கருதாமல் குலோத்துங்கன் பெருமையைப் பாடிய பெரியவர் ஒருவர் பரம்பரைச் செல்வர் பெரிய படிப்பாளி. அவர் ஒருநாள் குலோத்துங்கன் கோலாகலமாகக் குதிரைமேற் சென்றதைக் கண்டார். உலாப்போந்த தலைவனைப் பேதைமுதலாகப் பேரிளம் பெண்ணீறாகக் கண்டு காதல் கொண்ட வண்ணத்தை நினைத்தார். பெண்ணுள்ளம் கொண்டார் பச்சைப் பசுங்கிளியை நோக்கினர். உனக்குப் பாலமிர்தம் பருக்குவேன். நான் குலோத்துங்கன்மேல் இச்சைகொண்டேன் என்பதை அவருக்குச் சொல்லிவா. அவர் கச்சுடன் கூடிய குதிரைமேலேறி மாவிட்டபுரத்திலே கோயில் கொண்டுள்ள வள்ளிமணாளனைக் கும்பிடவருவார் என்று குறிப்புக்கூறினர்.

கொச்சைக் குறத்திதன் கோமானைக் கும்பிட மாவைப்பதிக்
கச்சைக் குதிரையின்மேலே குலோத்துங்க வண்ணல்
(செல்வான்
இச்சைப் பட்டாள் மாவையம்மா ளௌவிங் கழைத்து
(வந்தால்
பச்சைப் பசுங்கிளியே பாலமிர்தம் பருக்குவனே.

குலோத்துங்கன் பெருமையை அகத்துறையிற் பாடிய புலவர் பெருந்தகையின் வழிவந்தவரே கதிரைவேற்பிள்ளை நீதிபதி. நீதிபதி கதிரைவேற்பிள்ளை வைமன் கதிரைவேற்பிள்ளை என நல்லூரிற் பெயர் பெற்றவர். அவர் பெயராலேயே வைமன் வீதி புகழ்பெற்று விளங்குகின்றது.

வைமன் கதிரைவேற்பிள்ளை தமிழ்த்தொண்டு செய்த பெரியார். வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையில் உருவான அறிவாளி. தமிழ், ஆங்கிலம், லத்தீன், கிறீக், எபிரேயம் முதலிய மொழிகளில் திறமையுற்றுப் பன்மொழிப் புலவராய் விளங்கியவர். ஆங்கிலத் தேசாதிபதிகளால் பாராட்டப் பெற்றவர்.

கதிரைவேற்பிள்ளை பன்முகப்பணிகளிடையே தருக்க நூலொன்றையும் தயாரித்துள்ளார். தம் காலத்துப் புலவர்களை அணைத்து அகராதி ஒன்றைத் தயாரித்தார். ''திருவாருலகஞ் சிருட்டித்தளிக்கும் அருவார் பொருட்டென்னகம்'' எனக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். அவர் தொகுத்த அகராதி அச்சேறுமுன் அவர் அமரராகவே அவர் தொகுத்த அகராதி மதுரைப் பேரகராதிக்கு உருத்துணையாயிற்று. இவரின் மைந்தன் கௌரவ பாலசிங்கம் என்பார் இலங்கைச் சட்டசபையின் உட்டுறை நிர்வாகத்தில் பெரும்புகழீட்டிப் பிரகாசித்தவர்.

## திருக்கைலாயத்தொடர்பு

சைவமுந் தமிழும் தழைத்தினிதோங்கும் எங்கள் ஈழ வளநாட்டிற்கும் திருக்கைலாயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. எங்கள் பரம்பரை திருக்கைலாய பரம்பரை. முன்னர் திருக்கைலாயத்தைத் தொட்டுவந்த இராவணன் இலங்காதிபதியாயிருந்தவன். இராவணன் இலங்கை இன்றைய இலங்கையின் வேறுயின் அஃது இன்றைய இலங்கையை உள்ளிட்ட பெருநிலப்பரப்பாயிருந் திருக்கலாமேயன்றி இதனின் வேறல்ல. திருக்கைலாயத் திருந்து திருவாவடுதுறை வந்த திருமூலநாயனார் இலங்கை சிவபூமி என்பர். இலங்கையில் எங்கும் சிவமயமாயிருந்த காலத்தில் எண்ணிறந்த சிவாலயங்கள் ஈஸ்வரங்கள் இருந்தன. மண்ணுள் புதையுண்ட சிவலிங்கங்கள் காலந்தோறும் காடுகளிலிருந்து வெளிப்படுகின்றன. புதைபொருளாராய்வுக் காரருக்குப் பூமித்தாய் நிறையப் புதுமைகள் வைத்திருக்கிறாள். ஆம்போது அவளால் அதிகமாகும்.

திருக்கைலாய சித்தர்கள் முனிவர்கள் காலந்தோறும் இலங்கையில் தீர்த்தமாடித் திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம் காணவந்துள்ளார்கள். அண்மைக்காலத்தில் 1795ஆம் ஆண்டளவில் திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை யாதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் ஈழம்

(10-ஆம் பக்கம் பார்க்க)

# அவளைப் போற்றுவோம்



அன்னை பராசக்தியின் ஆயிரந் திருநாமங்களுள் எவற்றை நினைப்பது எவற்றைப் போற்றுவது. அவள் கொண்டருளும் அதியற்புதத் திருக்கோலங்களுள் எவற்றைக் காண்பது எவற்றை வாழ்த்துவது. அலைந்துதிரியும் மனத்தை அவள் திருநாமங்களை நினைப்பதாலும் சொல்வதாலும் கட்டுப்படுத்தலாம். நம்மைக் கட்டுப்படுத்தும் பந்தபாசத் தளைகளைத் தவிர்க்கலாம் தளர்த்தலாம்.

அவள் அருள் அன்னை. அருள்வடிவமானவள். உலகங்களையன்றி அப்பாலுள்ள அண்டங்களையே ஈன்றவள். எல்லாவற்றின் தோற்றத்துக்கும் காரணமான ஜெனனி. அவளே ஸ்ரீமாதா. அவள் உலகமாக இயங்கிக்கொண்டிருக்காவிட்டால் எதுவும் இயங்காது இறைவன் சும்மா இருப்பவர். சும்மா இருப்பவரைச் சிவனே என்று சும்மா இருப்பவர் என்பர். சும்மா இருப்பவரைத் திருவிளையாட்டயர்விக்கும் சுமங்கலி அன்னை.

அன்னையின்றி எமக்கு இயக்கமில்லை. ஆற்றலில்லை. எதுவுமில்லை. அவள் இறைவனின் தாய்மைக்குணம். அவளாலேதான் இறைவன் தாயான தத்துவனாகின்றார். தாயின் நிலையில் அவள் ஸ்ரீலலிதா. அவள் தெய்விகங்கள் நிறைந்த ஆளுடையாள். ஆளுடையாள், பேரழகி, பெருமாட்டி. அவளே ஸ்ரீமகாராக்ஞீ. அவள் எம்மைக்காக்கும் மந்திர சொரூபமானவள். எல்லாவற்றையும் இயக்குபவளாக சர்வயந்திர ஆத்மிகா என இருப்பவள். அவள் எல்லாவிதமான கேடுகளையும் பாவங்களையும் போக்குபவள் மகாபாதக நாசினி. பெரிய யோகியர்களுக்கெல்லாம் ஈஸ்வரியாக இருப்பவள் மகாயோகேஸ்வர ஈஸ்வரி. அவளே ஐந்து மூர்த்திகளின் வடிவிலிருக்கும் பஞ்சப்பிரம்மஸ்ரூபிணி. பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈசானன், சதாசிவம் பஞ்சமூர்த்திகள்.

உலகிலுள்ள உயிர்வர்க்கங்கள் யாவும் அன்னையின் விசுவரூபத்தில் இடம்பெற்றுள்ளன. உயிர்கள் யாவும் அன்னையின் அருள்வடிவங்கள். உயிர்களின் உயிர்ப்புக்கும் அவளே உபகரிக்கின்றாள். நமது முன்னேற்றத்துக்கும் அவளே வலிமை, கல்வி, செல்வம் முதலியவற்றைப் பிச்சையென இடுகின்றாள். நமக்கேயன்றிப் புல் பூண்டு செடி கொடி மரங்களுக்குப் பசுமையளிக்கும் பச்சைப் பெருமாட்டி அவளே.

அவள் எண்ணிறந்த சூரியப்பிரகாசமுள்ளவள். ஒரு சூரியனால் பென்னம்பெரிய அண்டங்கள் நிலைக்கின்றன. என்றால் எத்தனையோ சூரியர்களை நின்று பயனளிக்கப் படைத்தவள் அவளே. அவள் அகண்ட அண்டசோதி என்பதோடு ஆத்மசோதியுமாவள். ஆத்மா பண்பாடு அடைவதற்கு அவள் வழிகாட்டியும் உபகாரியுமாவள். அவள் சதா உபகரிப்பவளாதலால் கண்விழித்தபடியே இருக்கிறாள். அவள் கண்ணைக்கொண்டு அவளைப் பெரியவர்கள் விசாலாட்சி, காமாட்சி, மீனாட்சி என்கிறார்கள். அவள் அழகின் உச்சநிலை. லலிதாம்பிகை, இராஜராஜேஸ்வரி மூர்த்தங்கள். அழகுக்கொருவருமொவ்வாத வடிவங்கள். அவள் சமயங்களைத் தாயென வளர்ப்பவள். சமயத்துள் வீற்றிருப்பவள். சமயாசாரத்தைத் தருபவள். ஆதாரங்களுக்கெல்லாம் ஆதாரமான மூலாதாரத்தில் இருக்கும் முதல்வி அவள். மூலாதார ஏக நிலையாள் அவளே. அவள் குண்டலினி. தவளத்தாமரைத் தாதார் கோயில் அவளைப் போற்றுதும், அவளைப் போற்றுதும்.

## திருக்கைலாயத்....

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து தம் பரம்பரைத் தொடர்பை இங்கே பரப்பியுள்ளார். அவரிடம் திருக்கைலாயத் தொடர்பு பெற்றவர்கள் இருபாலை நெல்லைநாத முதலியார், இவர் மகன் சேனாதிராய முதலியார், நல்லூர் பரமானந்தர் கந்தர், மாதகல் மயில்வாகனப்புலவர், வண்ணார்பண்ணை கோபாலச் செட்டியார், வைத்தியலிங்கம் செட்டியார் என்பவராவர்.

சேனாதிராய முதலியாரிடம் திருக்கைலாய பரம்பரைத் தொடர்பு பெற்றவர்கள் கோப்பாய் அம்பலவாண பண்டிதர், காரைநகர் கார்த்திகேயஐயர், நல்லூர் கார்த்திகேய ஐயர், நல்லூர் ஆறுமுகநாவலர், நல்லூர் சம்பந்தப் புலவர், நீர்வேலி பீதாம்பரப் புலவர், கந்தரோடை நாகநாத பண்டிதர், வல்வெட்டித்துறை ஏகாம்பரப் புலவர், வட்டுக்கோட்டை சண்முகம்பிள்ளை, மறவன் புலம் சயம்பர் முதலானோராவர்.

ஆறுமுகநாவலர் அவர்கள் தாம்கொண்ட திருக்கைலாயத் தொடர்பினைச் சைவப் பிரசங்கங்கள் வாயிலாகவும் மாணாக்கர்களைக்கூட்டிப் பரம்பரையை உருவாக்கிய முறையாலும் பரப்பிவந்தார்.

இவ்வாறாகத் தமிழ்நாடும் ஈழநாடும் கொண்டும் கொடுத்தும் திருக்கைலாய பரம்பரையினைப் பல்லாண்டுகளாகப் புதுப்பித்து வந்த காலத்தில் மிக அண்மையில் 21-1-1950 இல் தருமபுரவாதீனத்திருந்து சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஈழநாட்டிற்கு எழுந்தருளி அருளுபதேசஞ் செய்தார்கள். அன்னார் இன்று தங்கள் ஆதீனத்து மகா சந்நிதானமாயிருந்தருள்புரிகின்றார்.

திருக்கைலாய பரம்பரையில் வந்த குன்றக்குடியாதீன மகா சந்நிதானமவர்கள் நடமாடும் மகாசந்நிதானமாய்த் தமது திருவடி தோய எங்கள் நாட்டுப்புறங்கள் எங்கும் எழுந்தருளியுபதேசஞ் செய்தவர்களாவர்.

இந்தமுறையில் மதுரையாதீன முதல்வரும் பூர்வாச்சிரமத்தில் இலங்கை வாசியாகையால் தமது தொடர்பால் ஈழநாட்டில் திருக்கைலாய பாரம்பரியத்தைப் பழக்கியவராவர். இன்னும் பேரூராதீனம் சாந்தலிங்க சுவாமிகள், கௌமார மடத்துச் சுந்தரசுவாமிகள் முதலான அருளாளர்கள் ஈழநாட்டில் தங்கள் திருவடிதீண்டித் திருவருள் பாலிக்குமாறு செய்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாட்டுக்கேகியவர்களுள் வண்ணார்பண்ணை வாசியாய ஒருவர் சூரியனார் ஆதீனஞ்சார்ந்து இலக்கியத் துறையில் இணையில்லாத அளவு பாண்டித்தியம் பெற்றுத் துறவுபூண்டு முத்துக்குமாரசாமித் தம்பிரான் எனப் பெயர் பெற்றபோதிலும் இலக்கணச்சாமியார் எனவே வழங்கிவந்தார்.

இலங்கை இடைகலை, இமயம் பிங்கலை, சிதம்பரம் சுழுமுனை என்பது வெளியிற் புலப்படாது உள்வீட… அமைந்து தொடர்புபடுத்திக் கொண்டிருக்கின்றன.

★ விசுவாசம் உள்ளவனுக்… உண்டு ★

# நாமும் நமது சமயமும்

''இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்'' இவ்வாறு ஆறுமுகநாவலர் தமது இரண்டாம் பால பாடத்தின் முதற்பாடத்தை ஆரம்பித்துள்ளார். முத்தி அடைவது உயிர். முத்தியடைவதற்குரியவழி பக்திநெறி. பக்தி வழியில் நிற்பவரின் சித்தமலத்தை அறுத்து அவரைச் சிவமாக்குபவர் இறைவன். இறைவனை அணுகுவதற்குரிய இடம் ஆலயம். ஆலயந் தொழுவது சாலவு நன்று என்று ஆரம்பத்தில் கூறியவர்கள் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே என மேல்நிலையில் கூறியுள்ளார்கள்.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருவுருவத்தைச் சிவனெனவே தொழுது உய்தியடையுமாறு திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் நம்மை நெறிப்படுத்துகின்றன. நெறிப்படும்போது உள்ளும் புறமும் தூய்மை அடைதல் வேண்டும். தூய்மைக்காகவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் உதவுகின்றன. தனுகரணங்களைத் தூய்மைப்படுத்துமாறு திருவங்கமாலை வழிப்படுத்துகிறது. தலையே நீ வணங்காய் என்பது முதற்பணி. அன்புப்பணி. உறுப்புக்களும் உள்ளமும் புனிதமடையும்போது கருவிகரணங்களும் தூய்மையடைகின்றன. இவை யாவும் தூய்மையடையும்போது சிவச்சார்பு உண்டாகிறது.

சிவச்சார்பு உண்டானதும் ஆன்ம ஈடேற்றம் உண்டாகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன சோபான முறையில் ஆன்மாவை ஈடேற்றுகின்றன. சோபானமுறையில் தத்துவங்களுக்கு அப்பாலான இறைவனை அடைதலே முத்தி[illegible]ர்க்கம். அந்தக்கரணங்கள் அடங்கிச் சித்தசுத்தி உண்டானதும், சித்தமலம் அறுகின்றது. சித்தவிருத்திகள் சிதைகின்றன. ஆன்மா கருவிகரணங்களினின்றும் பிரிந்து, தன்னை இழந்து, சுத்த அறிவாக இருக்கும்போது சிவசம்பந்தம் உண்டாகிறது. பக்திநெறி அறிவித்த பரமன், சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி ஆன்மாவை ஆட்கொண்டருளுவன். பந்தத்திலுள்ள ஆன்மாவைப் பந்தங்களினின்றும் நீக்கி வீடுபேறுய முத்திநிலையைப் பெறும் வழியைக் கூறுவதே எங்கள் சமயம். அதுவே சைவசித்தாந்தம். பந்தம், ஆன்மா முத்தி எனவுள்ள மூன்றையும் விளக்கமாகக் கூறுகில் பாசம், உயிர், பதி எனலாம். பாசத்துக்கும் பதிக்கும் இடையிலுள்ள உயிர் பாசத்தின் பக்கமடைந்து பந்தித்து நின்றபின் பரத்தை உணர்ந்து பாசத்தை விடுத்துப் பரத்தை அடைவதே முத்தி என்னும் வீடுபேறாகும். பந்தமும் வீடும் படைத்தவர் பரம் பொருளாய இறைவனே யாவர்.

ஆன்மா சார்ந்ததன் வண்ணம் நிற்பது. அது பந்தமாய பாசத்தின் வழிநிற்கும்நிலை பெத்தம் எனப்படும். அது பந்தத்தைவிட்டுப் பரனைச்சார்ந்து நிற்கும் நிலை முத்தி எனப்படும். சார்ந்ததன் வண்ணம் நிற்கும் ஆன்மாவைச் சதசத்து என்பர். மெய்ப்பொருளாய சிவப்பரம்பொரு[illegible] சத்து என்பர். சத்து எல்லாவற்றுக்கும் மேலாய [illegible]லைவன் எனவே பதி எனப் பெயர்பெறுவர். ஆன்மா பசு எனப் பெயர்பெறும். ஆன்மாவைப் பந்திப்பன பாசம் எனப் பெயர்பெறும். பதி பசு பாசம் என்பன முப்பொருள்கள். இவற்றை முறையாகக்கூறும் சாத்திரம் சைவசித்தாந்தம். இது தமிழராய்ச் சைவராய் இருந்தவர்கள் கண்ட உண்மை.

ஆன்மா அறிவு, இச்சை, செயல் என்பன மறைக்கப்பட்டு இருள்மயமாயுள்ள நிலை கேவலம் எனப்படும். ஆன்மாவுக்கு இத்தன்மையை உண்டாக்குவது ஆணவமலம். அது ஆன்மாவை அணுச்செய்வது. அணுச்செய்யும் ஆணவத்தை விடுவிப்பதற்கு உபகரிப்பது திருவருள். திருவருளே ஆன்மாவைச் சிவத்திடஞ் சேர்ப்பதாகிய முத்திக்கு வழிகாட்டி.

''சைவ சமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்னுள் வெளிகாட்டு
மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுதவேண்டா முத்தி தரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே.''

''William James has observed that the basis and essentials of the Hindu Culture lie in two facts or propositions, the first of them being the visible world is part of a wider and more spiritual universe from which it drew its deep significance. The second idea is that the union or harmonious relation with that higher universe is the true end of human thinking and human life. Prayer or inner communion is the way and method by which this contact is established between the visible world and its continuity the spiritual universe.''

Sir C. P. Ramasamy Iyar

## பரராசசேகரம்

தமிழரசன் பரராசசேகரன் தன்னுட்சியும் தமிழாராய்ச்சியும் செய்த காலத்தில், 1477 — 1519 ஆண்டுகளுக்கிடையில் எழுந்த பெரிய சங்கநூல் அவன் பெயரால் வெளிவந்த வைத்திய நூலாகும். முன்னர் அகத்திய வைத்திய சிந்தாமணியிலும் தன்வந்திரி வைத்திய சிந்தாமணியிலும் வந்த வைத்திய முறைகளைத் தழுவி 12000 பாடல்களில் வந்தது பரராசசேகரம் இதனை வைத்தியர் பன்னிருவர் சங்கத்தமர்ந்து செய்தனர் என்ப. இவற்றில் அரைப்பங்கிற்கு மேற்பட்டவற்றை அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமை ஏழாலை அருளானந்தசிவம் என்னும் சைவசித்தாந்தப் பெருஞ் செல்வர் ஐ. பொன்னையா என்னும் வைத்திய பூபதிக்கே உரியதாகும்.

## கனகசபாபதி ஐயர்

நல்லூரில் வாழ்ந்த வேங்கட சுப்பையர் மைந்தர் கனகசபாபதி ஐயர் என்பார் சைவப் பிரசங்கஞ் செய்வதின் பொருட்டுத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா முதலிய நாடுகளில் ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்தவர் என்று அறியக்கிடக்கிறது.

★ ஒவ்வொரு[illegible]ம் கடவுட் தன்மை உண்டு ★

# திருக்கைலாய பரம்பரை



சுவாமிகளின் சமாதி நாளில் மில்க்வைற் சார்பில் செய்தி ஆசிரியர் சொன்ன அஞ்சலியுரை

உங்கள் பரம்பரை என்ன என்று ஒருவர் எம்மைக் கேட்டால் நாம் முடிதொட்ட வேளாளர், இருமரபுந் தூயமுதலி, மண்ணுடுகொண்ட தளபதி முதலிய பழம் பெருமைகளை முன்னிறுத்தி வம்சாவழி கூறுகிறோம். முதலிமார் பரம்பரையைக் கூறும் நாம் திருக்கைலாய பரம்பரையினர் என்பதை முற்றாக மறந்துவிடுகிறோம். திருமுறைகளைப் பேணிப் பாதுகாத்துத்தந்த தில்லைத் திருச்சிற்றம்பலத்தை ஒருமுறையாவது சொல்லாமல் தேவாரத் திருமுறையை நாளும் பாடிப்பாடிப் பெருமை கொள்கிறோம்.

எங்கள் பரம்பரை திருக்கைலாய பரம்பரை. எங்கள் ஆலயங்களின் இருதயம் தில்லைத் திருச்சிற்றம்பலம். சிதம்பரத்து ஆகாசலிங்கம் அருவமாய் அகிலத்தை ஆள்வது. திருக்கைலாயத்திலிருந்துவந்த அகச்சந்தானத்தின் வழியில் வந்த புறச்சந்தானம் பூதபரம்பரை. பூதபரம்பரை பொலிவுபெறவே திருஞானசம்பந்தப்பெருமான் புனித வாய் மலர்ந்து திருமுறை பாடினார்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமிழ்நாடு என்னும் மதுரைக்கு எழுந்தருளியபோது தங்கிய மடம் புனிதமாயிற்று: அது அவர் பெயரால் திருஞானசம்பந்தர் மடமாய் ஆதீனமாய் மலர்ந்தது. அந்தமடத்தில் 291-ஆம் மகா சந்நிதானமாய்க் கொலு வீற்றிருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளாவர். அவர் காலத்திலே அங்கே இளவரசாக இருந்தவர் சம்பந்தசரணாலய சுவாமிகள் என்னும் தீட்சாநாமம் பெற்றுத் துறவுபூண்டிருந்த கோவை வழக்கறிஞர் பெரியபுராணப் பேருரையாசிரியர் சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

அவரைக்கண்டு வணங்கித், தங்களுக்கேன் இந்தக் கோலம் எனக்கேட்டபோது, அவர் கண்கலங்கி நாத்தழுதழுக்கக் கூறிய விடை உள்ளத்தை வெகுவாக உருக்கக் கூடிய உரையாகும். திருஞானசம்பந்தப் பரமாசாரிய சுவாமிகளின் திருமடத்தில் காவி பெறுவதற்கு அடியேன் எத்தனை பிறவிகளில் தவஞ்செய்தேனோ தெரியாது.

இத்தகைய புகழ்பூத்த புனிதமடத்திலே பட்டம் பெற்றுத் துறவுபூண்டு தம்பிரான் சுவாமிகளாகி யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆதீனம் அமைத்த பெருமையும் பேறும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியர் என்னும் பெரியாருக்கே உரியதாகும். இவர் இளமையில் மணிஐயர் என்னும் செல்லப் பெயரோடு சமயப்பிரசாரஞ் செய்து புகழ்பெற்றதால் எல்லோர் நாவிலும் மணிஐயர் எனவே வழங்கிவந்தார்.

இங்ஙனம் சமயகுரவரான திருஞானசம்பந்தர் திருநாமத்தில் ஆதீனம் அமைத்த யாழ்ப்பாணச் சுவாமிகள் சந்தானகுரவர் தொடர்பிலும் பணிசெய்வதற்கு விரும்பி, திருக்கைலாய பரம்பரை தருமபுரவாதீனத்து இருபத்தாறும் பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாணை பெற்று ஞானச் செங்கோல் தாங்கிவந்து அத்தொடர்பினையும் இங்கே உண்டாக்கினார். இஃது ஒரு மா மரத்தின் இருபெருங் கிளைகள் வெவ்வேறு இனத்துத்தித்திப்பான மாங்கனிகளைத் தரும் முறையில் ஒட்டுமாமரமாயிற்று; இம் மரநிழலில் வரும் நாம் எல்லோமும் திருக்கைலாய பரம்பரையில் வந்து கூடியவராயினேம்.

திருக்கைலாய பரம்பரை எமக்குப் புதிதல்ல. அது நேற்று முந்தை நாள் வந்த தொடர்பல்ல. அது நெடும் பண்டைக் காலமுதல் நிலவி வந்துள்ளது. முன்னர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் அதிகாரஞ்செய்த நாளில் அவர்கள் தலைவனின் உணவின் பொருட்டு நம்மவர் பசுக்கன்று கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயது. இவனுக்குப் பசுக்கன்று கொடுத்துப் பாவத்தைத் தேடுவதிலும் பார்க்கப் புண்ணிய பூமியாகிய பாரததேசம் போகலாம் என்று இரவோடிரவாக இருட்பெருஞ் சமுத்திரத்தில் ஓடம் ஏறி அக்கரை சேர்ந்தவர் ஆறுமுகநாவலரின் தாய் சிவகாமியின் தந்தை வேதவனம் என்பாரின் மூதாதையரான ஞானப்பிரகாசர் என்பாராவர்.

ஞானப்பிரகாசர் திருவண்ணாமலை யாதீனத்தில் தீட்சையும் மந்திரோபதேசமும் காவியும் பெற்றுத் தம்பிரான் சுவாமிகளாயிருந்தவர். அவரிடம் உபதேசமும் காவியும் பெற்றவர் வரணி என்னும் ஊரிலிருந்து சென்ற தில்லைநாதர் என்பவர். தில்லைநாதர் தம்பிரானாகிச் சிவபூசையாதியன சிறப்பாகச் செய்து சிவானுபூதிமானாய் விளங்கிய காலத்திலே, தஞ்சாவூர் மன்னனின் பெண்ணுக் குற்ற கடுமையான நோயினை மந்திர நீறிட்டுக் குணப்

(13-ஆம் பக்கம் பார்க்க)

★ சுயநலமற்ற செயலெல்ல[illegible] செயல் ★

# குருக்கள்மார்

சைவாசாரசீலமுள்ள யாழ்ப்பாணத்தில் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலுள்ள பஞ்சபூத புண்ணிய ஸ்தலங்களிலிருந்து பிராமண குருமார் இங்கே வந்து குடியேறி வடமாகாணம் எங்கும் சைவப்பயிர் வளர்த்தனர். அவர்களின் பன்முகஞானத்தையும் சமூகத்துக்கு அவர்கள் செய்த உபகரிப்பினையும் சுருக்கிச் சொல்லவியலாது.

வாயுஸ்தலம் எனப் போற்றப்பெறும் திருக்காளத்தியிலிருந்து வந்த கோபாலக்குருக்கள் என்பார் மூளாயில் வாழ்ந்து பணிபுரிந்தார் என்ப. ஆகாய ஸ்தலமாய சிதம்பரத்திலுள்ள தில்லைவாழந்தணர்களிலொருவரான பொன்னம்பல தீட்சதர் என்பார் முன்னரிங்குவந்து பரம்பரை பரம்பரையாகப் பலவிடங்களிலும் பணிபுரிய வழிவகுத்தனர். அராலி, கோப்பாய் முதலிய இடங்களில் இவரின் வழித்தோன்றல்கள் பணிபுரிந்தனர். திருவாடானை என்னும் தலத்திலிருந்து வந்த சந்திரசேகரக் குருக்கள் என்பார் நல்லூர் கிழக்கு வெயிலுகந்த பிள்ளையார் கோயிலில் தங் கருமஞ்செய்து புகழ்பெற்றவர். இவரும் இவர் வழித்தோன்றல்களும் பிரதிஷ்டாதி உற்சவாத்தங்களில் நல்ல பயிற்சிபெற்றிருந்தனர் என்ப. அக்கினிஸ்தலமாய திருவண்ணாமலையிலிருந்து வந்தஅருணாசலக்குருக்கள் புன்னாலைக் கட்டுவனில் வாழ்ந்தவர். இவரிடம் படித்தவர்கள் பலர்.

அட்டகர்மங்களில் கைதேர்ந்து வன்னிப்பகுதியெங்கும் சிவாலய பூசைகள் செய்தவர்கள். இன்றும் காடடர்ந்த வன்னிப்பகுதிகளில் கண்டெடுக்கப்படும் சிவலிங்கங்களுக்குக் கணக்குக்கிடையாது. [illegible]ப்புஸ்தலம் என்னும் திருவானைக்காவில் ஜம்புகேஸ்வரருக்குப் பூசை செய்தவர்களிலொருவராய சந்திரசேகர ஐயர் என்பவர், யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்திலேயே நல்லூருக்கு வந்து வாழ்ந்தவர். இவரின் மைந்தர் இராமலிங்கர் என்பார் இளமையிலேயே சோதிடத்தில் ஈடுபட்டுப் பஞ்சாங்கம் கணித்தவர். இவர் சோதிடத்தோடு சைவம் வளர்க்கும் நூல்கள் பலவற்றை எழுதியும், வடமொழியினின்றும் பெயர்த்தும் அச்சிட்டுப் பரப்பியவர். இவர் பரம்பரையினர் இன்றும் தம்பணி செய்து வருகின்றார்கள்.

தவஞ்செய்வோர் தங்கருமஞ் செய்வதால் சுயநலமிகள். ஆனால் குருக்கள்மார் பரார்த்தமாகப் பலருக்காக இறைவனைப் பூசிப்பவர்கள். சுபகருமங்களை முன்னின்று நடத்துபவர்கள். பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலியன செய்பவர்கள். அக்கினி காரியஞ்செய்ய அருகதையுள்ளவர்கள். குருக்கள்மார் குற்றஞ்செய்தால் தமக்கும் தம் சந்ததியினருக்கும் பழி தேடியவராவர். [illegible]ருக்கள் குற்றஞ்செய்தால் கோயில்கெடும். கோயில்கெட [illegible]ாடுகெடும். நாடுகெட அரசுகுலையும். அரசுகுலைய எல்லாங் [illegible]லையும். குருக்கள் நாட்டை வாழச்செய்தல் வேண்டும். [illegible]ருக்களுக்குக் குறைகள்வராமல் காப்பது பொதுமக்கள் [illegible]டமை. பொதுமக்களின் சுபீட்சத்துக்குக் குருக்கள் [illegible]றைவனை வேண்டுதல் புரிதல் கடன்.

## அபரகிரியைகள்

யாழ்ப்பாணத்தார் அபரகிரியைகளைக் குறைவறச் செய்வதில் பெரும்புகழ் பெற்றவர்கள். இறந்தவர் பொருட்டுச் செய்யவேண்டிய தீக்கடன் நீர்க்கடன்களை நிறைவாகச் செய்வதற்கு அகோர சிவாசாரியார் பத்ததிகளில் பயிற்சிமிக்க சைவக் குருமார் யாழ்ப்பாணமெங்கும் குடியேறியிருந்தபோதிலும் வண்ணார்பண்ணை, விளைவேலி, நீர்வேலி, கந்தரோடை, காரைதீவு, வட்டுக்கோட்டை, தொல்புரம், மூளாய், கரணவாய் முதலிய இடங்களில் அதிகமாக வாழ்ந்தனர். அவசரம் அவசரமாய் கிரியைகள் செய்வதிலும் பார்க்கச் செய்யாமல் விடுதல் நல்லது. அபரகிரியை செய்ய முற்படுவோர். அதற்கான பத்ததிகளில் நன்கு பயிற்சிபெறுவார்களாக.

## நாட்டுக் கோட்டைச் செட்டிமார்

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளை 1796 ஆம் ஆண்டளவில் கைப்பற்றித் தம்செல்வாக்கைப் பரப்பிய காலத்தில் 1800 ஆம் ஆண்டளவிலே வடமாகாணத்தில் கோமாரி நோயால் ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்தொழிந்தன. அதனால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்ட வேளையில் கைகொடுக்க வந்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார். அவர்கள் வன்னியிலிருந்து பொதிமாடுகள் மூலமும், தமிழ் நாட்டிலிருந்து மரக்கலங்கள் மூலமும் நெல்கொண்டுவந்து விற்றார்கள். அவர்களமைத்த கிட்டங்கிகள் பல இன்றும் உள்ளன.

இன்று மக்கள்வங்கிகள் நம்மவருக்குக் கடன் கொடுத்துக் கைதூக்கிவிடும் முறையில் அக்காலத்தில் செட்டிமார் வட்டிக்கடை மூலம் கடன்கொடுத்தனர். அவர்கள் உபகரிப்பால் இலங்கையின் பல பாகங்களிலும் அழகிய கோயில்கள் அமைந்துள்ளன. பாடசாலைகளை அமைப்பதிலும் கல்விமான்களை ஆதரிப்பதிலும செட்டிமார் தங்கள் பெருங்குணத்தில் தவறியதில்லை. தனவணிகர், வைசியர் என்றெல்லாம் புகழ்பெற்ற செட்டிமாரைப் பெருங்கல்விமானாகிய ஆறுமுகநாவலர் நன்றாக மதித்துள்ளார். 'நாட்டுக் கோட்டைச் செட்டிகள் விபூதி ருத்திராக்ஷ தாரணம் பஞ்சாட்சர செபம் சிவதரிசனஞ் செய்கிறார்கள். அவர்களுள்ளே சிலர் சிவபூசை திருவாசக பூசை செய்கிறார்கள். சிலர் ஞான நூல்களை ஓதியுணர்ந்து துறவறம் பூணுகிறார்கள்'' என்பது நாவலரவர்கள் வாக்கு.

## அந்தணர் ஒருவரின் அரியசாதனை

இற்றைக்கு 670 ஆண்டுகளுக்கு முன் தம்பதேனியாவில் அரசுசெய்த மூன்றாம் பராக்கிரமபாகுவின் அவைப் புலவர் தேனுவரைப் பெருமாள் என்னும் போசராசர். பண்டிதபோசராசர் என வழங்கிய இவர் தம் தந்தையார் பெயர் நிலவும்வண்ணம் அவர் பெயரால் சரசோதிமாலை என்னும் சோதிட நூலினை 934 பாக்களில் செய்துள்ளார். தம்மைவளர் பராக்கிரமவாகு பூபன் அவை எனத் தெளிவாக இவர் பாடலில் வருகின்றது.

★ சத்கரும[illegible]வன் கீழ்மையுறுவதில்லை ★

# இருபெரும் சிவாசாரிய சுவாமிகள்

தமிழ் நாட்டிலிருந்து காலந்தோறும் ஈழநாட்டிற்கு வருகைபுரிந்த சைவப் பெரியார்களுள் சிவாசாரியர்கள் இருவர் வருகை பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளன. பழநி வேதாகம வித்தியாசாலைத் தலைவர் காசிவாசி ஈசான சிவாசாரியர் என்னும் சித்தாந்த சரபம் பெரிய அறிவாளிகளையே தடுத்தாட்கொண்டு சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்திறன் இங்குப் பேசிப் போனார்கள். பென்னம் பெரியவர்களுக்கு இரண்டாம் மூன்றும் தீட்சை புரிந்து மூத்திமார்க்கம் காட்டியுள்ளார்கள். ஆறுமுகநாவலர் திருவாவடுதுறையில் பட்டம் பெற்றுப் பெரும் சிறப்புப் பெற்ற நிகழ்ச்சியைத் தம் பேரனார் நேரிற்கண்ட வண்ணம் கூறக்கேட்ட இவர் அந்த வைபவத்தை இங்கே கூறக் கேட்டதும் நாவலர் பரம்பரையினர் கண்ணீர் வடித்தனர் என்பதைக் கூறவும் வேண்டுமோ.

இவர்களுக்குப் பின்வந்த தற்புருஷ தேசிக சுவாமிகள் மிகுந்த உற்சாகத்தோடு சைவத்துறையினை அநுபவ ரீதியிற் பேசியதோடு, பலருக்குத் தீட்சைகளும் வைத்து ஈடேற்றினார். ஆறுமுகநாவலரவர்கள் செய்த பெரிய புராணச் சூசனம் அவருக்கு மேலிடத்திலிருந்துவந்த திருவருட் பிரசாதம் என்றும், அத்தகைய சூசனத்தை எத்தகைய விவேகிகளும் இதுவரை எழுதத் துணியவில்லை என்று வித்தகமாகப் பேசினார்கள். மேலைப் புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ் நாட்டுச் சேவையைத் திரு. வி. க. அவர்கள்போல் பெருமிதத்தோடும் நன்றியறிதலோடும் பேசிய தேசிகரின் சாதுரியம் பெரிது. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மாயாவாதக் கொள்கையைக் கண்டித்த வைபவங்களை நேரில் விளக்கிய அநுபவஸ்தர் தேசிகர்.

---

## திருக்கைலாயத்....

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தினார். அதனால் மகிழ்ந்த மன்னன் தில்லைநாதத் தம்பிரானுக்கு வேதாரணியத்தில் உப்பளமும் இரேகுச் சுங்கமும் திரவியமும் கொடுத்தார். வேதாரணியத்தில் திருப்பணி வேலைசெய்த தில்லைநாதர் தொடர்பால் அவர் ஊரில் வரணி ஆதீனம் உண்டாகிப் பணி செய்துவந்தது. வரணியாதீனம் திருக்கைலாய பரம்பரையில் வந்த சைவக் குருமார் ஆதீனமாகும். இப் பரம்பரையினர் விளைவேலி. கரணவாய், முதலிய இடங்களில் சரியை, கிரியை, யோகம் வல்லவராய் இருந்தனர்.

ஆறுமுகநாவலருக்குத் திருக்கைலாய பரம்பரைத் தொடர்பு திருவாவடுதுறையில் 1849-ஆம் ஆண்டில் உண்டாவதற்கு முன்னரே அவருக்கு அத்தொடர்பு திருவண்ணாமலை ஆதீனத் தம்பிரான் கனகசபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் வழியில் கிடைத்தது. கூழங்கைத் தம்பிரானிடம் படித்த இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் ஆறுமுகநாவலர் 1836 முதல் படித்தவர்.

ஆறுமுகநாவலர் வழியில் வந்த திருக்கைலாய பரம்பரைத் தொடர்பு, வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணவர்களிலொருவரான புன்னாலைக்கட்டுவன் கணேசையர் அவர்களுக்குக் கிடைத்தது. கணேசையர் அவர்களின் பேரன் முறையான மணிஐயா அவர்கள் அவர் மடியில் விளையாடிப் பாடங்கேட்டு உருவானவர். அந்தவழியாலும் திருக்கைலாய பரம்பரைத் தொடர்பு பெற்றுய்ந்தவர். திருக்கைலாயத் தொடர்பில் வந்த அவரை வணங்குகிறோம். இம்மரபு சனாதனமானது.

---

# உணர்வுப் பாலமாய் அமைந்தவை

இற்றைக்கு எண்பத்துமூன்றாண்டுகளுக்கு முன் விக்டோரியா மகாராணியாரின் மணிவிழாக் கொண்டாட்டத்தின் நினைவாக 1897 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பெற்ற சித்தாந்த தீபிகை என்னும் ஆங்கில ஏடு சமயம், தத்துவம், இலககியம், விஞ்ஞானம் முதலியன சம்பந்தமாக அருமையான கட்டுரைகளை வெளியிட்டு வந்தது. புறநானூறு முதலிய உயர்ந்த இலக்கிய இலட்சியப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பிரசுரித்து வந்தது.

வியாசபகவான் செய்த பிரமசூத்திரத்திற்கு நீலகண்ட சிவாசாரியர் செய்த சிவாத்துவித பாடியத்தின் மொழிபெயர்ப்பும் சித்தாந்த தீபிகையில் ஒழுங்காக வெளிவந்தது. அதனை மகாதேவ சாஸ்திரியார் அருமையாகப் பெயர்த்துதவியிருந்தார்கள். தமிழ்ப் பெருஞானியாராய திருமூலர் செய்தருளிய திருமந்திரத்தின் உபதேசப்பகுதிகள் சைவப் பெரியார் ஜே. எம். நல்லசுவாமிப் பிள்ளை அவர்களால் பெயர்த்தெழுதப் பெற்றுவந்தன. சைவசித்தாந்தம்பற்றிய கட்டுரைத் தொடர் சுவாமி வேதாசலம் அவர்களால் எழுதப்பெற்று வந்தன.

இத்தகைய புகழ்பூத்த சித்தாந்த தீபிகையில் சேர் இராமநாதனவர்களின் தம்பியாராய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இலங்கை வரலாற்றை விரிவாக எழுதிவந்தார். பட்டதாரிப் பையன் எனப் பெயர்பெற்ற மல்லாகம் வி. கனகசபை அவர்கள் பெரிய புராணம், தொல்காப்பியம் சம்பந்தமாக எழுதிவந்தார்கள்.

சித்தாந்த தீபிகையில் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள் கச்சியப்பரின் கந்தபுராணம் பற்றி எழுதியுள்ளார். கலாவினோதர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இலங்கையில் தாவரவுணவு கொள்வோர் தொகை குறைந்து வருவதைப்பற்றி எழுதியுள்ளார். இங்ஙனமாக சித்தாந்த தீபிகை, சைவ சித்தாந்த சமாஜம் போல இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உயிர்ப் பாலமாயிருந்தது.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தாரோடு ஈழநாட்டின் தமிழர் நெருங்கிய தொடர்புகொண்டு நூற்றுக் கணக்கான கட்டுரைகள் எழுதினர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், புன்னாலைக்கட்டுவன் கணேசையர், சுவாமி விபுலானந்தர் முதலானோர் படைப்புக்கள் பல அதில் வெளிவந்தன. தென்னிந்திய சைவசித்தாந்த கழகத்தாரின் செந்தமிழ்ச் செல்வி என்னும் திங்கள் ஏட்டிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரின் தமிழ்ப் பொழில் ஏட்டிலும் எம்மவர் பலர் தொடர்ந்து எழுதி வந்தனர். அவற்றை விரிக்கிற் பெருகும்.

---

★ அன்பும் அருளும் உள்ள செ[illegible]ங்கரிய செயல் ★

# சென்ற நூற்றுண்டில்

## 1. பாடசாலைகள்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் 1801 ஆம் ஆண்டில் இலங்கையில் 170 பாடசாலைகள் இயங்கின. அவற்றுள் யாழ்ப்பாணத்தில் 47 பாடசாலைகள் இருந்தன.

## 2. கஜெற் என்னும் வர்த்தமானி

இன்று வாரந்தோறும் அரசாங்கம் வெளியிட்டுவரும் வர்த்தமானி என்னும் கஜெற் பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழர் ஒருவரால் ஆரம்பிக்கப்பெற்றது. அவர் புத்தளத்தில் கற்பிட்டிப் பகுதியில் வாழ்ந்த சைமன் காசிச்செட்டி என்னும் வைசியராவர். அவரின் அறிவுக் கூர்மையை மெச்சிய குடியேற்று நாட்டு மந்திரியார் அவருக்கு 105 பவுண் சன்மானம் அளித்துச் சிறப்பித்தார். சைமன் காசிச்செட்டி தமிழ்ப்புலவர் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர்.

## 3. சைவாலயங்கள்

தமிழரசர் காலத்தில் கரைநாடெங்கும் சைவாலயங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்து ஊர்மக்களின் வாழ்வில் உணர்வூட்டிவந்தன. போத்துக்கேயர் செய்த கெடுபிடியால் சைவாலயங்கள் தரைமட்டமாய பின் ஒல்லாந்தர் காலத்தில் சைவச் சடங்குகளுக்கும் தடை உண்டாயிற்று ஆங்கிலேயர் காலத்தில் 5-1-1807 இல் தேசாதிபதி தோமாஸ் மெயிற்லந்து என்பார் நல்லூர் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ சீனிவாசனர் பாலசுப்பிரமணியம் என்னும் குருக்களுக்குப் பூசைசெய்யும் நியமனக் கடிதம் வழங்கினுர்.

## 4. பராபத்தியகாரர்

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் மணியகாரருக்கும் விதானைமாருக்கும் இடையில் பராபத்தியகாரர் என்னும் உத்தியோகத்தரை நியமித்தனர். இவ் வுத்தியோகம் நாளடைவில் உடையார் உத்தியோகம் எனப் பெயர்பெற்றது.

## 5. தோற்றவர் வென்ற வைபவம்

தெல்லிப்பழையில் உடையார் நியமனத்துக்கு மனுசேகரர் முதலித்தம்பி என்பாரும் வேலாயுதர் கந்தர் என்பாரும் போட்டியிட்டனர். அரசாங்க அதிபர் தலைமையில் 1822 ஆம் ஆண்டில் தெல்லிப்பழையில் பெரியவர்கள் கையுயர்த்தி ஆதரவு நல்கியபோது கந்தருக்கு 122 பேரும், முதலித்தம்பிக்கு 64 பேரும் கையுயர்த்தினர்; கந்தர் உடையாராக வருவதை விரும்பாத சிலர் குழப்பஞ் செய்தபோது, அரசாங்க அதிபர் தாம் நினைத்தவாறு வேறொருவரை நியமிக்கப்போவதாகக் கூறியதும், கூட்[illegible]நவர் எல்லோரும் முதலித்தம்பிக்குக் கையுயர்த்தியதும் அவரே உடையாரானுர்.

## 6. ஆறுமுகநாவலர் இங்கிலாந்திற் பெற்ற பெரும்புகழ்

வணக்கத்துக்குரிய E. J. றெபின்சன் என்னும் பாதிரியார் தாம் எழுதிய அறிக்கையொன்றில் இலங்கையில் இந்துப்போதகர் என்றமுறையில் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் சைவம் பரப்புகிறுர் என்றும் அவர் பொய் சொல்லாதே, மாமிசம் புசியாதே என்றெல்லாம் பிரசாரஞ் செய்தார் என்றும் எழுதியுள்ளார். இந்த அறிக்கையைப் படித்த லண்டன் மிசனரித் தலைமையகத்தார் நாவலரின் சைவப்பணியை வியந்தனர்.

## 7. தமிழருக்குச் சுபீட்சமும் சோபனமும்

கொழும்பில் 8-10-1851-இல் நடைபெற்ற இராப்போசன விருந்தில் லோட் ஸ்ரான்லி என்னும் பிரபு கலந்துகொண்டார். தமிழரின் சுபீட்சத்துக்கும் சோபனத்துக்கும் தேசாதிபதி அவர்கள் பேசியதற்கு நன்றிகூறிய இளைஞர் முத்துக்குமாரசுவாமி என்பவராவர். இவர் குமாரசுவாமி முதலியாரின் மைந்தராவர். இவர் இளமைத் துடிப்போடு அழகாக ஆங்கிலம் பேசிய அருமையை ஸ்ரான்லி பிரபு வெகுவாகப் பாராட்டினர். அதனுல் தேசாதிபதி அவர்கள் இவருக்கு கொழும்புக் கச்சேரியில் சிவில் உத்தியோகம் வழங்கினுர், இங்ஙனம் பெருமைபெற்றவரே சேர் முத்துக்குமாரசுவாமி. இவர் சேர் இராமநாதனின் தாய்மாமனும், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் தந்தையுமானவர்,

## 8. விசாலாட்சி


விசாலாட்சி, காமாட்சி, மீனுட்சி என்று திருநாமங்கள் பெற்ற அம்பிகையின் திருமூர்த்தங்கள் அருள்பாலிக்கும் திறனை அடியார்கள் நன்கறிவர். இப்பெயர்களைப் பெற்ற மாதர்கள் பலர் நற்பணிபுரிந்த வரலாறுகளும் உண்டு. கொழும்பில் குபேரசம்பத்துடன் அரசறிய வாழ்ந்த ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலியார் காலமானபோது அவரின் மனைவியார் விசாலாட்சிக்கு வயது பதினுருகவில்லை. பெண்ணென்று ஆணென்றுக இருகுழந்தைகள். விதவைக்கோலம் புனைந்த யுவதி இறை விசுவாசமுள்ளவராய்த் தானதருமப் பணிகள் செய்வதில் ஈடுபடுவாராயினர். கொழும்பில் முகத்துவாரத்தடியிலிருந்து பரிசனங்களோடு கதிர்காமத்துக்கு கால்நடையில் யாத்திரைசென்று அன்னதானம் செய்துவந்தார். உப்போடு கூடிய முப்பத்திரண்டு பொருட்களையும் பரிசனங்கள் தோளிலும் தலையிலும் சுமந்துசெல்வது அக்காலத்து நியமம். குழந்தைகள் வளர்ந்து பெரியவராஞர்கள். பெண் பொன்னம்பல முதலியாரை மணந்து மைந்தர் மூவரைப் பெற்றுள். குமாரசாமி, இராமநாதன், அருணுசலம் இலங்கை அரசியலில் பிரகாசித்தனர். ஆண் குழந்தை வளர்ந்து சேர் முத்துக்குமாரசுவாமியாயினுர்.

## 9. சைவப்பிரசங்கம்

இன்று நாடெங்கும் சைவப்பிரசங்கத்துக்குக் குறைவில்லை. நாள்தோறும் எங்கேயாவது ஒரு பிரசங்கம் கேட்கலாம். ஆனுல் 31-12-1847ல் வண்ணூர்பண்ணைச்

(16-ஆம் பக்கம் பார்க்க)

★ ஆற்றல் அதி[illegible]ளவுக்கு அமைதி அதிகரிக்கிறது ★



## பஞ்சதந்திரம்

அறநூல்களைப் படித்தவன்கூட முட்டாளாக இருக்கிறான். யார் செய்கை செய்கின்றானோ அவனே அறிவாளி. நல்ல மருந்தை நினைத்துக் கொண்டால் மட்டும் போதுமா, நோயாளியின் நோய் நீங்கிவிடுமா?

தவளைகள் பறவைகள் நீருள்ள இடத்திற்கு வந்து சேர்வதைப் போல், நட்பும் பணமும் இடைவிடாத முயற்சியுடையவனிடம் வந்து சேருகின்றன. தைரியம், திடநட்பு, நன்றியறிதல் முதலிய அறவழிகளைப் பற்றி நிற்கும் ஒருவன், கஷ்டகாலத்திலும் துயரப்படாமல் உற்சாகத்தோடு திடமான வாழ்க்கை நடத்திவந்தால், ஸ்ரீதேவி தானாகவே அவன் வீட்டைத் தேடி அடைகிறாள்.

கிழவனைக் குமரிமுத்தமிட விரும்பாதது போல், முயற்சியில்லாதவன், சோம்பேறி, திடசித்தமற்றவன், வெளிப்படையாகப் பேசாதவன் இவர்களைச் ஸ்ரீதேவி விரும்புவதில்லை.

பல்லும் நகமும் ரோமமும் வேண்டாத இடங்களில் இடம்பெற்றால் சோபிக்கிறதில்லை.

ஆற்றல் உள்ளவனுக்குச் சொந்த நாடு அந்நிய நாடு என்ற பேதம் இல்லை.

வீரன், அறிவாளி, அழகிய பெண் ஆகியோர் சென்ற இடமெங்கும் சிறப்புப் பெறுகிறார்கள்.

### சென்ற ...

(15-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவன்கோயிலில் நடைபெற்ற சைவப்பிரசங்கம் பெரும் புகழ்பெற்ற பிரசங்கமாயிற்று. அதுவே நல்லூர் ஆறுமுக நாவலர் செய்த கன்னிப்பிரசங்கம், அது அவர் நாவலராவதற்குமுன் சைவம் எனும் செஞ்சாலி வளர்தற்குஆரம்பித்த பிரசங்கமாகும். பிரசங்கங்களில் நல்ல பயன்கண்ட அவர் முழுநேரத் தொண்டுக்காகத் தமது ஆசிரியர் வேலையை விலகிக்கொண்ட நாள் 30-9-1848 என்ப. அவரின் அருமையான பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்த திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள், ஆறுமுகத்தாருக்கு நாவலர் என்னும் பட்டத்தைச் சூட்டி பொன்னாடை போர்த்தார்கள். அப்பொன்னாடை இன்றும் எங்கள் அருஞ்செல்வமாக இருக்கிறது.

## மாண்டூக்கிய உபநிஷதம்

அதர்வ வேதத்திலுள்ளதும் பன்னிரு மந்திரங்களை நான்கு பாகங்களிற் கொண்டதுமான இது, உபநிஷதங்களுள் மிகவும் சிறியது, பெருமைமிக்கது, துறவியர்க்கேற்றது. இதைக் கண்டுபிடித்து முத்தியடைந்தவர் மண்டூகர் என்னும் முனிவராவர்.

தவளை மூன்று முறை தாண்டி நான்காம் பாய்ச்சலில் நீரில் குதிக்கும் என்பர். இடையிலுள்ள இடங்களைத் தவிர்த்தல் மண்டூகப்லுதி எனப்படும். மண்டூகர் முத்திபெறவுதவிய உபநிஷதமாகையால் அவர் பெயரால் மாண்டூக்கிய உபநிஷத் என வழங்குகிறது.

ஜீவான்மா சாக்கிர நிலையிலிருந்து சொப்பன நிலைக்கும் அதிலிருந்து சுழுப்திக்கும் அதிலிருந்து துரியத்திற்கும் தாவிச் செல்வதால் ஜீவனே ஒரு தவளை. ஜீவன் எல்லா நிலைகளையும் தாண்டி ஆனந்த வெள்ளமான பரமாத்மாவினிடத்தில் சேரும் என்பர்.

ஒவ்வொரு உபநிஷத்தின் ஆரம்பத்திலும் ஆதியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்றினாலும் உண்டாகக் கூடிய இடையூறுகள் நீங்குவதற்காகவும் வேதாந்த பாடம் நிறைவேறவேண்டும் என்பதற்காகவும், குருவுக்கும் சீடருக்கும் மனவேற்றுமை வராமலிருப்பதற்காகவும் சாந்தி மந்திரம் முதலிற் கூறப்பெறுகிறது.

### சாந்தி மந்திரம்

ஓம் பத்ரம் கர்ணேபி:
ஸ்ருணு யாமதேவா:
ஓம் பத்ரம் பஸ யே
மாக்ஷபிர் யஜத்ரா:
ஓம் ஸ்திரை ரங்கைஸ்
துஷ்டுவாகும் ஸஸ்தநூபி:

ஓம் வ்யசேம தேவ ஹிதம் யதாயு:
ஓம் ஸ்வஸ்திந இந்ரோவிருத் தஸ்ரவா:
ஓம் ஸ்வஸ்திந: பூஷா விஸ்வ வேதா:
ஓம் ஸ்வதிந; தார்க்ஷயோ அரிஷ்ட நேமி:
ஓம் ஸ்வதிநோ ப்ருஹஸ் பதிர்ததாது:

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓ தேவர்களே! க்ஷேமத்தைக் காதினாற் கேட்கவேண்டும். ஓ பூசிக்கத் தக்கவர்களே! க்ஷேமத்தையே கண்ணாற் பார்க்கவேண்டும். ஸ்திரமான அங்கமுள்ள உடம்புடன் துதித்தல் வேண்டும். ஆயுள் உள்ளவரை தேவர்களுக்கு நன்மையானவற்றைச் செய்தல் வேண்டும். மிக்க கீர்த்தி வாய்ந்த இந்திரன் க்ஷேமத்தைத் தரட்டும். எல்லாம் அறிந்த பூஷா எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும். தடையில்லாமற் செல்லும் சக்கரமுள்ள கருடன் க்ஷேமத்தைச் செய்யட்டும் பிருஹஸ்பதி க்ஷேமத்தைச் செய்யட்டும். மூன்றுவகையான தாபங்களும் சாந்தி அடையட்டும்.

ஆதாரம்: வைதிகதர்மவர்த்தி[illegible]

★ தன்னைத்தானே திருத்திக்கொ[illegible]க்காணுகிறான் ★



# தரிசனம்

## தந்ததம்பி [எம்பி]

இந்துநாகரிகத்தின் சிறப்புக்குத் தத்துவப் பெருக்கமும் ஒரு காரணம் என்பர். தத்துவத்துறையில் தரிசனங்கள் அறிவொளிகாலும் பெருநூல்களாயுள்ளன. பகுத்தறிவாற்றலும் ஆழ்ந்த கல்வியும் கூரிய அறிவுத்திறனும் படைத்த மேதைகளுக்காகவே தரிசனங்கள் செய்யப்பெற்றன. இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாத்திரங்கள் என்பன உள்ளத்தைத் தொடும் வகையில், தரிசனங்கள் அறிவைத் தொடுவனவாகும். அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்தனவாதலால் வைதிக சாத்திரம் எனவும் பெயர் பெறுவனவாகும்.

தரிசனம் என்பது திருஷ்ட் என்னும் பதத்திலிருந்து பிறந்தது. அதன் பொருள் காட்சி என்பதாகும். மெஞ்ஞானிகள் மெய்ம்மை முழுவதையும் ஒருங்கே பார்த்த பார்வை அறிவுக் காட்சி என வழங்குகிறது. அஃது அவர்கள் அநுபவத்திற் கண்ட காட்சியாகும். அஃது ஒருவர் தம்மையும் தமது சூழ்நிலையையும் அறிவதற்கு முயன்று கண்ட அறிவு நாட்டத்தின் அறிவுப் பயன். அது ஞான வேட்கையால் எழுந்த நற்றவப் பயன்.

தரிசனத்தின் துறைகள் பல; அவை ஆய்தரிசனம், ஆக்க தரிசனம் என்னும் இருபெரும் பிரிவுகளில் அடங்கும். அவை விவேகிகளின் அறிவைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. அவை மனக்காட்சிகள் என்னும் அறிவுக் காட்சிகளாகும். தத்துவ ஞானத்தைப் பெரியவர்கள் தரிசனங்கள் என வழங்குவர்.

பலவகையான பிரமாணங்களைக் கொண்டு எய்தப்பெறும் முடிவுகளுக்குப் பொதுப் பெயர் தரிசனம் என வழங்குகின்றது. இந்திய தத்துவ ஞானத்தில் ஆறுவழிகள் கூறப்பெறுகின்றன. இவற்றை ஆறுதரிசனங்கள் என்னும் பொருளில் ஷட்தர்சனுனி என்பர். இவை வெவ்வேருன அறுவகை எண்ணக் கூறுகளாகும். ஒவ்வொரு எண்ணக் கூறும் அதனதன் வழியில் வளர்ச்சியுற்று விளக்கம் பெற்றுள்ளது. ஒவ்வொரு ஏற்பாட்டுக்கும் சூத்திரங்கள் செய்த பெரியார்கள் உளர். இவற்றுக்குப் பாடியகாரரர் விளக்கஞ் செய்தும் உள்ளார்கள். பாடியங்களேயன்றி விருத்தி, வர்த்திகம், வியாக்கியானம், டீகை, டிப்பணி ஆகிய விளக்கங்களும் உள்ளன.

இவ்வாறமைந்த அறுவகைத் தத்துவக் கூறுகளும் அவற்றின் கொள்கைகளுக்குச் சூத்திரஞ் செய்த பெரி[illegible] பெயர்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1: | நியாயம் | — | கௌதம ரிஷி |
| 2: | வைசேஷியம் | — | கணாதரிஷி |
| 3. | சாங்கியம் | — | கபிலமுனிவர் |
| 4. | யோகம் | — | பதஞ்சலி முனிவர் |
| 5: | பூர்வமீமாஞ்சை | — | ஜெய்மினி |
| 6. | உத்தரமீமாம்சை | — | பாதராயனர் |

இவற்றுள் நியாயம் வைசேடியம் என்பன தருக்கம் என வழங்கும். இவற்றையும் இவற்றின் வழி நூல்களையும் அன்னம்பட்டர் என்பார் தருக்க சங்கிரகம் என்னும் நூலாகவும், தருக்க சங்கிரகதீபிகை என்னும் வியாக்கியானமாகவும் இயற்றியுள்ளார். அன்னம்பட்டயம் என வழங்கும் இந்நூலைத் தமிழில் தந்தவர் திருவாவடுதுறை சிவஞான முனிவராவர். இதனை மகாசந்நிதானம் பணித்தருளியவாறு நல்லூர் ஆறுமுகநாவலர் அச்சிற் பதித்துப் புகழ் பெற்றவர்.

இவையிவ்வாருக இந்திய தரிசனங்களை அறிந்த வில்லியம் யோண்ஸ் என்னும் மேற்குத் தேசத்தவர் தங்கள் நாட்டுத் தரிசனங்கள் இந்திய தரிசனங்களை ஒத்துள்ளன என்பர். மேற்குத்தேச தரிசனக் கொள்கைகள் எவை எவை எங்கள் தரிசனங்களோடு ஒத்துப் போகின்றன எனவும் கூறுவர்.

| | | |
|---|---|---|
| நியாயம் | — | பெரிபடெரிக் கொள்கை |
| வைசேடியம் | — | ஐயோனிக் கொள்கை |
| சாங்கியம் | — | இட்டாலிக் கொள்கை |
| யோகம் | — | ஸ்ரோயிக் கொள்கை |
| மீமாம்சை | — | பிளேட்டோவின் கொள்கை |

இங்ஙனமாயின் கௌதமர் அரிஸ்டோட்டிலையும், கணாதர் தேல்சையும், ஜெய்மினி சோக்கிரட்டீசையும், வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பைதாகிரசையும், பதஞ்சலி ஜெனோவையும் பல வழிகளில் ஒத்துப் போகின்ருர்கள் என்பர்.

இவ்வாருக ஒத்துப்போகின்ற மேல்நாட்டுத் தரிசன வரலாற்றைத் தமிழில் தரவல்லார் எங்கள் நாட்டில் முன்வராத குறையை முப்பத்துமூன்று வயது இளைஞன் ஒருவர் சிந்தித்தார். சிந்தனைச் சிற்பியாய இவர் தமது இளமைக் காலத்திலேயே இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையிற் சிறப்புப் பட்டம் பெற்றபின் சட்டம் பயின்று 1951ஆம் ஆண்டிலே அப்புக்காத்தர் ஆனவர்.

கொழும்பில் ஐயா சிவசுப்பிரமணியம் எனவும், திருநீற்றுச் சிவசுப்பிரமணியம் எனவும் அன்பர்களால் மதிக்கப்பெற்ற முதுபெரும் சட்டத்தரணி அவர்களுக்கு 24-10-1924இல் பிறந்த இரட்டையர்கள் அம்பலவாணர் என்பாரும் கதிரைவேற்பிள்ளை என்பாருமாவர். இருவரும் இணைபிரியாது சென் பெனடிக்ற் கல்லூரியிற் கல்வி கற்றபின் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையிற் சிறப்புப் பட்டம் பெற்ருர்கள். இருவரும் சட்டம் பயின்று அத்துறையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பிரகாசித்தார்கள்.

கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமது சிந்தனுசக்தியை வளம்படுத்தித் தத்துவம் பயின்ற பயனை நமக்குத்

(மறுபக்கம் பார்க்க)

★ தூய உள்ளத்தில் [illegible]க்கும் எண்ணம் உறுதியுள்ளது ★

தந்துள்ளார்கள். இவர் 1958ஆம் ஆண்டில் ஈழகேசரிப் பொன்னேயா அவர்களின் நினேவு வெளியீடாக வெளி வரத்தந்த மேல்நாட்டுத் தரிசனங்களின் சுருக்கவரலாறு 237 பக்கங்களேக் கொண்டதாய் மூன்று ரூபாவுக்குக் கிடைத்தது: இவர் முன்னுரை முதல் முடிவுரையீருக முப்பத்தைந்து அத்தியாயங்களில் மேல்நாட்டுத் தரிசன வரலாற்றை நல்ல முறையில் அலசி ஆராய்ந்து எழுதி யுள்ளார். இவர் ஹெகலின் மாணவராய கார்ல்மாக்ஸ் கொள்கைகளேயும் சமூக அமைப்புமுறையில் ஆராய்ந்து விளக்கியுள்ளார். பண்டைக் காலக் கிரேக்கதரிசனம் உரோம தரிசனங்களேயும் விளக்கியுள்ளார். இடைக்கால நிகழ்கால விஞ்ஞான முறைகளேயும் விளக்கியுள்ளார். மனிதாயதம், விஞ்ஞான வாதம், புதுச்சத் வாதம் என் பனவற்றையும் நன்கு எழுதியுள்ளார். இந்நூலில் ஆய் தரிசனம், ஆக்கதரிசனம் என்பன யாவும் வந்துள்ளன.

தத்துவத் துறையில் விற்பத்திமானுய கதிரைவேற் பிள்ளே தமது படிப்பை மேலுந் தொடர்ந்திருந்தால் இன்று தமது துறையிற் பேராசிரியராய்ப் பிரகாசித் திருப்பார். ஆனுல் அவரின் அன்பர்கள் அவுரை 1960ம் ஆண்டில் அரசியலில் ஈடுபடுத்தியபோது, அவர் யாழ்ப் பாணத் தொகுதியில் போட்டியிட்டார்; அக்காலத் தலேவர்கள் இருவர் முறையே 6313 என்றும் 6015 என் றும் வாக்குகள் பெற்றபோது இவர் 5644 வாக்குகள் பெற்ருர்; அரசியலில் பிரவேசித்த இவருக்கு 1961ஆம் ஆண்டில் தடுப்புக் காவல் தண்டனேயும் கிடைத்தது. தடுப்புக்காவல் வாழ்வைத் தவவாழ்வாகவே கொண்ட இவர் அக்காலத்தில் ஓமர்காயம் என்னும் நூலே ஆங்கி லத்திலிருந்து தமிழாக்கம் செய்தார்.


இவ்வாருகக் காலந்தோறும் நல்லவர்களேயே அனுப்பி வந்த கோப்பாய்த் தொகுதியில் இவர் 1965 ஆம் ஆண்டில் 12339 வாக்குகள் பெற்றுப் பிரதிநிதியானுர். அடுத்து 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் 16,428 வாக்கு கள் பெற்றுப் பெருமதிப்புப் பெற்ருர். பின்னர் 1977ஆம் ஆண்டில் பெரிய சாதனேயாக 41824 வக்காளருள் 33,619 வாக்களித்தபோது 25,840 வாக்குகள் பெற்ற தோடு 22353 மேலதிக வாக்குகளால் பெருவெற்றியீட்டி ஞர்.

பாராளுமன்றத்தில் கதிரைவேற்பிள்ளேயின் பழைய பள்ளித் தோழர், சர்வகலாசாலேச் சகபாடிகள், நண் பர்கள் பலர். இவரின் நற்போக்கு அவர்களே வெகுவாகக் கவர்ந்திழுத்தது: தமிழ் இளேஞர்கள் மத்தியில் சின்னண்ணு எனச் செல்லமாக வழங்கப்பெற்ற சிந்தனேச் சிற்பியாயிருந் தார். நீதிமன்றங்களில் வெற்ருரவார்த்தைகள் வீரமுழக் கங்களின்றித் தம் வழக்கை எடுத்துரைப்பதில் அமைதியாகவே இருக்கும் வழக்கம் உள்ளவர்.

கதிரைவேற்பிள்ளே அவர்களுக்கு மில்க்வைற் தொழில கம் என்ருல் ஒரு தனிமதிப்பு. இடையிடை தொலேபேசி மூலம் சுகம் விசாரித்துக்கொள்வதோடு, தொழிலதிபர் கனகராசாவின் சமூகப்பணிகளுக்கு நாளும் உற்சாகம் அளிப்பவர். மில்க்வைற் செய்யும் பனேயபிவிருத்திக்கும் பனேப்பிரசாரத்திற்கும் கதிரைவேற்பிள்ளே பக்கபலமாயி ருந்தவர். ஆண்டுதோறும் 25000 பனம் விதைகள் உபகரிப்பவர்களுள் அவரும் ஒருவர். மற்றவர் வைத்திய கலாநிதி தர்மலிங்கம் ஐயா அவர்கள்.




பனம் விதைகள் தருபவர்களுக்குப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளே அவர்களின் கையொப்பத்தோடு சான்றிதழ் கொடுத்தபோது முதலில் பனேவளம் பெருக்கிய பண்பாளர் என்னும் பட்டம் பெற்றவர் கதிரைவேற் பிள்ளே அவர்களேயாவர். கதிரைவேற்பிள்ளேயின் தூண்டு தலால் அவர் குடும்பத்தார் பனேப் பைத்தியம் உள்ள வராய் எமக்கு ஊக்கமளித்து வருகிருர்கள்.



மில்க்வைற் தொழிலகம் 1927 ஆம் ஆண்டில் குடி சைத் தொழிலாக ஆரம்பித்து நாளும் வளர்ச்சி பெற்று இயந்திரங்கள் பொருத்தப் பெற்றபோது, உள்ளூரில் செய்த சக்தி என்னும் இயந்திரத்தை முதலில் இயக்கி வைத்த கைராசிக்காரன் கதிரைவேற்பிள்ளே அவர்களே யாவர். மில்க்வைற் செய்தியைத் தாம் வரிவரியாகப் படித்துச் சுவைப்பதாகத் தொழிலதிபரை ஊக்கப்படுத்தி வந்தவர் கதிரைவேற்பிள்ளே. அவர் பிரிவு ஆற்ருெணுத்துய ரம் தருவதாகும்: அவர் ஆன்மா சாந்தியடைக. அவ குடும்பம் வாழ்க:

★ பந்தங்களே உண்டாக்குவதும் நீக் மனத்தின்வேலே ★

## கிருஷ்ணன் கிளந்த கீதை



ஆத்மாவிற்கு இந்தத் தேகத்திலே பால்யமும் யௌவனமும் கிழத்தனமும் எப்படியோ அப்படியே வேறு உடம்பிலும் அடையும்; இதையிட்டு ஞானி மயங்கமாட்டான்.

குளிர் வெப்பம் இன்பம் துன்பம் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும்; அவை தோன்றி மறையும் தன்மை உள்ளவை.

சுகதுக்கங்களைச் சமமாகக் கொள்கின்றவன் சாகா நிலைக்குரிய பெரியவன்.

பொய்ப் பொருளுக்கு உண்மை இல்லை; மெய்ப் பொருளுக்கு இன்மை என்பது இல்லை. உண்மைக்கு ஒருவராலும் அழிவு செய்துவிட முடியாது.

ஒருவன் பழைய ஆடைகளைக் கழித்துப் புதிய ஆடைகளை அணிதல்போலத் தேகி ஓர் உடம்பை விட்டு வேறோர் உடம்பை எடுக்கிறது.

தேகியை ஆயுதங்கள் வெட்டுவதில்லை, நெருப்பு எரிப்பதில்லை, நீர் நனைப்பதில்லை, காற்று உலர்த்துவதில்லை. இது புலப்படாதது, விகாரப்படாதது பிறந்ததற்கு இறப்பும், இறந்ததற்குப் பிறப்பும் நிச்சயமாதலால் இவற்றில் விவேகியானவன் துக்கப்படுவதில்லை.

### வஜனம்ருதம்

(சுவாமி கெங்காதரானந்தா)

புனித யாத்திரைகள் ஆலய தரிசனங்கள் போன்றவைகளை இறைவனோடு இணையும் முறையில், திரிகரண சுத்தியுடன் சிறுமைக் குணங்களை நீக்கிச்செய். அழுக்காறுகள் நீங்கும் வண்ணம் அது புனிதமாய் இருக்கட்டும்.

தர்மத்தையுணர்ந்து அதன் வழி நில்லாதவர்க்கு ஞானம் என்பது பிறப்பதில்லை.

தர்ம சிந்தனைக்கு இடமில்லாத நிர்வாகமும், கல்வி முறையும் இருக்குமிடத்தில், எக்காலமும் அமைதி நிலவுவதற்கு இடமில்லை.

தர்மசிந்தனை இல்லாத மக்கள் இருக்குமிடத்தில் எத்தகைய அரசாட்சியும் நிலைத்திருப்பதில்லை.

அரசாட்சியைவிட தர்மம் பெரியது என்று மக்கள் நினைக்கும் பொழுதுதான், அரசாட்சி அதன் உண்மையான குறிக்கோளை அடையும்.

வேற்றுமையில் ஒற்றுமையிருக்கும் இயற்கை இரகசியத்தை அறிந்தவர்கள் உள்ளத்தில் சமரசம் தானாகவே பிறக்கிறது.

## திருக்கேதீஸ்வரத்தில் நால்வர் உரை

சைவத்தில் நால்வர் என்றால் முன்னர் கல்லாலின் கீழமர்ந்து ஆறங்கம் நால்வேதம் சொல்லாமற் கேட்டுணர்ந்த நால்வரையும், பின்னர் சமயகுரவர் என மதிக்கப்பெற்ற திருமுறையாசிரியர் நால்வரையும், அவர்களுக்குப் பின் சித்தாந்தஞ் சொன்ன சந்தானகுரவர் நால்வரையும் வெவ்வேறு வேளைகளிற் குறிக்கும்.

திருக்கேதீஸ்வரத்தில் நால்வர் உரையென நம்செவியறிவுணவு பெற்றநாள் 30-12-1960 ஆகும். அந்நாள் சைவசித்தாந்த சமாஜம் தமது 55-ஆம் ஆண்டு விழாவினை அணிதிரண்டுவந்து கொண்டாடிய நன்னாளாகும்; அன்றி சமாஜத்தார் மூன்றும் முறையாக ஈழத்தில் சைவம் முழங்கிய நாளாகும்.

சமாஜவிழாக்களில் முன்னமே தலைமைதாங்கிய முதிர்ந்த அநுபவம் மிக்க நால்வர் பெருமக்கள் அன்று தத்தம் உரைகளைத் திறம்படவுரைத்தனர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வரவேற்புரை, சுப்பையா நடேசபிள்ளை அவர்கள் சிறப்புரை, தவத்திரு குன்றக்குடி அடிகளார் வாழ்த்துரை, சைவப்பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையுரை. இத்தனை உரைகளும் அன்று பேருணர்வாக அமைந்தன. அந்நாள் ஒரு பொன்னான நாள்.

### சாரங்கியும் தேவாரப்பண்ணும்

தமிழர் கண்ட இசைக்கருவிகளுள் நரம்புக் கருவிகளுள் ஒன்றான சாரங்கி என்னும் கருவி யாழ் இனத்தைச் சேர்ந்தது. பெயரளவில் நிலைத்து உருவளவில் மறைந்து போன உத்தமோத்தமமான இக்கருவியை குப்பிழான் செந்திநாதையர் தமது வேதாகம ஆராய்ச்சியின் இடையே பயின்று திறமை பெற்றவர். ஆறுமுகநாவலர் சிவபூசை செய்யும்போதெல்லாம் அவர் மாணவரான செந்திநாதையர் அருகிருந்து சாரங்சிகிதம் திருமுறை ஓதியவர். இச்செய்தியை ஐயரவர்களே கையறுநிலையிற் கலங்கிப் பாடித் தெரியத்தருகிறார்.

தேவாரம் யான்சொலக் கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்டோ நல்லை நாவலனே.

★ மரணம் என்பது [illegible]ம் உடலுக்கே உரிய மறைவு ★




பாரதநாட்டின் சுதந்திரத்துக்காகப் பல்வேறு பெரியோர்கள் பல்வேறு மாநிலங்களில் பன்முகமாகப் பணி புரிந்தார்கள். பாடுபட்டார்கள். இராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர், இரானடே, பெரோஷ்ஷா மேதா, கோஹலே, சுரேந்திரநாத் பனர்ஜீ, தாதாபாய் நௌரோஜி, விஜயராகவாசாரியா, தின்ஷோவாச்சா, திலகர் பெருமான் முதலாய பெரியோர்களின் திருநாமங்களை எல்லோரும் நன்கறிவர். இவர்களைவிட இன்னும் பலவாய பெரியோர்கள் பாடுபட்டுள்ளார்களாயினும் நீண்ட காலமாகப் பெரிதும் பாடுபட்டவர் காந்தியடிகள்,

40 கோடி மக்கள் 350 ஆண்டுக்காலமாகத் தம் சுதந்திரத்தை இழந்து பரம்பரை பரம்பரையாக அதனை அறியாது வாழ்ந்து பழகியவர்களாதலால் அவர்கள் எல்லோரையும் ஒருமுகமாகத் திருப்புவதற்குத் தேசபிதா கண்ட வழி ஒத்துழையாமை இயக்கமாகும். அமைதியாக எதிர்ப்புத் தெரிவித்தல் என்பது இந்தியப் பண்பாட்டுக்கு அமைவானதும் பிரபுத்தன்மை வாய்ந்ததுமான போக்காகும்.

காந்தியடிகள் தாம் கருதிய வழியைப் பொதுமக்களுக்குப் பழக்குவதற்காகக் கலங்கரை விளக்கம் எனத் துலாம்பரமாய் நின்றார். மலைச்சிகரங்கள் என மக்கள் கூட்டத்தில் எழுந்த மாமேதைகளுள் காந்தியடிகள் இமயமென எல்லோருக்கும் மேலாக எழுந்துநின்று ஒளிவீசினார்.

காந்தியடிகளைக் கண்டு பழகியவர்கள் அவரைத் தொழுது பணிந்து பின்தொடர்ந்தார்கள். அவரை வெறுத்தவர்களும் அஞ்சியவருமான வெள்ளையர்கூட அவரை மதித்து வியந்து போற்றினார்கள். சுதந்திரத்தை விரும்பியவர்கள் எல்லோரும் காந்தியடிகளை நன்கறிந்து மதித்தார்கள்.

## சித்தாந்த வித்தகர்
## க. வச்சிரவேல் முதலியார்

சிவஞானபோதத்திற்குச் சிற்றுரை, பேருரை எழுதிய சிவஞானமுனிவர் வழிவந்த மாணவ பரம்பரையில் சித்தாந்தம் பயின்ற வச்சிரவேல் முதலியார் விஞ்ஞானத் துறையில் பட்டம்பெற்று காஞ்சியிற் கணிதத்துறையிற் பணிபுரிந்ததோடு மெய்கண்ட கழகத்தினரின் சித்தாந்த சாத்திர வகுப்புக்களை நடத்திவந்தவர். திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே என்னும் உண்மையைப் பெருநூலாக எழுதிச் சாதித்ததோடு காசிப் பல்கலைக் கழகத்திலும் சைவத்திறம் பேசியவர். திருப்பாதிரிப் புலியூர் ஞானியார், பழநி ஈசான சிவாசாரியர் முதலிய பெரியவர்களின் வழி சைவம்பயின்று பரப்புபவர்.

திருவருட்பயனை நன்கு பயின்று புத்துரை எழுதி வெளியிட்டவர். அதனைத்தொடர்ந்து ஏனைய சித்தாந்த நூல்களுக்கும் உரை எழுதியவர். சித்தாந்த சாத்திரங்களுள் காலத்தால் முந்தியதான திருவுந்தியார் என்னும் சாத்திரத்தை நன்கு விளக்கி எழுதிய நூல் 1966ம் ஆண்டில் சைவசித்தாந்த ஆண்டுவிழாவின்போது திருசிராப்பள்ளியில் வெளிவந்தது.

கல்லூரிப் பணியினின்றும் ஓய்வுபெற்ற முதலியாரவர்கள் முதுமையிலும் ஏடுகளைக் கைவிடாது தொடர்ந்து ஆராய்ந்தவண்ணமாயிருப்பவர். மதுரையில் காமராசர் பெயராலமைந்த பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் பணியாற்றிவருபவர். சிவபூசாதுரந்தரரான முதலியார் எம்மிடைப் பலமுறை வந்து பேசியதோடு சித்தாந்த வகுப்புக்களையும் நடத்தியவர். முன்னம் அவர் நடத்திய வகுப்பினை யாழ்ப்பாணப் பெரியார்கள் பலர் பெரிய வரப்பிரசாதமாகக் கருதி மாணவராய் ஒழுகிப் பெரும்பயன் பெற்றனர். அண்மையில் முதலியாரவர்கள் - குப்பிழானைச் சேர்ந்த காசிவாசி செந்திநாதையர் எழுதிய நூல்களில் ஆராய்ச்சி செய்வதாகக் கேள்வி. சிவஞானபோத வசனாலங்காரம் என்னும் நூலில் இவர் முயற்சி பெரிது.

## தி. கி. நாராயணசாமிநாயுடு
### உபகாரியும் தொண்டரும் தலைவரும்

சைவசித்தாந்த சமாசத்தோடு தமது இளமைப்பருவத்திலேயே தொடர்பு பூண்ட கிழக்கு மருதூர் தொண்டர் திலகம் தி. கி. நாராயணசுவாமி திரு. வி. க. அவர்களின் சீடர். எனவே இவர் ஆறுமுகநாவலர் பரம்பரை மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் மாணாக்கரின் மாணாக்கர் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. இவர் 1932ம் ஆண்டிலேயே சைவசித்தாந்த சமாசத்தின் இளைஞர் விழாக்களில் தலைமைதாங்கியவர்.

சமாச வெளியீடுகள் பலவற்றுக்குப் பொருளுதவி புரிந்தவர். செந்தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி என்னும் சிறந்த நூல் 522 பக்கங்களில் அழகுற அச்சிட்டு வெளியிட அரும்பொருளீந்தவர். சங்க நூற்புலவர் பெயர்அகராதி என்னும் அரிய நூலையும் வெளிவரச் செய்தவர். கல்வெட்டாராய்ச்சித் துறையை ஆழப்புகுந்து முத்தெடுப்பவர். சைவத்துறையை விடாது அதிற் பெரும்பணி புரிந்து முதுமை கண்டவர்.

பாரீரோவெனப் பெயருஞ்சொல்லார். எந்நாடோவென நாடுஞ்சொல்லா நள்ளிமன்னனின் அடக்கமும் கொடைத்திறனும் இவர்க்கு இயல்பாயமைந்தவை.

### மறைந்த மேதையொருவர்

தெல்லிப்பழையைச் சேர்ந்த குப்பிழான் சுப்பிரமணியர் செல்லத்துரை பண்ணிசை மேதை. தமிழ்நாட்டில் பென்னம்பெரியவர்களிடம் பண்பயின்று விற்பத்திமானாய இவர் 1938ம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பெருவிழாவில் திருமுறையோதி முன்னெவரும்பெறாத தங்கப்பதக்கமும் பட்டும் சான்றிதழும் பெற்றவர்.

★ மனக்கோணல்களை நீக்குபவன் சான்றோனாகிறான் ★



## பண்டிதமணி பகர்ந்தவை

கந்தபுராணத்தில் வரும் காசிபன் உபதேசம் வைதிக சைவசித்தாந்தம். சுக்கிரன் உபதேசம் ஏகான்ம வாதம் எனப்படும் மாயாவாத உபதேசம். சிங்கனிடம் காசிபன் உபதேசமும், சூரனிடம் சுக்கிரன் உபதேசமும் பதிந்தன.

நாஸ்திகம் என இன்று உலாவுவது உலகாயதம் உலகாயதம் மாயாவாதத்தின் தம்பி. நாஸ்திகரல்லாத வியாழபகவான், நாஸ்திகனல்லாத இந்திரனுக்குப் பொய்த் துறவைப் போ… ஒருமுறை உலகாயதம் போதித்ததும் உண்டு.

ஆரியம் அறிவை வெளிப்படுத்தும் பாஷையாயிருப்ப, அறிவின் பயனாய அன்பை வெளிப்படுத்தும் பாஷையாகத் தமிழ் இருக்கும். ஆரியம் தமிழ் என்கின்ற இருமைகளைத் திருமணங்கள் வாயிலாக ஒருமைசெய்து காட்டுவது கந்த புராணம்.

ஆரியம் வேறு தமிழ்வேறு என்கின்ற பிளவை நோயாய் நாஸ்திகமாகிப் பரிணமித்திருக்கிறது. நோய்க் குணமறிந்து ஔசதப்பிரயோகம் செய்யவல்லது அதியற் புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்தபுராணம். கந்தபுராணம் முறையாய் நடந்த காலத்திலே எந்த நோயும் யாழ்ப்பாணத்தை எளிதில் அணுகியதில்லை. யாழ்ப்பாணக் கலாசாரமூலம் கந்தபுராணம்.

❈

## வேதபாஷ்யம் - ஸ்ரீ துர்க்கா சூக்தம்

''கன்னிகையாகவும் குமாரியாவும் உள்ள தேவி உன்னை நன்றாக அறிகிறோம். ஈஸ்வரனுக்காக உண்டானவன் நீ என்பதை அறிகிறோம். உன்னைத் தியானம் செய்கிறோம்''. அப்படிப்பட்ட துர்க்கையானவள் நம்மை ஆனந்தமடையத் தூண்டட்டும்.

## அருள்ஞானம்

சுவாமி விபுலானந்தர் தமிழ்மொழிமூலம் தமிழ் பயின்றவர், தமிழ்மொழிமூலம் தமிழின்பம் கண்டவர். அவர் அண்ணாமலை, பேராதனை ஆகிய பெரும் பல்கலைக்கழகங்களில் முதல் தமிழ்ப்பேராசிரியராய் இருந்தவர். வேதாந்தத்துறையில் மிக உச்சக்கட்டத்துக்குச் சென்றவராதலின் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்கண்டு தெளிவுபெறக்கூறியவர். ஒரும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்துச் சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனருந்திய… வர். சைவசித்தாந்த சமாசத்து 1936ம் ஆண்டு … வில் அருள்ஞானம் பற்றித் தமது தலைமையுரையில் அருமையாகத் தருக்கரீதியாகப் பேசியவர்.

இறைவனின் பெருங்கருணையால் உயிர்களுக்குக் கிடைப்பது அருள். அருளல் இறைவனின் இறுதித்தொழிலாயுள்ளது. அஃது உடலுக்கு உணவுபோல உயிருக்கு இன்றியமையாதது. இறைவனின் கருணைத்திறத்தை உணர்வதே தலையாய ஞானம். அருளல் ஐந்தொழில்களுக்கும் ஆதாரமானது. அருளைப் பெறுவதற்குக் கல்வியினும் தியானம் சிறந்தது. நூலாய்வினும் வழிபாடு சிறந்தது. தியானம் பாவனை சிந்தனை என்பன படிப்படிய… அமைவன. சிந்தனைக்கு ஏதாவதொரு தொடர்பு வேண்டுமாகலில், ஆண்டான் அடிமைத் தொடர்பே அதிகமாகப் பயிலப்பெறுவது. தந்தை மகன் தொடர்பு, தோழமைத்தொடர்பு முதலியனவும் உள்ளன. இத்தொடர்புகளைப்பற்றித் திருவருள் பெற்றுய்திபெறலாம்.

ஆண்டவனின் அருளைப் பெறுவதற்கு அவன் உடமைகளாகிய பிறவுயிர்களிடத்து நாம் அன்புகொள்ளல் வேண்டும். எவ்வுயிர்க்கும் அன்புள்ளவராயின் ஒருவர் இறைவனை அணுகிநிற்பவராவர். ''அன்புசெய்வோர் வசமதாய்ச் சேர்ந்துநிற்போம் உரைசெய்வோம் அவர்முன்னெய்தி அவருளத்துறைவோம் என்றும்'' என்று இறைவன் வாயுசங்கிதையில் அருளியுள்ளார்.

அருள் ஒழுக்கம் பெருகும்தோறும் வெகுளி. வெறுப்பு, அச்சம், கவலை, பொறாமை, அசூயை, துன்பம், மிடி. லோபம் என்பன புகமாட்டா. இறைவனது பேரருள் நம் மனைவருக்கும் என்றும் இருப்பதாக.

❈

## மகாநாயகதேரோ மாதிரி

திருக்கேதீஸ்வரத்தின் கரையோரத்தில் மன்னாரில் செந்தில்நாதன் அரசாங்க உபஅதிபர். நல்லையாதீன சுவாமிகள் தலைமன்னார் வழியாகக் கப்பலேறித் தமிழ்நாடு சென்றபோது செந்தில்நாதன் வைபவங்களுடன் அவரை வழியனுப்பினார். அவற்றைக்கண்ட சிங்கள உத்தியோகத்தர் இவர் யாரென்று கேட்டார்கள். அதற்கு செந்திநாதன் இவர் எங்களுக்கு உங்கள் மகாநாயகதேரோ போலப் பெரியவர் என்றார். இதனை நீங்கள் முன்னமே சொல்லியிருந்தால் நாங்கள் தலைமன்னார் முழுவதும் அலங்கரித்திருப்போமே என்று அவர்கள் கூறினார்கள்.

★ தனது எண்ணத்தை இறைவனிடம் ஒப்பிப்பது ஆத்மசாதனம் ★

## பேராசிரியர் வித்துவான் வெள்ளைவாரணனுர்

ஞானியாரடிகள் என்னும் திருப்பாதிரிப்புலியூர் சண்முக மெஞ்ஞான சிவாசாரியர், தமிழவேள் என்னும் தஞ்சை உமாமகேஸ்வரம்பிள்ளை, பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் முதலான பெரியவர்களிடம் நெருங்கிய தொடர்புகொண்டு உருவான வெள்ளைவாரணனுர் பழகவினியவர், பண்பாடமைந்தவர். இருபத்தேழு பெரியவர்கள் பன்னிரு திருமுறைகள் தந்த முறையினை வரலாற்று அடிப்படையில் மிகப்பெரிய நூலாக அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் வெளியிட்டவர்.

கரந்தை தமிழ்ச்சங்கத்தோடு மிக நெருங்கிய தொ[illegible] புள்ளவராய்த் தமிழ் பொழில் என்னும் திங்கள் ஏட்டின் ஆக்கத்திற்கு அயராது உழைத்துவந்த ஆராய்ச்சியாளர்.

உமாபதி சிவாசாரியர் செய்த திருவருட்பயனுக்கு நிரம்பவழகிய தேசிகர் உரைசெய்தவர். அவ்வுரையைத் தழுவியேசைவப்பெரியார். புலோலிசிவபாதசுந்தரம்பிள்ளை முதலான அறிஞர்கள் உரையெழுதிவந்தார்கள். கிடைத்தற்கரியதான நிரம்பவழகிய தேசிகர் உரையை வெள்ளைவாரணனுர் நன்கு ஆராய்ந்து 1965ல் சைவசித்தாந்த சமாசத்தின் வைரவிழாவின்பேரது சிதம்பரத்தில் வெளியிட்டார்.

விபுலானந்த அடிகள் அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராயிருந்த காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகிய வெள்ளைவாரணனுர் அடிகளாரின் அன்புக்குரிய சீடராயினுர். அடிகளார் அரிதின் ஆராய்ந்து வெளியிட்ட யாழ்நூல் வெளியீட்டைப் பெருவிழாவாகக் கொண்டாட வுழைத்தவர் வெள்ளைவாரணனுர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் திருமுறைப் பெருமை பேசுபவர்.

❋

## ம. பாலசுப்பிரமணிய முதலியார் நினைவு

சமாசத் தலைவர்களிலொருவராயிருந்த ம. பாலசுப்பிரமணிய முதலியாரைத் தற்காலத்து அகத்தியர் என்பர். சின்னஞ்சிறிய உருவத்தில் பென்னம்பெரிய மனிதராய் அதிகார புருடராய். சண்டிப்பான போக்குடையவராய் அன்பினுல் வேலைவாங்குவோராய், சமாசப் பதிப்புக்களின் பதிப்பாளராய், ஆராய்ச்சியாளராய், அரிய பேச்சாளராய், அகமும் முகமும் மலர்ந்தவராய் விளங்கிய அரிய பெரிய இன்பவடிவினர் அவர். சமாசப் பதிப்புக்களில் வரும் ஆராய்ச்சிக்குறிப்புக்களை விரித்தெழுதவல்லவர். தனித்தனி கலாநிதிப்பட்டங்கள் பெற உதவக்கூடியன.

மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா எனவரும் சிவஞானபோதத்தின் ஒரு வரியினை விளக்க அங்காதிபாதத்தில் எத்தனையோ நுட்பங்களை நுணுக்கங்களை அவர் எடுத்துக்கூறினுர் என்று எண்ணும்போது தனு என்னும் உடம்பின் பெருமையை என்னென்பது. உடம்பில் 600 பேசிகளும் 1000 மைல் இரத்தக்குழாய்களும் 16 சதுரடி அகன்ற தோலும் 15 இலட்சம் வேர்வைக்கோளங்களும் 70 கோடி நுரையீரல் அறைகளும் மூன்றுகோடி வெண்சீவ அணுக்களும் அதன் ஐநூறுமடங்கு செஞ்சீவ அணுக்களும் 250000 தலைமயிரும் உள என்றுர். இன்னும் உணவின் சமிபாட்டுக்காக வாயில், வயிற்றில், குடலில் ஊறும் பலவ[illegible]த் திரவங்களையும் அளந்தவர்பாலறிந்து கூறிவிளக்கினுர். தனுவைப்பற்றி இவையும் இவற்றுக்கு அப்பாலும் கூறி விளக்கியவர், தொடர்ந்து கரணம், புவனம், போகம் என்பனபற்றி விளக்கியபோது உலகப்புகழ்பெற்ற விஞ்ஞான மேதை ஈன்ஸ்ரீன் கூறியவற்றிலும் பார்க்க ஆழ்ந்து அகன்று நுண்ணியதாகக் கூறிய மெஞ்ஞானிகள் கூற்றை விளக்கிக் கேட்டோரைப் பிரமிப்படையச் செய்தார். தாம் கூறியது பிடியளவு என்றும் கூருதிருப்பது ஏழுலகளவானது என்றும் அவர் தமது அடக்கத்தைக் கூறியமை நெஞ்சைவிட்டகலாதது.

திருநெறி என்று முற்காலத்திலும் சைவசமயம் என்று பிற்காலத்திலும் பெயர்பெற்ற சமயம் மிகப்பழைய காலத்தில் இந்தியா முழுமையுமேயன்றி, வேறுபல நாடுகளிலும் உலகிலுள்ள பரந்த பகுதிகளிலும் திகழ்ந்தது என்பது நன்கு புலனுகின்றது என்று ம, பா. விளக்கினுர்.

ம. பா. அவர்கள் 1922ம் ஆண்டுமுதல் 1958ம் ஆண்டுவரை சைவசித்தாந்த சமாசத்தின் உறுப்பினராய் செயலாளராய், சித்தாந்தம் ஆசிரியராய், தலைவராய் அரும்பணியாற்றி வழிகாட்டியவர்.

❋

## முருகேசபண்டிதர் நினைவு

யாழ்ப்பாணம் சுன்னுகத்து பூ. முருகேச பண்டிதர் ஆறுமுகநாவலர் அவர்களால் மதிக்கப்பெற்றவர். இவர் பாட்டாலே பேசி பாட்டாலே கடிதம் எழுதுபவர். பாட்டாலே பாடமும் படிப்பித்தவர். ஆறுமுகநாவலர் அவர்கள் சைவப்பிரசங்கங்கள் செய்யும் இடமெங்கும் தாமும் சென்று பிரசங்கத்தின் முடிவில் நாவலர் பேச்சின் சாராம்சத்தை இனிய செய்யுளில் உடனடியாகப் பாடி நிறைவு செய்துவந்தவர்.

அந்தவகையில் இன்று தமிழ்நாட்டில் வாழும் நா. ரா. முருகவேள் செய்துவருபவர். சிலசமயங்களில் தாம்பேசியவற்றை இறுதியில் இரண்டுமூன்று செய்யுள்களில் திரட்டிப் பாடுபவர். கொழும்பு விவேகானந்த சபையின் மணிவிழா 22-4-62ல் நடைபெற்றபோது சேர், கந்தையா வைத்தியநாதன் தலைமையில் தமிழ்ச்சமர்த்தர் என்னும் தலைப்பில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்பற்றிப் பேசிய முருகவேள் முடிவுரையில் சொன்ன பாட்டு இது.

நந்தலில் சீர்க் கொழும்பு
　　நகரின்கண் விவேகா னந்தர்
செந்தமிழ்ச் சபையார் கேட்பச்
　　திருக்கேதீச் சுரநற் ருெண்டர்
கந்தையா வைத்திய நாதர்
　　கவின்பெருந் தலைமை யின்கீழ்ச்
சுந்தரர் பற்றிச் செய்த
　　சொற்பொழி விதுவாம் நன்றே.

★ தன்னைத் தானே வெற்றிகொள்வதே பெரிய வெற்றி ★

## பாலசுப்பிரமணிய முதலியார் பகன்றவை

தொண்டு என்ற சொல்லுக்கே விளைவு என்பது பொருள். நான் எனது என்று தருக்கி நெடுமரம்போல் நில்லாமல், தன்முனைப்பை விளைத்து ஆணவமலத்தைத் தேய்த்து நம்மைச் சீர்பெறச்செய்வது தொண்டு.

ஆசாரியன் என்ற சொல்லின் பொருள் சொல்லிய வண்ணம் செய்பவன் என்பதாகும். ஸ்வயம் ஆசரதே வீரார்ய: தொண்டு செய்வதில் திறமையும் பொறுமையும் பயிற்சியும் அன்பும் நிரம்பவேண்டும். நிரம்பினால் அவர்கள் திருத்தொண்டினில் விளங்குவர். தொண்டர்க்குத் தொண்டராதல் பெரும் புண்ணியம்.

தமிழர் நாகரிகத்தின் குறிக்கோள் அன்பேயாகும். நாகரிகம் என்ற சொல்லுக்கே கண்ணோட்டம், இரக்கம் என்று தமிழன் கண்ட பொருள். தமிழர் வாழ்க்கையிற் சிறந்தது இல்லறம். இது இயற்கை நெறிக்கு முற்றிலும் ஒத்தது. இல்வாழ்க்கையை இல்லறம் என்று அறத்தொடு கூட்டி உரைப்பதன் நுட்பம் ஒன்றே தமிழர் பெருமையை நன்கு விளக்கும். இல்வாழ்க்கை அலைபைச் செலுத்தி அறத்தை வளர்த்தற்குச் சிறந்த சாதனம் என்பது தமிழர் கருத்தாகலின் இதனை இல்லறம் என்றனர்.

❋

## சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

சி. எம். ஆர். என்றும் கோவைகிழார் என்றும் சைவ சித்தாந்த சமாசத்தில் 1936ம் ஆண்டு முதல் புகழ்பெற்று விளங்கிய இராமச்சந்திரன் கோயம்புத்தூர் வைசியர் வீதியைச் சேர்ந்தவர். பேரூர் ஆலயத்தோடும், சாந்தலிங்க அடிகளார் நிலையத்தோடும் உயர்நிலைப் பள்ளியோடும் தொடர்புடையவர். சட்டம் பயின்றவர். பன்மொழிப் புலவர். சமயம் அறிந்தவர், நகைச்சுவையாகப் பேசுபவர் இனியசுபாவமுள்ளவர். பெருந்தன்மையோடு நடப்பவர் பல்நூல்கள் எழுதியவர், சித்தாந்தப் புரவலர், தமிழ்ப் புரவலர், இராவ்பகதூர் என்றெல்லாம் பட்டம்பெற்றவர்,

> "நல்ல பெருந்தகையார் நம்சமாசச் சான்றோர்
> பல்கலை நூல்கள் பயின்றளித்தோர் எல்லையில் சீர்
> கோவை கிழாரின்பம் குலவநன்றே வாழ்கவென
> ஆவல்மிக வாழ்த்துகின்றோம் யாம்",

என்று புலவர் முருகவேள் அவர்கள் கோவைகிழாரை அவர்தம் எழுபத்தைந்தாம் ஆண்டில் வாழ்த்தினர். கோவைகிழார் சித்தாந்தப் பத்திரிகையைப் பத்தாண்டுகள் நடத்திச் சிறப்பித்ததோடு, விழாக்களில் பேசியும் தலைமைதாங்கியும் மகிழ்வித்தவர். ஈழத்திற்கு இருமுறை வருகைதந்து எம்மனோரோடு நெருங்கிப் பழகியவர். இலங்கையைப்பற்றி நூல் எழுதியவர்.

இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளராகப் பெரும்பதவி வகித்த காலத்தில் ஆலயங்கள்தோறும் திருத்தங்கள் செய்வித்தவர். இரண்டாயிரத்துக்கும் அதிகமான கோயில்களைத் தரிசித்து ஆவன செய்தபோதெல்லாம் திருமுறை ஓதுவார்களை நியமித்தும், தலத்தேவாரப் பதிகங்களை சுவர்களில் எழுதிவித்தவர், தலவரலாறு தலபுராணம் முதலியவற்றைப் பதிப்பித்தும், நூல்நிலையங்களை நிறுவச்செய்தும், தேவாரப் பாடசாலைகள் நிறுவச்செய்தும் பெரும்பணி புரிந்தவர்.

கொங்குநாட்டு வரலாறு, கோயிற்பூனை முதலிய நூல்கள் இவரின் ஹாஸ்யப் போக்கில் கண்டனஞ்செய்யும் இயல்பைக் காட்டுவன. சித்தாந்த ஏட்டில் ஒலிபரப்பு என்னும் பகுதியில் இவரெழுதியவை எல்லோருக்கும் ஒரு நல்லபாடம்.

## ஞானியார் சுவாமிகள் நவின்றவை

உலகத்தில் சிறந்த பொருள் அன்பு. தமிழ் அன்புமயமாக இருக்கிறது.

கடவுள் இரக்கமுள்ளவர். நாம் துன்பமுடையவர்கள். ஆதலால் இரக்கமுள்ளவராய இறைவன் சம்பந்தத்தாலேயே நம் துன்பம் நீங்கவேண்டும். நல்வினையின் பயனாகிய சுகத்தையும் தீவினையின் பயனாகிய துன்பத்தையும் சமமாக எண்ணுகின்ற நிலையில் கடவுள் கிருபை வருகிறது.

அடையாளத்திற்காகவும், மங்களமடையவும் பரிசுத்தஞ் செய்துகொள்ளவும், பாதுகாத்துக்கொள்ளவும் விபூதி தரித்துக்கொள்ளுதல்வேண்டும்.

பக்தி என்பது ஞானத்தின் ஒரு பகுதியே. பக்தி செயல்வகையிலும் ஞானம் அனுபவ வகையிலேயும் காணப்படுகின்றன.

குரு என்ற விதையில் லிங்கம் என்ற முளையும் சங்கமம் என்ற மரமும் தோன்றும். குரு லிங்கத்தையும் அடியார்களையும் காட்டுதல்வேண்டும்.

நீரும் அதன் நிழலும் பிரியாதிருத்தல்போலக் கடவுளும் அவர் அருளும் பிரியாது கண்ணுக்குப் புலப்படாதிருக்கும்.

கடவுளின் தயை பூவில் வாசனைபோலும், வைரத்தில் ஒளிபோலும், பாலில் ருசிபோலவும் பிரிக்கமுடியாதபடி இருக்கும்.

உண்மையான கருத்துடையவர்கள் இறைவனை வேண்டி எடுத்துக்கொண்ட எக்காரியமும் கட்டாயம் இனிது நடைபெறும்.

தமிழ் அன்னையின் எண்ணங்கள் எல்லாம் இயற்றமிழ், அவள் பேச்செல்லாம் இசைத்தமிழ். அவள் செய்கையெல்லாம் நாடகத்தமிழ்.

நம்மிடமுள்ள தோஷங்கள் இரண்டு. ஒன்றுமே தெரியாதிருத்தல், ஒன்றை மற்றொன்றாக நினைத்தல், இவற்றை நீக்கவே திருக்கோயில்கள், பெரியார்கள், சாஸ்திரங்கள் ஏற்பட்டன.

படிப்பைவிடக் கேட்டல் உயர்ந்தது. கேட்டபிறகு அதன்வழி நிற்றலே உண்மைப் பொருளைத் தெரிந்து நடந்ததாகும்.

சாதிநூல் உடம்பைப் பொருந்தியது. சமயநூல் உயிரைப்பொருந்தியது. ஆனால் நீதிநூல் இரண்டுக்கும் பொதுவாகப் பொருந்தியது.

நமக்கு உடம்பு ஒரு பொருள். ஈஸ்வரனுக்குக் கருணை ஒரு பொருள். நாம் உடம்பால் அடைவனவற்றை அவர் நமக்கு கருணையாற் செய்கிறார்.

சாஸ்திரவிசாரம், பற்றறல் என்ற இரு சிறகுகள் இருந்தாலொழிய உயிர் என்ற பட்சி சரீரம் என்ற சிறைச்சாலையிலிருந்து நீங்கமுடியாது.

## ச. சச்சிதானந்தம்பிள்ளை நினைவு

சைவப் பெரியாராய், பாடசாலைப் பரிசோதகராய், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளராய், சித்தாந்தப் பத்திராதிபராயிருந்த சச்சிதானந்தம்பிள்ளை நெடியவுருவினர், நீற்றினர், நிரம்பிய அனுபவம் உள்ளவர். சைவக் குழைவு அசைவு, கனிவு நிறைந்த ஈரநெஞ்சினர். மேடையிற் பேசும்போது நாத்தழுதழுக்க மெய்ப்பாடுற்றுச் சைவத்திறம் விரிப்பது அவர் வழக்கம். மருதூர் அம்மையார் என்னும் சித்தர்பால் பெருமதிப்புக் கொண்டிருந்த இவர், அவரின் தெய்விகப் பணிகளைக் கூறியபோது [illegible]யிரம் அவையோர் மெய்மறந்து ஆடாமல் அசைய[illegible] அங்காந்த வாயோடிருந்து கேட்டுவியந்து சிந்தை நிறைவு கொண்டு கண்ணீர்பெருக்கினர். இத்தகைய சுந்தர புருடரான சச்சிதானந்தம்பிள்ளையின் தூயவடிவு சிந்தைவிட்டகலாது.

முன்னர் 1940ம் ஆண்டு மார்கழி மாதத்திறுதியில் சைவப்பெரியார் மு. மயில்வாகனம் அவர்கள் முயற்சியால் நடைபெற்ற அகில இலங்கைச் சைவவாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழாவிற்கு வருகைபுரிந்த [illegible]சிதானந்தம் பிள்ளையவர்கள் தம்முடன் பெருஞ்சொற்கொண்டல் முருகேச முதலியாரையும் அழைத்துவந்தார். அக்காலங்களில் நடைபெற்ற விழாக்கள் பெரிய அளவில் எழு[illegible]சி விழாக்களாக நடைபெற்றதோடு, யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் குதுகலித்த விழாக்களாகும். சச்சிதானந்ம்பிள்ளை மெய்ப்பாடுடன் பேசிய பின்னர் சாமஞ்சாமமாக முருகேச முதலியார் பேசுவதைக் கேட்பதற்கு வீதிகள்தோறும் மக்கட்கூட்டம் நெருக்கமாக நிற்பதுவழக்கம்.

முருகேச முதலியார் இருப்பில் ஆறுமணிநேரம் ஆடாமல் அசையாமல் சைவப்பிரசங்கம் செய்யும்போது இதிகாசங்களான இராமாயணம் பாரதம் என்பன கடல்மடை திறந்தாற்போல் வரும். பாரதத்தில் நல்லாப்பிள்ளை பெருந்தேவனார், வில்லிபுத்தூரர் எங்கெங்கே எவ்வாறெல்லாம் சொன்னார்களோ அவையாவும் அட்சரம் தவறாமல் ஆற்றொழுக்கில் வரும். யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்தபுராணம் எனக்கண்ட முருகேச முதலியார் கச்சியப்பர் கவிநயத்தை வெகுவாகக் காட்டினார். தனக்கும் தமிழ் தெரியும் என்னும் மிடுக்குள்ள ஒருவர் அவரையண்மி, உங்களுக்கு எத்தனை பாடல் மனப்பாடமாயுள்ளன என்று கேட்டபோது அவர் மறந்தவைபோகப் பத்தாயிரம் என்று பதிலிறுத்தார்.

❋

## சிவானந்த ஐயர்

தெல்லிப்பழையைச் சேர்ந்த சபாபதி ஐயர் மைந்தன் சிவானந்தையர், இருபாலை நெல்லைநாத முதலியாரைப் போல எதனையும் ஒருமுறைகேட்டு நினைவிற்கொள்ளும் ஏகசந்தக்கிராகம் உள்ளவர். சென்னை சிதம்பரம் முதலாய இடங்களில் கல்விகற்பித்ததோடு தருக்கசங்கிரகம் என்னும் நூலை வடமொழியினின்றும் மொழிபெயர்த்துள்ளார். புலியூர்ப்புராணம், புலியூரந்தாதி. சனிபகவான் தோத்திரம் முதலியவற்றைத் தமிழிற் பாடியுள்ளார் இவர் காலம் 1873 ... 1916 என்ப.

## திரு. வி. க.

திருவாளர் விருத்தாசல கலியாணசுந்தர முதலி[illegible]ர் தமிழ்ப்பெரியார், சைவப்பெரியார், மனிதருள் தலைவரான பெரியார். அவரை உருவாக்கிய பெருமை புலோலி நகர் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கே உரியது, என் குருநாதன் என்று திரு. வி. க. தம் குருபக்தியைக் காண்பிக்குமிடங்கள் பல. தம் குருவுக்காக அவர் மெற்றிக்குலேசன் பரீட்சையையே புறக்கணித்தவர் என்பது அவர் வாழ்க்கை வரலாறு.

சைவம், சமயம், சமரசம், தமிழ்மொழி, சீர்திருத்தம், கடமை, முன்னேற்றம், அரசியல், பெண்பெருமை முதலிய துறைகளில் பெரும்பணி புரிந்தவர் திரு. வி. க. தமிழுக்கு இலகுநடை கற்பித்தவர். நாயன்மார் திறத்தில் தம்வயமிழந்தவர் அவர். பெண்ணின் பெருமைக்கு மேலிடம் அளித்த அவர் பேசும்போதெல்லாம் பெண்கள் ஆயிரக்கணக்கிற் கூடியிருந்து கேட்டுப்பயனடைதல் வழக்கம்.

திரு. வி. க. மணிவிழா 1943ம் ஆண்டில் சைவசித்தாந்த சமாசத்தினரால் கொண்டாடப்பெற்றபோது மயிலாப்பூர் இளமுருகனார் வாழ்த்துப்பா புனைந்தும் கோயம்புத்தூர் இராமச்சந்திரனார் உரைவளம் சாத்தியும் [illegible]கிழ்ந்து போற்றினர். திரு. வி. க. வேப்பமரநிழலில் நல்லறிவு பெற்ற நலத்தை இராமநாதன் செட்டியாரும் அவர்தம் தெய்வக்கொள்கையை சச்சிதானந்தம் பிள்ளையும், அவர்தம் தொண்டினை நடேசசர்மா அவர்களும் சமயக் கோட்பாடுபற்றி தியாகராய முதலியாரும் விளக்கினர்.

❋

## வைப்புத்தலங்கள்

தேவார முதலிகளின் பாடல்பெற்ற திருக்கோயில்கள் பாடல்பெற்ற தலங்க[illegible] எனவும், ஏனையவற்றுள் தேவாரங்களில் சொல்லப்பட்ட திருக்கோயில்கள் வைப்புத்தலங்கள் எனவும் வழங்குவன.

பாடல்பெற்ற திருத்தலங்கள் போலன்றி வைப்புத்தலங்களின் வரிசைக்கிரமம் வகுத்தறிந்துகொள்வது சிரமமாயிருந்தபோது திரு. தி. க. நாராயணசாமி அவர்கள் அவற்றை அரிதினாய்ந்து நிரைப்படுத்தி சித்தாந்தத்தில் வெளியிட்டார். அன்றி அவரே வைணவத் தலங்கள் என்னும் பெருமாள் கோயில்களின் வரிசையையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். இவற்றுள் பாட்டுப்பெற்றவை பதிகம்பெற்றவை என்பன வெவ்வேறானவையாகும்.

❋

## ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் இருவர்

ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் என்று தீட்சாநாமம் பெற்ற பெரியவர்கள் இருவர். மூத்தவர் தமிழ்நாட்டிற் கருவூரிற் பிறந்தவர். தருமபுரவாதீனத்தில் உருவாகித் தம்பிரானானவர். இளையவர் ஈழநாட்டிற் பிறந்தவர் ஆறுமுகநாவலரிடம் உருவானவர். பெரியபுராணத்திற்கு முதன்முதலாகப் பெரிய உரை எழுதியவர். சைவத்தைக் காத்தவர். கைவிடாதவர்.

★ நல்லவன் எ[illegible]லோருக்கும் உதவிசெய்கிற[illegible] ★

## சிவக்கவிமணி அவர்கள் நினைவு

கோயம்புத்தூர் கந்தசுவாமி முதலியார் மைந்தன் சுப்பிரமணிய முதலியார் இளம்பராயத்தவராயிருந்த காலத்திலேயே அவரை உருவாக்கியவர் யாழ்ப்பாணத்து வைத்திலிங்கம்பிள்ளை என்னும் ஆசிரியராவர், வைத்திலிங்கம்பிள்ளை கணிதத்துறை வல்லவராயினும் தமிழ் சைவம் ஆகியவற்றில் நிறைந்த அறிவுள்ளவர். சுப்பிரமணிய முதலியார் வழக்கறிஞராகிப் பெருவருவாயுடையவராய் வாழ்ந்த காலத்தில் திருக்கோயில் வழிபாட்டில் சிறந்து விளங்கியதோடு பெரியபுராணத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சேக்கிழார் இல்லம் அமைத்துத் திருக்கூட்டம் கூட்டியிருந்தார்; அதனோடு தேவாரப் பாடசாலை நடத்தித் திருவஞ்சைக்களத்தோடு தொடர்பு கொண்டிருந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்து உறுப்பினராயிருந்த காலத்தில் சேக்கிழார் என்னும் பொருள் பற்றி நீண்ட தொடர்ப்பிரசங்கஞ் செய்து அதனை நூல் வடிவில் வெளியிட்டார்; மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமைபற்றியும் எழுதி வெளியிட்டுள்ளார். திருமுறைவல்ல கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரைக் கொண்டு பெரியபுராணப் பிரசங்கம் செய்வித்ததோடு பெரியபுராணத்திற் பைத்தியங்கொண்டவராய் அதற்குப் பாரிய உரையெழுதி முடித்தார்; தமதூரிலுள்ள பேரூர்த் திருக்கோயிலின் பெருந்திருப்பணிகள் செய்வித்துப் பேணி வந்தார்; சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார் எங்கள் நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் இவருக்குச் சிவக்கவி மணி எனச் சிறப்புப்பட்டம் அளித்துப் போற்றினர்; இவர் சைவசித்தாந்த சமாசத்து சித்தாந்தப் பத்திரிகை, கொங்குமலர், செந்தமிழ்ச்செல்வி முதலிய சஞ்சிகைகளில் சைவம் வளர்த்தவர். அப்பரைப்போல எண்பதுக்குமேல் வாழ்ந்த இவர் 1947ம் ஆண்டில் முத்துமாணிக்கவாசகம் என்னும் பூர்வாச்சிரமப் பெயர்கொண்ட தொண்டைமண்டலம் ஞானப்பிரகாச சுவாமிகளோடு யாழ்ப்பாணம் வந்துசைவம் பேசியவை பசுமரத்தாணிபோற் பதிந்துள்ளன.

தாம் பெரியபுராணப் பேருரை எழுதுவதற்கு ஆறுமுகநாவலரின் சூசனமும் ஆறுமுகத்தம்பிரானின் உரைவளமும் யாழ்ப்பாணத்துச் சாமியென்னும் இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரானின் உசாத்துணையும் இன்றியமையாதிருந்தன என்றார். பெரியபுராணப் பேருரை எழுதி நிறைவேற்றிய இவருக்குத் திருவம்பலத்தில் 6-5-54ல் திருமுறை ஞானபானு என்னும் பட்டமும் பொன்னாடையும் வழங்கப்பெற்றன.

இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது திருநெல்வேலியில் ஞானப்பிரகாசத் தம்பிரான் வளவில் ஒற்றுமை நிதி சோமசுந்தரம் அவர்கள் வீட்டில் தங்கியிருந்து ஞானப்பிரகாசத் தம்பிரானின் பணிகளைப் பெரிதும் பாராட்டினார்.

தமது இறுதிக்காலத்தில் தாமும் துறவுபூண்டு வாழ வேண்டும் என்றும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மடத்தில் காவியும் தீட்சையும் மந்திரோபதேசமும் பெற வேண்டுமென்று விருப்பந்தெரிவித்தவர், அவ்வாறே செய்து மதுரையாதீனத்திலே சம்பந்த சரணாலய சுவாமிகள் என்னும் தீட்சாநாமத்தோடு இரண்டாம் பட்டத்தில் இளவரசராயிருந்தார். இவர் 24-1-61ல் பரிபூரணமானதும் திருப்பேரூர்ப் பட்டிவிநாயகராலயத்தின் பின்புறத்தில் சமாதியிருத்தப்பெற்றார்.

## கனகர் வாழ்க

இ. இ. மன்றம் ஈச்சந்தீவு

முதலேழு இடையேழு கடையே ழென்றே
மூவேழு வள்ளல்களைக் கேள்வியுற்றோம்
துவரையில் எவரையுமே கண்டோ மில்லை
இருக்கின்றார் இன்னொருவர் ஈழந்தன்னில்
அதுயாரென் றெவ்விடமும் அலைய வேண்டாம்
அவரேதான் பால்வெள்ளைக் கனகராயர்
எதுவேண்டும் என்றாலும் அதனை ஈவார்
எங்கெங்கே என்றாலும் அங்கே நிற்பார்!

மூவேழு வள்ளல்களும் கனக ராகி
முறைதொடரப் பிறந்தனரா ஈழ மண்ணில்
நாவாலே சொல்லிவர நாட்கள் வேண்டும்
நற்பணிகள் எண்ணிவரக் கணனி வேண்டும்
பாவாலே புகழ்சூட்டப் பலகோல் வேண்டும்
பல்பொருளும் பார்த்துவரப் பலகண்வேண்டும்
ஏவாமல் அனுப்பிவரும் பால்வெண் செய்தி
இதழொன்றே இவர்தொண்டுக் கேற்றசான்றாம்.

ஈழமணித் திருநாடு இவரை யின்னும்
ஈராயி ரம்மாண்டு சென்றபின்பும்
வாழச்செய் சிவதர்ம வள்ள லென்றே
வாழ்த்திவரு மல்லாமல் மறதிச்சேற்றில்
ஆழவிரும் பாதென்றே நம்பு கின்றோம்
ஆசிபல சொல்லுகின்றோம் நாமுமிங்கே
வீழவரும் சமுதாயம் ஒத்து ழைத்தே
வெற்றியினை யடையட்டும் கனகர்வாழ்க!

## நான்காம் முறை

சைவசித்தாந்த சமாசம் நம் ஈழவளநாட்டில் நான்காம் முறையாக நாளது 8-5-81ல் ஆண்டுவிழாக் கொண்டாட வந்துள்ளது. சமாசத்து நற்பணிகளை நாம் பின்பற்றித் தொண்டுசெய்தல் பயனுடையதாகும்.

1. சைவசமய சாத்திர தோத்திர நூல்களை அடக்கவிலைப் பதிப்பாக அச்சிட்டு வழங்கல்.

2. சைவசம்போதினி என்னும் பெயரில் மாதந்தோறும் சஞ்சிகை வெளியிடுதல்,

3. மாதந்தோறும் ஊர்களில் சமயச் சொற்பொழிவுகள் கூட்டங்கள் நடத்துதல்;

4. ஆண்டுதோறும் அகன்ற முறையில் சைவமகாநாடு கூட்டுதல். பன்மாகேஸ்வர ரட்சை என்னும் பழமையான முறையில் அனைவரையும் பணிசெய்யப் பழக்குதல்.

5. துண்டுப்பிரசுரங்கள்மூலம் சமய போதனைகளை நாடெங்கும் பரப்புதல்.

★ பா தங்களுள் மிகவும் கொடி து கீர்த்தி ★



❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

### பனைமரமே! பனைமரமே!

நீவளர்ந்த காரணத்தை நீயாகப் பாடியுள்ளபோதி லும் நம்மவர் உன் பயனை நெஞ்சிற்கொள்ளத் தயங்குகின் றார்கள். பஞ்சம் பட்டினி வந்துற்றபோதெல்லாம் நீ தஞ்சமளித்த பெருந்தன்மையை மறந்துவருகிறார்கள். எங்கள் நாட்டில் உன்தொகை இன்னமும் ஒருகோடியாக வில்லையே என்று நாம் ஏங்கும்வேளையில், தமிழ் நாட்டவர் ஐந்துகோடியாகவுள்ள உன்தொகையினை மேலும் அதிகரிக் கப் பெரும் பிரயத்தனம் எடுத்துவருகிறார்கள். தமிழ்மா நிலத்தில் உன்னைத் தேசியப்பயிராக அரசறியப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். பனைக்கொடி பட் டொளிவீசிப் பறக்கிறது கண்டு உன்னை வாழ்த்தி வணங்கு கின்றோம். நீ வாழ்வாயாக. நின்னைப்புரக்கும் தமிழ் நாட்டரசாங்கம் வாழ்வதாக.

### அறுநூறாண்டுப்பழமை

இற்றைக்கு அறுநூறாண்டுகளுக்கு முன்பின்னாக யாழ்ப் பாணத்தரசர்கள் தமிழகத்துப் பெரும் புலவர்கள் பலரை ஈழத்துக்கு வரவழைத்துப் பெரிதும் ஆதரித்து இங்கே வாழச்செய்தனர். சோதிடம் வைத்தியம் வல்லபுலவர் கள் கூடிச்செய்த செகராசசேகரம் செகராசசேகரமாலை முதலியனவாம். செகராசசேகரமாலை பாடிய சோம சன்மா என்பவர் அரசவம்சத்தவர். அவர் "சேதுகாவ லன் விஞ்சை விஞ்சுசெக ராசசேகரன்" என்று யாழ்ப்பா ணத்து அரசனைப் புகழ்வர்.

### திருக்கோணேஸ்வரர் புகழ்

திருக்கோணேஸ்வரநாதனைப் புகழ்ந்த திருஞானசம் பந்த நாயனாருக்குப் பின்வந்த புலவர்கள் இருவர். கோணா சலபுராணம் கோணேசர் சாசனம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார்கள். சிவநெறித் தவனுளான், முப்புரிநூற் பயன் மூரியதாமன், செப்பருஞ் சைவராசபண்டிதன் என்றெல்லாம் புகழப்பெறும் புலவர் சைவம் பரப்பியவ ராவர்.

### ச. நீ. சிங்காரவேலு முதலியார்

முதுமானிப் பட்டதாரியாய இளைஞர் சிங்காரவேலு முதலியார் பல்லாண்டுகாலமாகச் சமாசத்துப் பொருட் காப்பாளராய்க் கடமையாற்றிவந்தவர். சைவத்திலும் தமிழிலும் பேரார்வமும் பேராற்றலும் வாய்ந்த இவரை தம்நாட்டு நம்பியர் பின்பற்றிச் சைவம் வளர்க்கப் புகின் நன்மை பெரிதாகும்.

## பேராசிரியர் ந. ரா. முருகவேள்

முன்னர் கா. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ, எம். எல். பெற்றுப் பெரும்புகழீட்டிய வழியில் முருகவேள் அவர்கள் எம். ஏ. எம். ஓ. எல். எடுத்தவர். முன்னர் ஜீ. யு. போப் தமிழ் நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவழியில் முருகவேள் அவர்கள் ஆங்கிலப் பாடல் களைச் சந்தம் சீர் குலையாமல் நந்தமிழில் எடுத்த எடுப் பிலே உடனடியாக மொழிபெயர்க்கும் ஆற்றல்வாய்ந்தவர். சைவசித்தாந்த சமாசத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்தம் சித்தாந்தம் என்னும் திங்கள் ஏட்டைத் திறம்பட நடத்தியவர். பின்னர் அரசினர் வெளியிடும் திருக்கோயில் என்னும் திங்களேட்டைத் திறமையுடன் உருவாக்கி வருபவர்.

வரலாற்றுப் பெரும்புலமைவாய்ந்த அடக்கமான அறிஞர். சைவத்தின் நிலையை அருமையாக எழுதிவருப வர். இந்துமத பாடசாலையின் பழைய மாணவரான இவர் சென்னை கிறித்தவ கல்லூரி விரிவுரையாளராயும் இருந்தவர்.

பல்லவர்காலச் சைவம் என்னும் பயன்மிக்க கட்டுரை யொன்றை ஆராய்ச்சிநயம் ததும்ப எழுதியவர். அபி ராமியந்தாதி முதலிய பல்நூல்களுக்கு நுண்ணிய உரை வளம் கண்டவர். ஆண்டில் இளைய இவர் அறிவில் மிக்கநரை கண்டவர். முருகவேள் அவர்களின் கவித்துவத்தையும் மொழிபெயர்ப்புத் திறனையும் விரிக்கிற் பெருகும். அவற்றை இடைநிறுத்தி அவரின் இருதிறமைகளும் இணைந்த ஓர் உதாரணத்தை இங்கே அறியலாம்:

அறிவிற் சிறந்தது ... Rational
காரியமாம் தருக்க நெறியினுக்கேற்றது ... Logical
உலகளாய் ... Universal
ஓங்கும் நிலையி[illegible]து ... Perenial, eternal
நறியவிஞ்ஞான நலத்தது ... Seientific
செய்கைநலம் மிக்கது ... Practical
செறிதரு ... Comprehensive, enclusive
முற்போக்கு ... Progressive
செம்மைத்து ... Liberal, generous
சீர்சைவ சித்தாந்தமே ... Graatifies all kinds mend and souls.

தமிழ்ப் பகுதிகளைக்கொண்டு கூட்டிப்படிக்கும்போது ஓசைமிக்குயர் பாவொன்று பிறக்கிறது. சைவசித்தாந் தத்தின் பெருமையைப் பிறரறியக்கூறும் ஆங்கில பதங்கள் அதன் மொழிபெயர்ப்பாகும்.

### மெய்வல்லுநர் போட்டி

கோண்டாவில் கிழக்கில் நிலவும் நாராயண கிராமாபி விருத்திச் சங்கத்தார் நடத்திய விழாவில் 16-4-81ல் கொடியேற்றிவைத்த தொழிலதிபர் கனகராசா அவர்கள் முற்காலத்து முல்லைநில வாசிகளின் உடலுறுதிப்பயிற்சி களைப்பற்றி விளக்கி உடல்நலம் இல்லாதவர் உலகில் நடைப்பிணம் என்றும் அவர் ஞானம்பெறவும் முடியாது என்றும் கூறி உடலப்பியாசங்களை ஊக்குவித்தார்.

★ உலகில் [illegible]ன்படாதது ஒன்றுமில்லை ★

## இரகுவம்சம்

இற்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் புன்னலைக்கட்டுவன் கணேசையா அவர்கள் தமது புத்துரையோடு வெளியிட்டஇரகுவம்சம் என்னும் காவியம் முந்நூற்றெழுபது ஆண்டுகளுக்குமுன் நல்லூர்த் தமிழ்ச்சங்கத்தில் எழுந்த பெருநூல்களுள் ஒன்றாகும். பரராசசேகர மன்னனின் மருகனாய அரசகேசரி என்னும் இளவரசர் தமிழ் வடமொழி நன்கறிந்த பெரும்புலவராவர். அவர் செய்த இரகுவம்சம் சோழமண்டலத்தில் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் அரங்கேற்றப்பெற்றதாகும். காளிதாச மகாகவி வடமொழியிற் செய்த ரகுவம்சத்தை தமிழிற் பெயர்த்த அரசகேசரி ஒருவழியில் யாழ்ப்பாணக் கம்பராயினார். இங்ஙனம் வடமொழியில் ரகுவம்சம் பாடினார் புகழையும் அதனைத் தமிழ்ப்படுத்தியவர் புகழையும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் தமது சிறப்புப்பாயிரத்திற் குறிப்பிட்டுள்ளார்.

"ஆரியத்திற் புகழ்படைத்த கவிகாளி
 தாசனெனும் அறிஞர் கோமான்
சூரியர்க்கு முதன்மைதரு மரபிரகு
 வமிசமெனச் சொல்லா நின்ற
பேரியலுங் காப்பியமொன் றினிதளித்தான்
 பொன்போலப் பெரிதும் பேணி
ஆரியங்கற் பவரெல்லா மாதியினிற்
 கற்றுணர்வ தந்த நூலே"

அவ்விரகு வமிசமெனு நூலகஞ்சேர்
 பெருமையுட னருமை யாய்ந்து
திவ்வியசெந் தமிழ்ப்புலவ னரசகே
 சரியென்று செப்பும் வேந்தன்
எவ்வெவருந் தமிழ்நாட்டிற் கோரமிர்த
 மிதுவென்ன வினிமை சான்ற
செவ்வியசொற் பொருளமைத்தோர் காப்பியமாய்
 தமிழ்ப்பாவிற் செய்தா னன்றே.

---


### அஷ்டப்பிரகரணம்

சிவாகமங்களின் ஞானபாதப்பொருளை விளக்கும் எட்டுநூல்களைத் தேவகோட்டைச் சிவாகம சங்கத்தார் அச்சிட்ட பெருமையை அறியத்தரும் தி. சி, நாராயணசாமி நாயுடு அவர்கள் அஷ்டப்பிரகரணங்களை அடுக்காக விளக்கியுள்ளார். அவை, தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம். தத்துவத்திரயநிர்ணயம், இரத்தினத்திரயம், யோககாரிகை, நாதகாரிகை, மோட்சகாரிகை, பரமோட்ச காரிகை என்பனவாம்.

---

### வாழ்வின் வசந்தம்

அரசாங்க மருத்துவமாதர் சங்க வெளியீடாக மூன்று மாதங்களுக்கொருமுறை மலரும் பூவின் இரண்டாவது இது. இதன் முதல்மலரை மில்க்வைற் தொழிலதிபர் கைவிசேடமாகப்பெற்று வாழ்த்தியபோது சொன்னவண்ணம் சங்கத்தார் இம்மலரில் நன்றாக வெளியிட்டுள்ளார்கள். வேலணை மேற்கு மருத்துவமாது இதற்குப் பொறுப்பாளியாயுள்ளார்.



### மலைநாட்டுப் பெருவிழா

இலங்கையில் குறிஞ்சிநிலமெனப்படும் மத்தியமாகாணத்து மலைப்பிரதேசத்தில் நாவலப்பிட்டி அழகிய நகரம். அங்கமைந்த கதிரேசன் குமார மகாவித்தியாலய வளாகத்தில் கோயில்கொண்டருளிய விநாயகப்பெருமானுக்குரிய மூலமூர்த்தியையும் எழுந்தருளியையும் உபகரிக்கச்சென்ற மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களை மாண்புமிகு மந்திரிமார் தொண்டமான் அவர்களும், சந்திரா கருணாரத்தின அவர்களும் வித்தியாலய அபிவிருத்திச் சபையினரும் வரவேற்றுக் கௌரவித்தனர்.

---

## புகழ்பூத்த தமிழ்ச்சங்கம்

இன்றைய மாடமதுரையில் 2000 ஆண்டுகளுக்கு முன் பின்னாக முடியுடை மூவேந்தர் காலத்தில் நிலவிய மூன்றும் தமிழ்ச்சங்கத்தின்பின், தமிழ்நாட்டிற் கண்டறிய முடியாவகையில் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் நல்லதொரு நற்றமிழ்ச்சங்கம் நிலவியது. ஆரிய சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு நாட்டையாண்ட காலத்தில் நாயன்மார் கோயிலும் தாமரைக்குளமும் மாடமாளிகையும் சூழவமைந்தது நல்லூர்த் தமிழ்ச்சங்கம் அதில் கவியரங்கேறிய புலவர் பெருமக்கள் பலர் திருவாரூர் முதலான பழம்பதிகளிலிருந்தும் குடிபெயர்ந்திவண் வந்துறைந்து தமிழாய்ந்தனர், கவியரங்கேறிய புலவர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்து அரசர்களும் அரசகுமாரர்களும் மந்திரிகுமாரர்களும் இனிதமர்ந்தனர். இயலிசை நாடகம் என்னும் முத்துறைகளும் வல்ல புலவர்கள் நல்லூரை மொய்த்தனர். மஞ்சும் அஞ்சும் கைப்பரராசசேகர மன்னனெனப் புலவர் ஒருவர் அவன் கொடைத்திறத்தை மேகத்துக்கு அப்பால் மதித்துள்ளார். யாழ்ப்பாணத் தமிழரசர் செய்கையையும் புலவர்கள் பணியையும் புகழும் பாடல்கள் பலவுள்ளன.

பண்ணிற் றேயப் பொருண்முடிப் புக்கட்டிப்
 பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடும்
 ஈழ மண்டல நாடெங்கள் நாடே.
கற்ற நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
 காவி யஞ்சட் கலைக்கட றேய்ந்து
மெற்றை நாளுங்கல் வித்திறம் பார்த்திடும்
 ஈழ மண்டல நாடெங்கள் நாடே

---

★ பெருவாழ்வில் வெற்றி தோல்விகளுக்கு இடமில்லை ★

## பணிசெய்யப் பழக்கியவர்

ஓர் ஊரில் ஒரு ராசாவாம்; அந்த ராசாவுக்கு ஒரு மந்திரியாம் என்று அந்தக்காலத்தில் கதைகள் சொல்லுவார்கள். நல்லையாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் எமக்கு வாய்த்த ஒரு ராசா என்று மில்க்வைற் தொழிலதிபர் கனகராசாவைப்பற்றிக் கூறுவர்; கனகராசா அவர்களின் பணி பன்முகமாக எங்கும் பரந்தனவாயினும் அவர்தம் பணிகள் நல்லையாதீனத்தை மையமாகவும் கொண்டமைந்தனவாகும்.



நல்லையாதீனத்தில் நன்ருகப் பணிசெய்த மில்க்வைற் தொழிலதிபரை, ஆதீன முதல்வர் பட்டங்கள் சூட்டியும் பட்டாடை போர்த்தும், பாமாலை புனைந்து வாழ்த்தியும் ஊக்கப்படுத்துதல் வழக்கம்; சிவதர்மவள்ளல், சிவநெறிப் புரவலர், செந்தமிழன்பர், திருக்குறட்காவலர் போன்ற பட்டங்கள் யாவும் நல்லையாதீன முதல்வரும், மதுரையாதீன முதல்வரும், தொண்டைமண்டலவாதீன முதல்வரும் பிறரும் காலந்தோறும் சூட்டியனவாகும்.



நல்லையாதீன நாயகரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருக்குக் காலந்தோறும் எடுக்கின்ற ஞானப்பால் உற்சவம், திருக்கதவம் திறந்த உற்சவம், குருபூசை யுலா உற்சவம் முதலியவற்றுக்கு வேண்டிய எழுந்த[illegible] திருவுருவத்தை அழகாக வார்த்துக் கொடுத்[illegible]விய தொழிலதிபர் கனகராசா அவர்களை ஆதீனமுதல்வர் தினமும் பாராட்டுதல் வழக்கம். நாட்டில் துன்பமகல[illegible] மனச்சாந்தி நிலவவும் ஞானசம்பந்தப் பெருமானின் கோளறுபதிகத்தைப் பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பப் பணித்தவர் நல்லையாதீன முதல்வர்.

## ஊரறிய, நாடறிய உலகறியவேண்டும்

சைவசமயத்தின் கோட்பாடு, கொள்கை, சித்தாந்தம் முதலியவற்றை ஊரறிய, நாடறிய, உலகறியச்செய்தல் நம் தலையாய கடனுகும்; மறைவாக நமக்குள்ளே மறைத்துவைத்தல் தத்துவத்துக்கு அடாது. நம்மை நாமே வறியவர்களாக்கிக் கொள்ளாமல் நம்சமயத்தை நாடறிய உலகறியப் பரப்புதல்வேண்டும்; கலாநிதி அல்பேட் எயின்ஸ்ரீன்,

"Restricting the body of knowledge to a small group deadens the philosophical spirit of a people and leads to spiritual poverty" என்று கூறியதைக் கருத்திற்கொள்தல் நன்று,

## சித்தாந்த பரம்பரைதானே?

சித்தாந்த பரம்பரை என்ருல் திருக்கைலாய பரம்பரை என்பது பொருள். திருக்கோணமலை மாவட்டத்தில் மாவலி கங்கைக்கரையில் திருக்கரைசை என்னும் திருத்தலம் முன்னுளில் புகழ்பெற்ற சிவத்தலமாகும்; கரைசையம்பதி எனவும் அகத்தியத்தாபனம் எனவும் வழங்கும் இப்பதி, மகாசே[illegible] மன்னனின் கெடுபிடிக்குத் தப்பிப் பறங்கியர் [illegible]ர்வையிற்பட்டழிந்தது. இத்திருத்தலத்திற்குப் புராண[illegible] பாடிய பெரியவர் ஈசானசிவன் மலர்த்தாள் வணங்கியும் கொற்றவன் குடிவாழும் பிரான் சரணத்துறுதிகொண்டும் பாடியதால் இவர் உமாபதி சிவாசாரியர் சீட பரம்பரையினராகலாம் என்பர்;

## சரஸ்வதி சனசமூக நிலையம்

கைதடி மேற்குப் புனர்வாழ்வுக்கான பலவழிகளில் பல்லாண்டுகளாகத் தொண்டுபுரியும் இவர்கள் 10-4-81ல் தங்கள் விழாவின்போது ஏழைகளுக்கு வீட்டுக்கொரு ஆடு கொடுத்துப் புனர்வாழ்வுக்கு வழிகாட்டினுர்கள். உதவி அரசாங்க அதிபர் க. துரைராசா அவர்கள் சமூகத்தில் நடந்தவிழாவில் தொழிலதிபர் கனகராசா அவர்களும் கலந்து உரையாற்றி மரங்கள் விதைகள் நூல்கள் உபகரித்துச் சிறப்பித்தார்;

## வீடுபேற்றில் மலம் உண்டா?

சைவசித்தாந்த சமாசத்தின் பவளவிழாவில் தலைமைப் பேருரை வழங்கவரும் உயர்திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் பேசும்போது உன்னிப்பாகக் கேட்டறியுங்கள்; மரம்முந்தியதா? வித்து முந்தியதா? எனக்கேட்டு வினையின் வந்த உடம்பின் தன்மையை விளக்கிய வித்தகர் இவர்.

★ அடிபணியத் தெரிந்த[illegible]னே பின்னர் ஆளவல்லவ[illegible]கிறன் ★



## இருபதாம் நூற்றாண்டுக் கல்வெட்டு

மூவேந்தரும் பல்லவரும் பிறருமான முடிவேந்தர்கள் முற்காலத்தில் தாம்செய்த திருக்கோயிற் பணிகளின் விபரங்களைக் கல்வெட்டுகளிற் பொறித்து விளங்கவைத்தனர். அந்தவகையில் இலங்கையில் முடிசூடா மன்னனாய் வாழ்ந்து பலவிதமாகத் தொண்டுபுரிந்த சேர் இராமநாதன் அவர்களின் திருக்கோயிற் பணிகள் பல. கொழும்பில் கொச்சிக்கடையில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் சோழர் பணியினைப் போன்றதாகும்.

இராமநாதன் அவர்களுக்குச் சி ம்பரம், இராமேஸ்வரம், பழநி, கோடைக்கானல் என்பன சிந்தையில் இடம்பெற்ற திருவிடங்களாகும். பழநிக்குன்றுகளில் ஒன்றான கோடைக்கானலில் கோயிலமைத்தவர், இராமநாதனவர்களின் பாரியார் லீலாவதி அம்மையாராவர். இத்திருக் கோயிலுக்கு வேண்டிய வருவாய் முதலியனவற்றையும் ஒழுங்காக உபகரித்த பெருமை லேடி இராமநாதன் அவர்களுக்கே உரியதாகும். இவரின் உபகரிப்பினைக் கூறும் செந்தமிழ்க் கல்வெட்டினைப் பிரதிபண்ணித் தந்தவர் அம்பை. இரா. சங்கரன் அவர்களாவர். சங்கரனார் எங்கள் நாட்டிற்கொண்ட மதிப்புக்கு இது எடுத்துக்காட்டாகும்.

பொன்னும் மணியும் பொலிவுறு மிலங்கை
மன்னும் ஈழ மண்டலத் தமிழ்க்குலம்
செய்த தவத்தில் தோன்றிய செம்மல்
பூவுல கெங்கும் பொன்றுப் பெருப்புகழ்
மேவிய சீர்த்தி மேலோன் இராம
நாதன் என்னும் ஞானச் செல்வன்
பழுத்த அன்பில் பழநிக் குன்றினை
வழுத்திய தவத்தில் வழிபட் டருள்பெறக்
கருதி அன்னோன் காதல் தேவி
திருவுடை ஆங்கிலக் குலத்திடை யுதித்துப்
பழவினைப் பண்பால் பரசிவ நெறிபுகும்
விழுமிய லீலா வதியெனும் விமலை
விண்ணனை யாரும் வியக்கும் வியன்மலை
தன்னின் மேகம் தவழும் சோலை
கவின்பெறு காட்சிக் கோடைக் கானலில்
சிவனருள் குமரன் சின்மய குருபரன்
இகத்தும் பரத்தும் எமக்கோ ருயிர்த்துணை
அகத்தும் புறத்தும் இலகுசெஞ் சோதி
அன்பர்கட் கிரங்கும் அறுமுகத் தெய்வம்
 றுதோ ருடும் குறிஞ்சி ஆண்டவன்
 கோயில்கொண் டருள குன்றெலாம் குறிஞ்சி
பூத்துப் பிரசம் பொங்கிய ஆண்டினில்
அத்தி வாரம் அடிப்படை கோலி
சித்திரச் சிற்பம் சிறந்து பிறங்க
செப்பும் கலிஜ யாயிரத் தொடுசேர்
முப்பத் தெட்டாண் டாகிய தாதுவில்
சித்திரா பவுரணை சீர்திகழ் நாளில்
இத்திரு லயம் அமைத்தனன்
சத்திதன் பாதம் சந்ததம் அருள்கவே,

6-5-1936



## இலவசம்

### நாட்டிற்கு நயந்தருவன

மேஜைப்புலோலியூர் திரு. பொ: மாணிக்கவாசகர் (விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்) அவர்களினால் எழுதப்பெற்ற ''நாட்டிற்கு நயந்தருவன'' என்ற விவசாயக் கைநூலை மக்களின் நன்மை கருதியும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டும் இளைஞர் விவசாயக் கழகங்கள், விவசாயப் பண்ணைகள், விவசாயம் கற்பிக்கும் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் போன்ற இன்னோரன்ன விவசாய சம்பந்தமான நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்குகின்றோம். தேவையான நிறுவனங்கள் அத்தாட்சியுடன் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புபவர்கள் எமக்கு முத்திரைச் செலவில்லாத ஒரு வழியைக் கையாண்டு பெற்றுக்கொள்ளவும்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
,,திருஆலவாய்''
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233


★ குழந்தையின் மனதில் எவ்வித கோணலுமில்லை ★



# தொழிலதிபரின் ஈடுபாடு

தொழிலதிபர் க. கனகராசா அவர்களுக்கு இ[...] சோதி சிவானந்த சரஸ்வதி அவர்களிடம் நிரம்பிய பற்று; சுவாமிகள் எழுதிய நூல்கள் அத்தனையையும் எழுத்தெண்ணிப்படித்த பயனால்தாம் உருவானவர் என்பது தொழிலதிபரின் திருப்தி. சிவானந்தர் பெரியவர்.

பன்னூலாசிரியரும் பரமஞானியுமான அப்பைய தீட்சதர் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரின் வழித்தோன்றல்களின் வழிவந்தவர்க[...] வழியில் 8-9-1887ல் தோன்றியவர் சிவானந்தர். பரணிநாளில் தோன்றிய இவர் தரணியெங்கும் பெரும்புகழ் பெற்றார். வெங்கு ஐயர், பார்வதி அம்மாள் தவப்பயனாய் வ[...] இவர் திருநாமம் குப்புசாமி என்பதாகும்.

மருத்துவம் பயின்று 1923ம் ஆண்டுவரை வைத்தியராகப்பணிசெய்த இவரின் சேவை மலாயா நாட்டிற்கும் கிடைத்தது. இமயத்தில் ரிஷிகேசத்தில் 1924ம் ஆண்டில் சந்நியாசம்பெற்ற துறவியாய இவர் பத்தாண்டு தவம் செய்து தம்மைப் பெரியவராக்கினார். பெரியவர் சிவானந்தர் 1932ம் ஆண்டில் தெய்விக வாழ்க்கைச் சங்கத்தை ஆரம்பித்தார். யோகவேதாந்த ஆரண்ய பல்கலைக்கழகத்தை நடத்திப் பலபத்திரிகைகளை வெளியிட்டுவந்தார்.

உலக சமயமகாநாடு ஒன்றை 1953ம் ஆண்டில் ரிஷிகேசத்தில் உச்சமாக நடத்தி உலகப்புகழ்பெற்றார். வெளிநாட்டார் தியானம் பழகவும் ஞானம் பெறவும் இந்தியாவை நாடுவாராயினர். சாதி, மொழி, நாடு எதுவும் பாராது சிவானந்தர் எல்லோரையும் மனிதராக்க முயன்றார். வைத்தியர்கள் பலர் இவருடன் கூடி இலவச சிகிச்சைசெய்து மக்கள் துயர்நீக்கினார்கள்.

சிவானந்தர் பெருமையைச் சீனப்பெரியார் Good man God man என்று போற்றி நூல் எழுதியுள்ளார். சுவாமிகள் வேதாகமச் சார்புடையவர். அந்தச்சார்பில் அவர் எழுதிய நூல்கள் பல. சுவாமிகள் முப்பதாண்டுகள் தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுத்து உய்தியளித்தபின் 14-7-1963ல் பரிபூரணமெய்தினார்.

சுவாமிகள் 1950ம் ஆண்டில் சுற்றுலாச்செய்யப் புறப்பட்டு 8000 மைல்வரை யாத்திரைசெய்து கொழும்புக்கும் வந்தார். சுவாமிகள் உலகத்தவருக்குக் கூறியவை,

Serve, love, give, purify, meditate, realise. God first World next. Yourself last. Worship God in the poor. God is love. Speak the truth. Love everyone. Have Sath Sangh.

# சித்தாந்த தீபிகை

## உண்மை விளக்[கம்]

சித்தாந்த தீபிகை என்பது சைவப் பெரியார் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்கள் நடாத்திய ஆங்கிலப் பத்திரிகை. உண்மை விளக்கம் என்பது அன்னார் நடத்திய தமிழ்ப்பத்திரிகை. சைவசித்தாந்த நூல்களுக்கு உரை எழுதியும், மொழிபெயர்ப்புச் செய்தும் பிள்ளை அவர்கள் செய்த தொண்டு மிகப்பெரிது.

சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயக்கர் அவர்களின் நூல்களாலும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நூல்களாலும் உருப்பெற்ற நல்லசாமிப்பிள்ளை அவர்களின் உரைகளைச் சுன்னாகம் முருகேசபண்டிதர் நுணுக்கமாகப் படித்துத் திருத்தஞ் செய்துகொடுத்தார்.

சித்தாந்த நூல்கள் யாவற்றையும் சிறந்தமுறையில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் பிள்ளை அவர்கள் கொண்ட பெருமுயற்சிக்குத் துணையாயிருந்த மகாதேவ சாஸ்திரிகள் என்பார் பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார் செய்த சைவ பாடியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவினார். அதனை வடமொழியினின்றும் மொழிபெயர்த்துத் தமிழிற் பதித்தவர் காசிவாசி குப்பிளான் செந்திநாதையர் அவர்கள். சித்தாந்த தீபிகை ஆங்கிலேயரிடம் பெருமதிப்புப்பெற்றுப் பதினைந்து ஆண்டுகள் வெளிவந்தது. உண்மை விளக்கம் ஓராண்டு வெளிவந்தபின் ஆதரவின்றி ஓய்ந்தது. மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நாகரிகத்தை ஆங்கிலத்தில் தமிழியன் அன்ரிகுவாரி என்னும் ஆங்கிலப் பத்திரிகை[யி]ல் எழுதிவந்த காலத்தில் நல்லசாமிப்பிள்ளை அவர்கள் நாயன்மார் திறத்தை இந்தியன் பேற்றியற் [எ]ன்னும் பத்திரிகையில் எழுதிவந்தார்.

நல்லசாமிப்பிள்ளை நாவலர் நூல்களால் உருவானதோடு, காசிவாசி செந்திநாதையர், முருகேசபண்டிதர், சபாரத்தின முதலியார் முதலானோரிடம் தொடர்பு கொண்டிருந்தார்.



# திருக்கேதீஸ்வரத்தில் தேரோடும் திருவீதி

இம்மாதம் பதினேழாந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கேதீஸ்வரத்தின் திருவீதிகளில் தேர்கள் புத்தம்புதியனவாய்ப் பொலிவு பெற்று வலம்வரும் காட்சி அற்புதமாக அமையப்போகின்றது. திருவாரூரோ, திருவாலவாயோ, தில்லையோ, திருவையாறோ எனக்கருதும் வகையில் தேர்கள் உருவாகிவிட்டன. அடியார்கள் திரண்டு சென்று கண்டு உய்திபெறுவார்களாக.

★ கடவுளை நம்புப[வ]ன் மனிதனுக்கு அஞ்சுவதில்லை ★

## அகத்தியரும் சிவாலயமும்

அடங்கன்முறை என்னும் மூவர் தேவாரத் திருப்பதிகங்களில் ஒருசிலவற்றைக் கையடக்கமாகத் திரட்டி னப்பழக்கத்துக்கு உதவியவர் அகத்தியமுனிவர் என்றும், உதவப்பெற்றவர் சிவாலயமுனிவர் என்றும் கூறுப. காலத்தால் முற்பட்ட அகத்தியர் இதனைச் செய்திருக்கலாமா என ஆராய்வாரும் உளர்.

இதுபற்றிய ஆராய்ச்சி செய்தவருள் ஒருவரான மு. அருணாசலம் அவர்கள் மிக அருமையான செய்தியொன்றைத் தெரிவித்துள்ளார். இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்குமுன் சித்தாந்த சாத்திரங்களையும் உரைகளையும் ஆராய்ந்த அருணாசலம் அவர்கள் மதுரைச் சிவப்பிரகாசர் உரையில் வெகுவாக ஈடுபட்டார். சிவப்பிரகாசர் குறிப்பிட்ட மேற்கோள் நூல்களுள் திருநெறி விளக்கம் என்பதும் ஒன்று.

திருநெறி விளக்கம் என்னும் நூலின் ஏட்டுப்பிரதி தஞ்சை சரஸ்வதி மகாலில் இருந்ததாக அறிந்ததும் அதனைத் திரு. தி. கி. நாராயணசாமிநாயுடு அவர்களுக்குக் கூறினர். கடலில் மூழ்கி முத்தெடுக்கும் முறையில், அரிய விடயங்களை வெளிக்கொண்டு வரும் நாராயணசாமிநாயுடு அவர்கள் திருநெறிவிளக்கத்தை வெளிக்கொண்டு வந்தார். அதில் 116 பாடல்களும் சைவசித்தாந்தத் திறன்கூறுவனவாகும். இந்நூலைச் செய்தருளியவர் குருவணக்கம் கூறும்போது சிவாலயமுனிவரைத் துதித்துள்ளார்.

"அன்புநிறை குருவருளும் நீறும் உண்மை
அஞ்செழுத்தும் ஆலயமும் அறிவுக் கெட்டா
இன்பமிகுஞ் சிவனுருவுஞ் சென்னி மீதே
இருத்தும்மலர்ச் சேவடியும் இறைவன் தன்னைத்
துன்பமற அர்ச்சிக்குந் தொழிலும் தொண்டர்
தொண்டரடித் தொண்டன்எனும் தொண்டில் வீடும்
தென்பொதியிற் குறுமுனிபால் பெற்ற எங்கள்
சிவாலயமா முனிபாதஞ் சிந்தை செய்வாம்."

திருநெறி விளக்கம் என்னும் நூலை வெளிக்கொணர்ந்த நாராயணசாமி அவர்களை அகத்தியமுனிவர் எனவும் அதனை வெளியிட்ட அருணாசலம் அவர்களைச் சிவாலயமுனிவர் எனவும் கருதலாம் என்பேம்.

## தத்துவ விளக்கம்

காழிக்கண்ணுடைய வள்ளலார் அருளியதாகக் கருதப்பெறும் தத்துவவிளக்கம் என்னும் சைவசித்தாந்தத் தத்துவச் செய்யுள் நூலின் சிறப்பைக்கண்டு குப்பிழான் செந்திநாதையர் அதனை அரிதினுராய்ந்து 1918ம் ஆண்டில் உரையுடன் வெளியிட்டார்கள், மறைஞானசம்பந்தர், நிரம்பஅழகிய தேசிகர், மதுரைச் சிவப்பிரகாசர், நமச்சிவாயத்தம்பிரான், வெள்ளியம்பலத் தம்பிரான் முதலாய பென்னம்பெரிய உரையாசிரியர்கள் ஓரகப்பை முகந்த இந்நூலின் முழுப்பாடல்களைப் பிழையறப் பரிசோதித்து மூலப்பகுதியை யாவரும் படித்தின்புறத்தந்தவர் தி. இ. நாராயணசாமி நாயுடு அவர்களாவர்.

## பெண் பெருமை

அகதாகிறிஸ்ரி என்னும் பெண் 55 ஆண்டுகளில் 70 நவீனங்களும் 15 கதைகளும், 18 நாடகங்களும் எழுதி வெளியிட்டார். அவரின் நூல்கள் வேறு மொழிகளிலும் பெயர்க்கப்பெற்றும், 40 கோடி பிரதிகள் விற்பனையாயின. எலிப்பொறி என்னும் நாடகம் திரையிடப்பட்டு 22 ஆண்டுகள் இடையீடின்றி ஓடிக்கொண்டிருந்தது. அது பத்தாயிரம் முறை காண்பிக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பிரயாணிகள் எலிப்பொறி பார்ப்பதை வெகுவாக விரும்பினர். அண்மையில் அவர் வெளியிட்ட திரைச்சீலை என்னும் நூல் பெரும் புகழீட்டியது.

### ஒழுக்கம்

ஒழுக்கத்தை நன்நடத்தை எனவும் கூறலாம். அது தூய்மையான வெள்ளைக் காகிதம் அல்லது துணிபோன்றது. ஒருமுறை அது மாசுபட்டால் அதன் தூய்மை கெட்டுப்போகும்.

## அருட்திரு தனிநாயக அடிகள்

நுணுவில் கிழக்கிலுள்ள சர்வசாதன சங்க சனசமூக நிலையம் சாவகச்சேரியில் நடத்திய அடிகளார் நினைவுவிழாவில் கலந்துகொண்ட தொழிலதிபர் கனகராசா அவர்கள் அருட்திரு அடிகளாரின் பெரிய படங்களை விநியோகம் செய்து சிறப்பித்தார்கள். அடிகளாரின் படங்களைப் பெறவிரும்புவோர் தபாற்செலவு அனுப்பியோ நேரிலோ பெற்றுக்கொள்ளலாம்.


# இந்துநாகரிகம்

மில்க்வைற் செய்தி ஆசிரியர், சைவசித்தாந்த சமாஜ சைவப்புலவர்

**க. சி. குலரத்தினம் அவர்கள்**

எழுதியது

முதற்பகுதி 12 ரூபா
இரண்டாம் பகுதி 18 ரூபா
மூன்றாம் பகுதி 23 ரூபா

எஞ்சியபகுதிகள் விரைவில் வெளிவரும்.
விபரம் விற்பனை யாவும் தொடர்பு:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## செயல்வல்ல செயலாளர் சங்கரனர்

சைவசித்தாந்த சமாசத்தோடு இருபதாண்டுகளுக்கு மேலாசத் தொடர்புகொண்டு உதவிச் செயலாளராக ஆரம்பத்தில் பணிபுரிந்துதவிவந்த வித்துவான் அம்பை சங்கரனர் இன்று சமாசத்தின் முதுகெலும்பு என்பேம்.

இவர் எமக்குப் புதியவரல்லர்: இருபதாண்டுகளுக்கு மூன் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டின் இளைஞர் பகுதிக்குத் தலைமைதாங்கி ''அம்பலத்தாடியை அடியேன் மறந்துய்வனோ'' என்று தெ... ங்கிப்பேசியவர். கந்தழி, இயவுள், எண்குணத்... செம்பொருள் முதலிய தொடர்களை இளைஞர்களு... விளங்கவைத்தவர். சைவசமய அடிப்படைக் கருத்துக்களைப் பாடநூல்கள்மூலம் பரப்புதல்வேண்டும் என்று குரலெழுப்பியவர்.

சைவசித்தாந்த சமாசத்தின் குரலான சித்தாந்தப் பத்திரிகையில் உதவிப்பத்திராதிபராயும் இருந்த சங்கரனர் பணி பெரிது. எங்கெங்கே விழா நடந்தாலும் அங்கெல்லாம் விரைந்து விழாநிகழ்ச்சிகளில் முத்துப்பொறுக்கி வருவர் இவர். இவர் பொறுக்கிவந்த முத்... மணியும் சித்தாந்தப்பத்திரிகையில் குப்பையாயின. அந்தக் குப்பையில் புரண்டவர்களுக்குச் சித்தாந்தத்தின் அருமையும் அம்பை சங்கரனரின் பெருமையும் நன்கு புலனுகுமன்றே.

## யாழ்ப்பாணத்தரசு

இங்கிலாந்தில் ரியூடர் வம்சத்து வந்த ஹென்றி என்பார் 1485ம் ஆண்டில் நிலையான அரசினை நிறுவுவதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தரசு நிலைபெற்றிருந்தது.

படைப்பலம் வாய்ந்த பறங்கியரான போத்துக்கேயர் 1505ம் ஆண்டில் இலங்கைக் கரைநாடுகளில் உலாவிய போதிலும் அவர்களால் 1621ம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தை அசைக்கமுடியவில்லை.

யாழ்ப்பாணத்தரசர் வடக்கில் பெரு நிலப்பரப்பினை ஆண்டதோடு கடல்கடந்து இராமேஸ்வரத்தையும் பரிபாலித்தனர். இராமேஸ்வரத்துப் பூசையாதியனவுக்கு யாழ்ப்பாணத் தீவுகளிலிருந்தே நெய், தயிர், பால், பூ ஆதியன போய்க்கொண்டிருந்தன.

இராமேஸ்வரத்து மாமணியை முதலில் வணங்கியபின்னரே சம்பந்தரும் சுந்தரரும் ஈழத்துத் திருத்தலங்களுக்குத் திருப்பதிகங்கள் பாடினர். ஈழத்தரசர்களின் உபகரிப்புகளே இராமேஸ்வரத் திருப்பணிகளில் முதலிடம் பெற்றுள்ளன. ஈழத்துத் தலைசிறந்த அரசியல் தலைவரான சேர் இராமநாதன், இராமேஸ்வரத்துறை இறைவன் திருவருளால் பிறந்தமையால் இராமநாதன் எனப்பெயர்பெற்றார்.

## அளவெட்டி தந்த அபூர்வ மனிதர்

யாழ்ப்பாணத்து அளவெட்டியூர் அன்றுதொடக்கம் செந்தமிழ் சைவப்பண்ணையாகவே திகழ்ந்துவருகிறது. மெஞ்ஞானி என்றும் வறுத்தவித்து என்றும் அதிமனிதன் என்றும் அவரை அறிந்தவர்கள் மதித்துவந்த ஒருவர் விசேட ஆற்றலும் சமயஞானமும் பொருந்தியவராய் அதிவிவேகியாய் இருந்தார். அவர் அந்தர்முகநோக்கு ளவராய். உட்கரணங்களைச் சுத்திசெய்வதிலே காலங்கழி... தவர், சைவநெறிநின்று வாழ்ந்தவர். உலகத்திருந்... ம் பற்றற்றிருந்த பண்புடையாளர் அவர். அவர் நண்பர்கள் மத்தியில் சேர்ந்தும் சோராமலிருந்தவர். பயனில் சொல்லறியாது சிந்தனையில் ஆழ்ந்திருந்தவர். அவரை ஒரு சமயி என எல்லோரும் மதித்தார்கள். அவர்தம் கடமைகளைச் செய்வதற்கு இந்த உலகத்துக்கு இடையிடை இறங்கிவருபவர், இணங்கி நடப்பவர் என்றும் கடமையைச் சரிவரச் செய்தபின் மீண்டும் தனது சிந்தனுவுலகுக்கு மீள்பவர் என்றும் மனோதத்துவ நிபுணரான கலாநிதி கு சிவப்பிரகாசம் அவர்கள் கருதினர். மௌனதவ முனியாயிருந்த இவர் இருந்த இடத்திலேயிருந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டதாரியானவர். இருபத்தேழு ஆண்டுகள் ஆயிரக்கணக்கான சைவாசிரியர்களை உருவாக்கியவர். அவருடைய திருநாமம் பொ. கைலாசபதி அவர் காலம் 9-6-1902 — 26-11-1961.

## தெல்லிப்பழையும் தேவியும் வாழ்க!

பறங்கியரின் பின்வந்த உலாந்தாக்கள் ஆட்சியில் 1789-ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் ஓரளவு சமயவழிபாடாதியன செய்வதற்குச் சைவசமயத்தவருக்குச் சுதந்திரங்கிடைத்த போது, நாட்டின் நிலைமையைத் தெல்லிப்பழை தந்த பள்ளுப்பிரபந்தம் கூறுகின்றது.

மாவிட்டபுரத்துச் சின்னக்குட்டிப்புலவர் செய்த தண்டிகைக் கனகராயன்பள்ளு தெல்லிப்பழையை மையமாகக் கொண்டது. அக்காலத்துச் சைவாசார நிலைமையைக்கூறும் பாடல்களிலொன்று படித்தின்புறத்தக்கது.

மருவும் ஐந்தெழுத் தும்வளர் சைவமும்
 மறையும் நீதியும் வாய்மையும் ஓங்கிடத்
திருவெண் ணீறும் அறநெறி யும்வளர்
 தென்கா ரைவள நாடெங்கள் நாடே.

அல்லிமலர் வல்லியுறை தெல்லிநகர்ச் சனமும்
பங்கமான சங்க தோங்கிய வாவிமேவிடு
தெல்லிப்பழையும், வாய்ப்பான புகழ்செறியும்
யாழ்ப்பாணநகரும் வரிசையும் முன்னீடும்பெற்று
வாழ்க! வாழ்க!! என்று சைவசித்தாந்த
சமாஜமும் மில்க்வைற் தொழிலகமும் வாழ்த்து
(கின்றன.

''வாழ்க வளமொடு சைவசித் தாந்தமும்
வாழ்க தளமொடு மாநாட்டின் தலைவரும்
வாழ்க வந்தென்றும் வழிபடும் அடியார்கள்
வாழ்க செந்தமிழ் வண்மையை தாகவே.''

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் ...ல்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்...வர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா தே... பி. ...ர்க... கௌரவ ஆசி...ர்: திரு; க. சி. குலரத்தினம் 1-5-81.




மில்க்வைற்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நல்லாதரவு தருகின்ற உங்கள் எல்லோருக்கும்
எங்கள் இதயபூர்வமான

நன்றி

வணக்கம்

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். (இலங்கை) தொலைபேசி: 70